டாக்டர். மு. வரதராசன்,
எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி., டி. லிட்
தமிழ்ப்பேராசிரியர்
19, செல்லம்மாள் தெரு,
சென்னை-30



# திக்கற்ற சிறுவன்

(ஆலிவர் டுவிஸ்ட்)

# திக்கற்ற சிறுவன்

(ஆலிவர் டுவிஸ்ட்)

தமிழ்த் துணைப் பாடப் புத்தகம்

மூலம் :

சார்லஸ் டிக்கன்ஸ்

தமிழில் :

தே. வீரராகவன், எம். ஏ.

LIBRARY

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை-1.

மூன்றும் பதிப்பு : மே, 1967
நான்காம் பதிப்பு : மார்ச்சு, 1968

விலை ரூ. 1-20

10·9 கி. கி. வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டது.

MARUTHY PRESS, 83, Peters Road, Madras-14.

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | ஆலிவர் பிறப்பு | ... | 1 |
| 2. | பாதுகாப்பு விடுதியில் | ... | 3 |
| 3. | புத்திடத்தில் | ... | 7 |
| 4. | வெளியேறல் | ... | 11 |
| 5. | தஞுக்கன் வலையில் | ... | 16 |
| 6. | சிறைப்படலும் விடுதலையும் | ... | 21 |
| 7. | உருவப்படம் | ... | 29 |
| 8. | ஆலிவரைத் தேடல் | ... | 32 |
| 9. | கிரிம்விக் வருகை | ... | 35 |
| 10. | ஆலிவர் கடத்தப்படல் | ... | 40 |
| 11. | மீட்டும் திருடர்கள் கூட்டத்தில் | ... | 43 |
| 12. | பொய்யினுக்கு விலை | ... | 45 |
| 13. | திட்டம் உருவாதல் | ... | 49 |
| 14. | பில்ஸ்கைஸ் வீட்டில் | ... | 51 |
| 15. | தோல்வியுற்ற முயற்சி | ... | 54 |
| 16. | இரண்டாவது விடுதலை | ... | 57 |
| 17. | பேகின் தடுமாற்றம் | ... | 60 |
| 18. | ஆலிவர் பாதுகாக்கப்படல் | ... | 64 |

19. அன்புடையாரிடையில் ஆலிவர் ... 68

20. ஒற்று வேலை ... 71

21. மறைவு வெளிப்படல் ... 77

22. பிரிந்தவர் கூடினார் ... 85

23. ஒற்றுடல் ... 88

24. சாவின் கரங்களில் ... 96

25. வினை சூழ்தல் ... 102

26. மாங்க்சு பிடிபடல் ... 106

27. துறை வாழ்வின் மறைவு ... 109

28. இன்பத்தின் எல்லையில் ... 114

# 1. ஆலிவர் பிறப்பு

சென்ற நூற்றுண்டின் தொடக்கத்தில், இலண்டன் மாநகருக்கு அணித்தேயுள்ள ஒரு சிறு நகரில் ஏழைகள் பாதுகாப்பு விடுதி ஒன்றிருந்தது. உழைக்க உடல் வன்மையிருந்தும் பாடுபட விரும்பாமல் சோம்பித் திரிகின்றவர்கள், திக்கற்றவர்கள், உடற்குறை பட்டவர்கள் போன்றவர்களிடம் அவரவர்களுக்குத் தக்க வேலை கொடுத்து வேலை வாங்கவும், அவர்களுக்கு உண்டி, உடை, உறையுள் போன்றவற்றை யளித்து அவர்களைப் பேணவும் அரசியலாரால் அமைக்கப்பட்ட விடுதியாகும் அது. ஒரு நாளிரவு, அந்நகரின் தெருவோரத்தில் கேட்பாரற்றுப் படுத்துக்கிடந்த நிறை கர்ப்பிணி யொருத்தி நகராட்சி மன்றத்தின் அலுவலர் ஒருவரால் அவ்விடுதியில் சேர்க்கப்பட்டாள். சேர்க்கப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம், அவள் ஓர் ஆண்மகவினை ஈன்ருள். தோலும் எலும்புமாய்த் தோன்றிய அவளுக்குப் பேசக்கூடத் திறனில்லை. வாழ்வுக்கும் சாவுக்குமிடையே போராடிக் கொண்டிருந்த அவள், குழந்தையின் அழுகுரல் கேட்டு, மகிழ்ச்சி மீதூரப் பெற்றவளாய், அருகில் நின்றுகொண்டிருந்த

மருத்துவரைப் பார்த்து, ஈனக் குரலில், "ஐயா! என் குழந்தையை என் கையிற் கொடுங்கள். அதனைக் கண்ணுற் கண்டுவிட்டுச் சாகிறேன்" என்று கெஞ்சினுள். அவளிருந்த நிலையில், அவளால் குழந்தையை வாங்கவும் முடியாது, கைகளில் தாங்கவும் முடியாது என்பதனை நன்கறிந்திருந்தும், சாகும் தறுவாயிலிருக்கும் ஒரு தாயின் கடைசி விருப்பத்தை மறுக்கத் துணிவில்லாத மருத்துவர், குழந்தையை யெடுத்து அவளிடம் கொடுத்தார். படுக்கையை விட்டெழ முடியாமல் எழுந்து, நடுங்கும் தன் கைகளை நீட்டிக் குழந்தையை வாங்கினுள் தாய். கண்களை அகல விரித்துக் குழந்தையைப் பார்த்தாள். அப்போது அவள் கண்களில் ஒரு புத்தொளிகூட வீசியது. தாயன்பில் குழந்தையை முழுக்காட்டி, மார்புடன் அணைத்தாள். வற்றி வெளிறிட்டிருந்த தன் உதடுகளைக் குழந்தையின் கன்னங்களிற் பதித்து முத்தங்கள் கொடுத்து, "என் கண்ணே! என் செல்வமே!" என்று கொஞ்சினுள்.

மருத்துவர், குழந்தையை அவள் கைகளிலிருந்து வாங்கிக்கொண்டதும், தாய். படுக்கையில் சாய்ந்தாள். உடனே அவள் கண்கள் மூடிக்கொண்டன. வாயும்அடைபட்டது. அன்பினுலேற்பட்ட அதிர்ச்சியின் விளைவா அது? அல்லது சாவின் இறுதித் தாக்குதலா? இரண்டுமா? உண்மை யெதுவாயினும், மூடிய அவளது கண்கள் மீண்டும் திறந்தில; "ஐயோ! பாவம்! அன்னை போய்விட்டாள். எஞ்சியது இந்த ஏழைக் குழந்தைதான்" என்றுர் மருத்துவர்.

இதைப் போன்று எத்தனையோ சாவுகளைத் தம் வாணுளில் கண்டு கண்டு மரத்துப்போன மருத்துவரின் உள்ளமும் அப்போது உருகிவிட்டதென்பதனை அவரது கம்மிய குரல் எடுத்துக் காட்டியது.

அவள் யார்? எங்கிருந்து அங்கு வந்தாள்? எங்குப் போகப் புறப்பட்டாள்? என்ற வினுக்களுக்கு விடைகள் காண்பதரிது. குழந்தை பிறந்த நாளேயும் கோளேயும் குறித்து வைக்கத்தான் யாருக்கு அக்கறை?

இந்தவிதமாகப் பூமியில் தோன்றிய ஆலிவர் டுவிஸ்ட்—குழந்தைக்குப் பாதுகாப்பு விடுதியினரால் வைக்கப்பட்ட பெயர் அது—தான் பிறந்த சிறிது நேரத்துக்குள், திக்கற்றவன் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டு, இரக்கமற்றவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும், அடிக்கும் உதைக்கும் உடம்பட்டு, பசிக்கும் பட்டினிக்கும் ஆளாகி, ஏழைகள் பாதுகாப்பு விடுதியில் வளரலானுன்.

## 2. பாதுகாப்பு விடுதியில்

“ஏழையென்ருல் மோழையும் பாயும்” என்பது பழமொழி. அதனுடன், அவர் திக்கற்றவராகவுமிருந்துவிட்டால் கேட்க வேண்டாம். நாட்டுக்கு நாடு, ஊருக்கு ஊர், மக்களது பழக்க வழக்கங்களில் மாறுபாடுகளும் வேறுபாடுகளும் காணப்படலாம். அவையெல்லாம் தோற்றத்தில் மட்டும் காட்சியளிக்கும் வேற்றுமைகளே. ஆனுல் மனித வுள்ளம் மட்டும் எவ்விடத்தும் கிட்டத்தட்ட ஒரே பான்மையாகத்தானுளது என்பதற்கு எல்லா நாட்டு வரலாறுகளும் சான்று பகரும். ஏழைகளேயும், திக்கற்றவர்களேயும் மனித இனம் எங்கும் ஒரே படியில் தான் வைத்துக் கவனித்து வந்திருக்கின்றது. அவர்கள், சமுதாயம் என்ற இயந்திரத்தால் கோதென்று வெளித்தள்ளப்பட்ட சக்கைகள். அவர்களுக்குக் கட்டுப்பாடு, ஒழுக்கம், சான்ருண்மை போன்ற நற்பண்புகள் புறம்பானவை என்றே இன்றும் இச் சமுதாயம் உறுதியாக நம்புகிறது.

இத்தகைய சமுதாயத்தின் இரக்கத்துக் கிலக்காக விடப்பட்ட ஆலிவர், தனது பத்தாவது ஆண்டினை எட்டுவதற்குள் எத்தனையோ ஏழைகள் பாதுகாப்பு விடுதிகளைப் பார்த்துவிட்டான். ஒவ்வொரு விடுதியிலும், அவனடைந்த இன்னல்களையெழுதின் அவை துன்பியற் காவியமாய் அமையும். பாதுகாப்பு விடுதியா அது? பாதுகாப்பு விடுதி என்ற அழகிய பெயரைச் சூட்டி, மறைவில் மறச் செயல்களை வளர்க்கும் பண்ணை! பேராசைப் பேய்கள், கூத்தாடும் குகை; அரசியலாரின் உதவி பெற்றும், அனாதைகளின் வயிறுகளை வற்றப்போட்டுத் தங்கள் பாழ் வயிறுகளை நிரப்பிக்கொள்ளும் வன்னெஞ்சக் கயவர்களின் கள்ளச் சந்தை. இத்தகைய இடத்தின் இரும்புப் பிடிப்புகளில் அகப்பட்டும், ஆலிவர் இறவாமல் உயிர் தப்பிப் பிழைத்தது, திக்கற்றவர்களின் துயரங்களை—கண்ணீரில் வளர்ந்த வரலாறுகளை—எதிர்கால மக்களுக்கு எடுத்தியம்பவே போலும்!

ஒரு நாள்.

பாதுகாப்பு விடுதியில் ஒவ்வோர் அனாதைக்கும் காலையில் ஒரு குவளைக் கஞ்சியும், மாலையில் ஒரு குவளைக் கஞ்சியும் பெருமனதுடன் வார்க்கப்படும். பெரியோர்களைவிடச் சிறியோர்களுக்குப் பசி நோய் மிகுதியென்பது உலகமறிந்த உண்மை. உப்புச் சப்பற்ற அந்த ஒரு குவளைக் கஞ்சியைக் குடித்து விட்டுக் கடினமான வேலைகளைச் செய்துகொண்டு எத்தனை நாட்கள் உயிர் வாழ முடியும்? பசிக் கொடுமைக்கு முன், எந்தச் சட்டமும், கட்டுப்பாடும், சரிந்துவிடுமல்லவா? ஆதலால் ஒருநாள், விடுதியிலிருந்த திக்கற்ற சிறுவர்கள், தங்களுக்குள் ஒரு கூட்டம் கூடி, மேலும் சிறிதளவு கஞ்சி தங்களுக்கு ஊற்றுமாறு கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும்

அந்த வேண்டுகோளினை அலுவலரின் முன் ஆலிவர் விண்ணப்பிக்க வேண்டுமென்றும் முடிவு செய்தனர்.

மாலை வந்தது. உணவறையில் பிள்ளைகள் வழக்கம்போல் வந்து உட்கார்ந்தார்கள். சமையற்காரன் ஒவ்வொரு சிறுவனுக்கும் திட்டப்படி ஒவ்வொரு குவளை கஞ்சி ஊற்றினான். கஞ்சியினைக் குடித்த பின்னரும் பையன்கள் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்காமல், ஒருவர் முகத்தினை யொருவர் பார்த்துக் கொண்டு, குசுகுசுவென்று தமக்குள் ஏதோ பேசினர். சிறுவர்களின் நடுவில் உட்கார்ந்திருந்த ஆலிவரை அவன் பக்கத்திலிருந்த ஒரு பையன் தன் முழங்கையினால் முட்டிக் கண்களினால் சாடை காட்டினான். அதன் குறிப்பினை யறிந்து கொண்ட ஆலிவர், மெல்ல வெழுந்து, சமையற்காரனிடம் சென்று தன் குவளையை நீட்டி, "இன்னும் கொஞ்சம் கஞ்சி வேண்டும்" என்றான். அப்போது அவன் குரலும், உடலும் அச்சத்தால் நடுங்கின.

ஆலிவரின் வேண்டுகோளினைக் கேட்ட சமையற்காரனால் அவன் காதுகளையே நம்ப முடியவில்லை. கஞ்சி ஊற்றப்படுவதனை அருகிலிருந்து மேற்பார்வை செய்து கொண்டிருந்த அலுவலன் ஒருவன், ஆலிவரின் துணிச்சலைக் கண்டு ஒரு கணம் அதிர்ச்சியுற்றான்.

"என்ன....?" என்று இடியிடித்தாற் போன்று வினவினான் அவன்.

"இன்னும் சிறிது கஞ்சி வேண்டும்" என்று ஆலிவர் தன் பழைய வேண்டுகோளை அவனிடம் விண்ணப்பித்தான்.

அதற்கு மேல் அந்த அலுவலனால் பொறுக்கக் கூடவில்லை. சமையற்காரன் கையிலிருந்த கஞ்சி வார்க்கும் அகப்பையினை வெடுக்கென்று பிடுங்கி, ஆலிவர் மண்டையில் ஓங்கி ஓர் அடி அடித்துவிட்டு

"பம்பில்! பம்பில்!" என்று உரக்கக் கூவினான். பம்பில் வெளியேயிருந்து ஓடிவந்தான். பம்பில் விடுதியின் வேலைக்காரன்.

"அடுத்த அறையிலிருக்கும் விடுதிப் பொறுப்பாளர்களிடம் சென்று ஆலிவரின் அடாத செயலைப் பற்றி அறிவித்துவிட்டு வா" என்று அலுவலன், பம்பிலுக்கு ஆணையிட்டான். பம்பில் அடுத்த அறைக்குள் நுழைந்து அங்கிருந்தோரிடம், "ஐயா! ஆலிவர் மேலும் கஞ்சி வேண்டுமென்கிறான்" என்று பதைபதைப்புடன் சொன்னான்.

"என்ன?....ஆலிவர் மேலும் கேட்டானா? விடுதியின் உணவுத் திட்டப்படி ஊற்றப்பட்ட கஞ்சியினைக் குடித்த பிறகுமா? சிறிது விளக்கமாகச் சொல்" என்று வினவினார் விடுதியின் தலைவர். "ஆம்! ஐயா! ஆம்........கொண்டதனை உண்டபின் மேலும் கேட்டான்."

அதற்கு மேல் அங்கு ஆராய்ச்சியில்லை; அறிவோட்டமில்லை. பசித் தீயினைச் சிறிது தணிக்க ஆலிவர் விடுத்த வேண்டுகோளினை விடுதியின் பொறுப்பாளர்களால் எங்ஙனம் ஏற்கவியலும்? ஆலிவரின் அடாத செயலுக்கு ஈடாக அவனுக்குச் சிறைத் தண்டனை கொடுக்க அக்குழுவினரால் முடிவு செய்யப் பெற்றது, சிறைத் தண்டனை யென்றால் விடுதியிலிருக்கும் இருளடைந்த தனியறையொன்றில் குற்றவாளியினைத் தள்ளிச் சில நாட்கள் பூட்டி வைத்தல் என்பது பொருள்.

ஆலிவர் சிறையிலடைக்கப் பெற்ற மறுநாள் விடுதிக்கு முன்னாலிருந்தவொரு விளம்பரப் பலகையில், "ஏழைகள் பாதுகாப்பு விடுதியின் பொறுப்பிலிருந்து ஆலிவர் டுவிஸ்டினை வேலைக்கோ விற்பனைக்கோ ஏற்றுக்கொண்டு, தம்முடன் அழைத்துச் செல்ல முன்வருபவருக்கு ஐந்து பவுன் உதவித்

தொகை அளிக்கப்படும்" என்ற ஓர் அறிவிப்பு ஒட்டப்பட்டிருந்தது, அந்த அறிவிப்பு உடனே பயனீந்தது. பிணங்களே அடக்கம் செய்யும் பெட்டி களேத் தயாரிக்கும் சௌபெரி என்பவன் ஆலிவரை வேலேக்காரப் பையனுக ஏற்றுக்கொள்ள இசைந் தான்.

## 3. புத்திடத்தில்

பம்பில், அன்று மாலே ஆலிவரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு சௌபெரியின் சடைக்குச் சென்றபோது, சௌபெரி தன் கடையினே மூடிவிட்டு உள்ளே அன்றையக் கணக்குகளேப் பதிவு செய்து கொண்டு இருந்தான். தன் வருகையினேக் கனேப்பின் மூலம் அறிவித்துக்கொண்டு உள்ளே நுழைந்த பம்பில், "சௌபெரி! பையனே அழைத்து வந்துள் ளேன்" என்ருன்.

"ஓ! இவன்தானு அந்தப் பையன்?" என்று வின விக்கொண்டே சௌபெரி விளக்கினேத் தூக்கிப் பையனே ஒரு முறை 'ஏறவிறங்கப் பார்த்துவிட்டு' அடுத்த அறையிலிருந்த தன் மனேவியை அழைத் தான்.

சௌபெரி வீட்டினேப் பொறுத்த மட்டும், திரு வாட்டி சௌபெரி உடம்பாட்டினேப் பெற்ற பின்னர்த்தான் எந்தவிதமான வணிகச் செயலும் உறுதிபெறும்.

காய்ந்துபோன கொம்பு போன்ற ஒருத்தி—அவ ளுக்குச் சிரிக்கவே தெரியாது போலும்—கடுகடுத்த முகத்துடன் அங்கு வந்து நின்ருள்.

"இவன்தான் நான் சொன்ன அந்தப் பையன்" என்ருன் சௌபெரி.

"என்ன?....பையன் மிகவும் பொடியனு யிருக்கிறுனே?" என்ருள் திருவாட்டி சௌபெரி ஆலிவரைப் பார்த்துவிட்டு.

"இப்போது பொடியன்தான்—ஆனுல்,நாளடைவில் நெடியனுகிவிடுவான்" என்று இடைமறித்துப் பேசினுன், பம்பில்.

"உண்மை! உண்மை!! எங்கள் வீட்டுச் சோறும் நீரும் அவனைக் கொழுக்கட்டை போலாக்கிவிடும்.... என்ருலும் இந்த அனுதைகளால் எங்களுக்கு நட்டமே தவிர ஊதியமில்லை. வணிகத்தில் தாங்கள் தாம் திறமைசாலிகள் என்று ஆண்கள் எண்ணிக் கொள்கிருர்கள். உம்....சரி; இருந்து போகட்டும்" என்று சொல்லிக்கொண்டே திருவாட்டி சௌபெரி ஆலிவரைப் பார்த்து, "அடே! எலும்புக்கூடு! அந்த அறைக்குள் செல்" என்று சொல்லிக்கொண்டே, ஆலிவரைப் பிடித்திழுத்து இருள் படர்ந்திருந்த ஓர் அறைக்குள் தள்ளிவிட்டு, வேலைக்காரி சார்லேட்டியைக் கூப்பிட்டு, "டிரிப்புக்கு (அவர்கள் நாயினது அருமைப் பெயர்) வைத்திருக்கும் அந்த எலும்புக் கறியினை இவனுக்குக் கொடு" என்று பணித்தாள்.

டிரிப்பு (நாய்) அந்த உணவினைத் தின்ன மறுத்து விட்ட செய்தியினைப் பணிப்பெண் வீட்டுத் தலைவிக்குச் சொல்லவில்லை. சொன்னுல் தனக்குப் பரிசு கிடைக்குமென்று சார்லேட்டிக்குத் தெரியும். சிறிது நேரத்துக்கு முன் நாயும் தின்ன மறுத்த உணவினை மிகுந்த ஆவலுடன் அப்போது தின்று தீர்த்தான் ஆலிவர்.

உணவு என்ற உயர்ந்த பெயரினைத் தாங்கி நின்ற அந்தக் காய்ந்துபோன கறித்துண்டுகளை ஆலிவர் விழுங்கின விரைவினையும், அவற்றின்மேல் அவன் காட்டிய விருப்பத்தினையும் கண்ட திருவாட்டி சௌபெரிக்கு, 'இந்த ஆலிவரின் யானைப் பசிக்கு நம்

மால் தீனி போட முடியுமா?' என்ற ஓர் எண்ணம் எழுந்தது; அச்சம் கலந்த ஒரு வியப்பு அவனை ஆட்டியது.

ஆலிவர் உண்ட பின்னர், அவள் அவனைக் கூப்பிட்டு ஓர் இடத்தினைக் காட்டி, "இந்தப் பெட்டிகளுக்கிடையில் படுத்துக்கொள். சவப்பெட்டியினுள் படுத்து உறங்கிவிட்டால், நீ பெட்டியினுள் படுத்துறங்குவதனைப் பாராமலே, கடைக்காரர் (சௌபெரி) காலையில் மேலே பலகையை வைத்து மூடி ஆணியடித்து விடுவார். என்ன?...........தெரிகிறதா?" என்று எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றாள். முதலில் ஆலிவருக்கு உறக்கம் வரவில்லை. என்றாலும் களைப்பின் மிகுதியினால் பின்னும் சிறிது நேரத்துக்குள் சவப் பெட்டிக்கட்கிடையே தானும் ஒரு சவம்போல் உறங்கலானான்.

மறுநாட் காலை, கதவு தட்டப்படும் ஒலி கேட்டு ஆலிவர் எழுந்து சென்று கதவினைத் திறந்தான். ஆலிவரைவிட ஆண்டில் முதிர்ந்த, உயரமான ஒரு பையன், உரிமை யுணர்ச்சியுடன் கடையினுள் நுழைந்தான்.

அவன் ஆலிவரைப் பார்த்து, "ஓ! நீதானடா புதுப்பையன்?" என்று வினவினான்.

"ஆமாம்."

"உன் பெயர்....?"

"ஆலிவர் டுவிஸ்ட்."

"உன் வயது....?"

"பத்து."

"நான் யார் தெரியுமா?"

"தெரியாது."

"தெரியாதா?....இப்போது தெரிந்துகொள்.என் பெயர், திருவாளர் நோக்ளேபோல் என்பதாகும். நீ

இக் கடையில் என் கீழ்தான் வேலை செய்யவேண்டும். சோம்பேறிப் பயலே! ஏன் நிற்கிருய்? பலகணிக் கதவுகளைத் திற....நான் உள்ளே சென்று உண்டு விட்டு வரும் வரையில் கடையினைக் கருத்துடன் கவனித்துக்கொள். என்ன?....தெரிகிறதா?" என்று ஆணையிட்டுக்கொண்டே, ஆலிவரைக் காலால் ஓர் உதை உதைத்துவிட்டு உள்ளே சென்முன்.

நோக்ளேபோல், ஆலிவரைப் போன்று ஓர் அனுதையல்லன். அவனுடைய பெற்ருேர்கள் உயிருடனிருக்கின்றனர். ஆனுல், உணவுக்காக மட்டும் உழைத்து உழைத்து உயிர் வாழும் ஓர் ஏழை அவன். அக்கம் பக்கத்திலிருந்த மற்றக் கடைக் காரப் பையன்கள் எல்லோரும் அவனை அடிக்கடி ஏளனம் செய்வார்கள். எதிர்மாற்றம் கூறமாட் டாத ஏழைமை நிலையிலிருந்த அவன், அவர்களது இழிமொழிகளையும், பழிமொழிகளையும் பொறுமை யுடன் விழுங்கிக்கொள்வான். என்ருலும், அவன் உள்ளத்தில், ஆத்திரம் பொங்கிக்கொண்டிருந்தது. ஊழ், இப்போது, அவனைவிடக் கேடுகெட்ட அனுதையொருவனை அவன் காலடிகளிற் கொண்டு வந்து தள்ளியுள்ளது. மற்றவர்கள்மேல் செலுத்த வேண்டிய வெறுப்பினை ஆலிவர் மீது செலுத்தி யாவது, அவன், தன் உள்ளச் சுமையினைக் குறைத்துக் கொள்ளலாமல்லவா? உலகில், எப்படிப்பட்ட இழி நிலையிலுள்ள எந்த மனிதனும், ஆலிவரை, எப்படிப் பழித்துப் பேசினுலும் அடித்தாலும், —ஏன்? கொன்ருலும்கூட, அவனை ஏனென்று கேட்பாரில்லை. உண்மை அப்படியிருக்க, ஆலிவரை, நோக்ளேபோல் கொடுமைகளுக்கு உள்ளாக்கியதில் வியப்பொன்று மில்லை. சிந்தித்துப் பார்த்தால் மெலியவர்களை வலியவர்கள் வாட்டுவதே என்றும் யாண்டும் உலகின் இயற்கையாயுளதென்பது புலப்படும்.

# 4. வெளியேற்றல்

சௌபெரியின் வீட்டில், ஆலிவரின் வாழ்க்கைத் தரம் முன்னினும் சிறிதேனும் உயர்ந்ததாகக் கூறவியலாது. எரிகொள்ளியிலிருந்து கொதி யெண்ணெயில் குதித்தது போலாயிற்று என்று கூறினும் பிழையில்லை. அங்கு நோக்ளேபோலின் கொடுமைகளும், திருவாட்டி சௌபெரியின் வசை மொழிகளும் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டிருந்தன. சிறுவனாயினும், ஆலிவர், தன்னிலையினை உணர்ந்து, அக்கொடுமைகளை யெல்லாம், பல திங்கள்களாகப் பொறுத்து வந்தான். ஒரு நாள் ஒரு சிறு நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சி சிறியதென்றாலும் அதுவே ஆலிவர் வாழ்க்கையின் திருப்ப முனையாய் அமைந்தது.

ஒருநாள் ஆலிவரும் நோக்ளேபோலும், சமையலறையில் சாப்பிடுவதற்கென உட்கார்ந்திருந்தனர். சமையற்காரி சார்லேட்டி வெளியே சென்றிருந்தாள். ஆலிவரை அழவைத்து, அவன் கண்ணீர் விடுவதனைக் கண்டு மகிழ்ச்சியடைவதனையே தன் சிறப்புத் தொழிலாகக் கொண்டிருந்த நோக்ளே போல், அந்த இடைவேளையை இன்பமாகக் கழிக்க எண்ணி யாதொரு காரணமுமின்றி, ஆலிவரின் தலை மயிரைப் பிடித்திழுத்து அவன் காதுகளைத் திருகினான்; அவனைப் பலவாறு திட்டினான். ஆனால், ஆலிவர் சிறிதும் அசையாமல் அமைதியாயிருந்தான். அதனால் ஏமாற்றமடைந்த நோக்ளேபோல் ஆலிவரின் கண்ணீரை வெளிப்படுத்த வேறு வழியை நாடினான்.

"அடே! அனாதை! உன் அன்னை எப்படி, எங்கேயிருக்கிறாளடா?" என்று குத்தலாய்க் கேட்டான்.

"அவள் மாண்டுவிட்டாள்; ஆனால், என் அன்னையைப்பற்றி என்னிடம் ஒன்றும் பேசாதே" என்று துக்கம் தன் தொண்டையை யடைக்க, ஆலிவர் அவனைக் கேட்டுக்கொண்டான். தன் தாயைப்பற்றி நினைத்தால் ஆலிவருக்கு அழுகை வந்துவிடும். அவள் நினைவு அவ்வளவு புனிதமானது அவனுக்கு. ஆனால், க்ளேபோல் தன் பேச்சினை நிறுத்திக்கொள்பவனாயில்லை. மேலும் ஆலிவரைத் துன்புறுத்த எண்ணி, "அவள் எப்படிச் செத்தாளடா?" என்று வினவினான்.

"மனமுடைந்து மாண்டாளாம். யாரோ ஒரு மருத்துவச்சி சொன்னாள்."

இதனைச் சொன்னபோது ஆலிவரின் கண்களில் நீர் ததும்பியது. உடனே அழுதும் விட்டான்.

"அடே! அடே! நிறுத்து. எப்போதோ மாண்டவளுக்காக இப்போதென்னடா ஒப்பாரி?"

"கண்ணீர் ஒன்றுதான், என் அன்னைக்கு, யான் இப்போது செலுத்தக்கூடிய காணிக்கை. அது ஒன்றுதான் இப்போது என்னிடம் உளது....அவளைப் பற்றி மறுபடியும் நினைவூட்டாதே; உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்!"

"போடா போ! உனக்காக நான் வருந்துகிறேன். ஆனால், ஒழுக்கம் கெட்ட அவளை நினைத்து, நீ ஏன் உன் கண்ணீரை வீணாக வடிக்கிறாய்."

"என் அன்னையைக் குறித்து என்ன சொன்னாய்?" என்று உறுமிக்கொண்டே தான் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டெழுந்தான் ஆலிவர். அப்போது அவன் முகம் சிவந்தது; கண்கள் தீயினைக் கக்கின; பதற்றத்தால் அவன் உடல் ஆடியது; மூக்கின் முனை, கூத்தாடியது; புருவங்கள் நிமிர்ந்து நின்றன. "மறுபடியும் சொல்கிறேன்; உன் அன்னை

சீலமில்லாதவள். அவள் செத்தொழிந்ததே உனக்கு நல்லதுதான். இல்லையானால் அவள் தீய நடத்தைக்காக அவளைச் சிறையில் தள்ளியிருப்பார்கள்; அல்லது நாடு கடத்தியிருப்பார்கள்; அதுவுமில்லையானால் தூக்கிலிட்டிருப்பார்கள்."

தன் அன்னையின் அழகிய முகத்தினைக் கண்டு, மஞ்சம் போன்ற அவளது மடியில் தவழ்ந்து விளையாடி, அவளது தளிர்க் கரங்களின் அன்புப் பிடிப்பிலகப்பட்டு, அவளது பொன் மார்பினில் ஒன்றி, அவளது அமுத மயமான முத்தங்களை யேற்றுச் சீராட்டு மொழிகளைக் கேட்டு வளரும் நற்பேறு தனக்குக் கிட்டாது போயினும், தன்னை யீன்ற அந்தவோர் அரும்பெருஞ் செயலே ஆலிவருக்குப் போதுமானது. தனக்கு, அவள் தன் மணி வயிற்றில் இடங்கொடுத்த அந்தச் செயற்கருஞ் செயலுக்காக, எவ்வித இன்னல்களையும் அவன் ஏற்கத் தயாராயிருந்தான். அன்னையென்ற அந்த அருமைத் திருப்பெயரி லடங்கியுள்ள அன்பின் எல்லையை, பொறுப்பின் வரம்பினை, தனக்கென வாழாத் தகையினை உணரலாமன்றி, சொல்லினால் விளக்கிக் காட்ட முடியாது. தன் அன்னை உலகோர் கண்களுக்கு எத்தகையளாயிருப்பினும், தன்னைப் பொறுத்தமட்டில், அவள் தனக்குத் தனிப்பெருங் கோயில்; தான் வழிபடுவதற்குரிய ஒரே கடவுள்; அவளே தனக்கு உலகம்; அவளே தனக்கு வாழ்வு; அவளே தனக்கு முன்பின் எல்லாம். இத்தகைய அழுத்தமான கொள்கையினை ஆலிவர் கொண்டிருந்ததால், க்ளேபோல், தன் தாயின்மீது சுமத்திய குற்றச்சாற்றினை அவனால் பொறுக்கக் கூடவில்லை. சிறிது நேரத்துக்கு முன் மடிபோன்று அமைதியாயிருந்த ஆலிவர், தன்வயமிழந்து ஓர் எரிமலை போல் குமுறி எழுந்தான்; அருகிலிருந்த நாற்காலியொன்றினை யெடுத்துச் சிரித்துக் கொண்டிருந்த

க்ளேபோல்மீது வீசியெறிந்தான். நாய்க்குட்டியினைத் தூக்கி எறிவதுபோல் க்ளேபோலினைத் தூக்கியெடுத்துத் தரையில் போட்டான்; பித்துக் கொண்டவனைப்போல, அவன் குரல்வளையைப் பிடித்து நெருக்கினான்.

"புதுப் பையன் என்னைக் கொல்கிறான். சார்லேட்டி! உதவிக்கு ஓடிவா. ஆலிவருக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது. உதவி! உதவி!!" என்று கத்தினான் க்ளேபோல். அவனது ஓலத்தைக் கேட்டுச் சார்லேட்டியும், திருவாட்டி சௌபெரியும் விரைந்தோடி வந்து, க்ளேபோலினை ஆலிவரின் பிடிப்பினின்றும் விடுவித்துவிட்டு, ஆலிவரைத் தங்கள் கைகள் வலியெடுக்கும் வரையில் நையப் புடைத்தனர்; அவன் சட்டையினைக் கிழித்தனர்; அவன் முகத்திலும் முதுகிலும் குருதி வெளிவரும் வரையில் நகத்தினால் கீறினர். அதற்குள் ஒருவாறு தன்னை நிலைப்படுத்திக் கொண்டு எழுந்த க்ளேபோல் ஆலிவருக்குத் தன் பங்கினைக் கொடுக்கத் தவறவில்லை. எதற்கும் கலங்காது அங்கு நின்ற ஆலிவரை மூவருமாகப் பிடித்திழுத்துச் சென்று ஓர் அறையில் தள்ளிப் பூட்டினர்.

இவ்வரிய செயலைச் செய்து முடித்த பின்னர்த் திருவாட்டி சௌபெரி க்ளேபோலினை யழைத்து விடுதியிலிருந்து அப்போதே பம்பிலை அழைத்து வருமாறு ஏவினாள். க்ளேபோல், விரைந்தோடிச் சென்று பம்பிலை யழைத்து வந்தான்.

பம்பில், சாவித்துளையில் தன் வாயினை வைத்துக் கொண்டு, அழுத்தமான குரலில், அறையினுள்ளிருந்த ஆலிவரை நோக்கி, "ஆலிவர்! இந்தக் குரல் யாருடையதென்று தெரிகிறதா?" என்று வினவினான். "தெரிகிறது! என்னை வெளியே விடுங்கள்" என்றான். "என் குரலைக் கேட்டும் நீ அஞ்சவில்லையா,

ஆலிவர்?'' என்று மறுபடியும் கேட்டான் பம்பில். ''இல்லை'' என்றான் ஆலிவர் உறுதியாக.

ஆலிவரின் அழுத்தமான பதில் பம்பிலைத் தூக்கி வாரிப் போட்டது. ''ஆலிவருக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது. இல்லாவிட்டால், உங்களிடமும் இப்படிப் பேசுவானா?'' என்றாள் திருவாட்டி சௌபெரி குறுக்கிட்டு.

''ஆலிவருக்குப் பயித்தியம் பிடிக்கவில்லை. உங்கள் வீட்டுச் சோறும் கறியும் அவனைக் கொழுக்க வைத்துவிட்டன'' என்றான் பம்பில்.

இதற்குள் வெளியே சென்றிருந்த சௌபெரியும் வந்து சேர்ந்தான். ஆலிவரின் நடத்தையைக் குறித்து நால்வரும் சேர்ந்துகொண்டு அவனிடம் இல்லாதன வும், பொல்லாதனவும் ஆகிய குற்றங்களை யேற்றிச் சொன்னார்கள். உயர்வு நவிற்சியணி என்பது அவர் களுக்கென்றே அணி யிலக்கணத்தில் அமைக்கப் பெற்றது போலும். திருவாட்டி சௌபெரி ஆலிவர் மீது தனிக் காவியம் வேறு தீட்டினாள். அதற்கு மேலும் சௌபெரி சும்மாவிருப்பானா? ஆலிவரை வெளியே யிழுத்து வந்து தன் மனைவி மகிழும் வரையில் அவனை அடித்தான், அடித்தான், அப்படி அடித்தான்.

இவ்வளவும் ஆனபிறகு ஆலிவரைச் சௌபெரி கடையறையில் தள்ளிச் சவப்பெட்டிகளுக்கிடையில் படுத்துறங்குமாறு பணித்தான்.

ஆலிவர் அறையினுள் தனியாக விருந்தான். அப்போது அவனது பிஞ்சு நெஞ்சத்தில், அன்று மாலை நடந்த நிகழ்ச்சிகள் ஒன்றன்பின்னொன்றாக வந்து தோன்றி மறைந்தன. அவனது திக்கற்ற நிலை அப்போது அவனுக்குத் தெற்றெனப் புலப்பட்டது. அவனையும் அறியாமலே அழுகை வந்தது. அந்த

அழுகையே அவனுக்கு ஆறுதலையும் அளித்தது. ஆனால், தூக்கம் மட்டும் பிடிக்கவில்லை.

வீட்டில் அரவம் அடங்கியபின் ஆலிவர் எழுந்து அறையினைச் சுற்றுமுற்றும் பார்த்தான். நல்லவேளை! கடையின் வெளிக்கதவு பூட்டப்படாம லிருந்தது. கதவினை மெல்லத் திறந்துகொண்டு வெளியே வந்து பார்த்தான். எங்கும் இருள் கவிந்திருந்தது. கதவினை மூடிக்கொண்டு மறுபடியும் உள்ளே வந்து, தன் கைத் துண்டில், தனது சட்டையினையும் காலுறையினையும் வைத்து ஒரு சிறு மூட்டையாகக் கட்டி வைத்துக் கொண்டு பொழுது விடிவதனை எதிர்நோக்கி உட் கார்ந்திருந்தான். அவன் சிந்தனைகள் எங்கெங்கோ பறந்து சென்றன.

இரவுப் பொழுது சிறிது சிறிதாகக் கழிந்து கொண்டு வந்தது. சிறிது தொலைவில் காக்கைகள் கரையும் ஒலி பொழுது விடிவதனை அறிவித்தது. ஆலிவர் தன் மூட்டையினை எடுத்துக்கொண்டு தெரு விற்கு வந்தான். கடைக் கதவினை மூடிவிட்டு விரை வாக நடந்தான்.

## 5. நழுக்கன் வலையில்

இலண்டன் நகருக்குச் செல்லும் அந்த நெடுஞ் சாலையில், மாலை வரையில் நடந்து இருபது கற்களைக் கடந்துவிட்ட ஆலிவரின் கால்கள் மேலும் நடக்க மறுத்தன. வழியிற்கண்ட இரண்டொருவரிடம் கெஞ்சிக் கொஞ்சம் உணவும் நீரும் பெற்று அன் றையப் பொழுதினைக் கழித்தான். இரவு வந்ததும் திறந்த வெளியில் படுத்துக்கொண்டான். தனிமை அவனுக்கு அச்சத்தைக் கொடுத்தது. எனினும் களைப்பின் மிகுதியால் கண்ணயர்ந்து விட்டான்.

மறுநாட் காலையில் எழுந்து மேலும் நடக்கலானுன். வழியில் பிச்சையெடுத்தும், இரவில் மரங்களின் அடியிற் படுத்துறங்கியும், ஏழாம் நாட் காலே, பார்னெட் என்ற ஒரு சிற்றூருக்கு வந்து சேர்ந்தான். அங்கிருந்து இலண்டனுக்குப் பத்துக்கல் தொலேதான். நடந்து நடந்து அவன் பாதங்கள் வீங்கிவிட்டன. சிறிது ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பி, ஒரு வீட்டின் வாயிற்படிமேல் உட்கார்ந்தான்.

பொழுது சிறிது கழிந்தது. யாரோ ஒரு பையன் ஆலிவர் அனுதையாய் உட்கார்ந்திருத்தலேப் பார்த்துக்கொண்டு அப்பாற் சென்முன். சென்றவன் திரும்பி வந்து, சாலேயின் எதிர்புறத்தில் நின்று கொண்டு ஆலிவரை உற்று நோக்கினுன். ஆலிவரும் அவனேக் கூர்ந்து பார்த்தான்.

அந்தப் பையனுக்குக் கிட்டத்தட்ட ஆலிவரின் வயதிருக்கலாம். குன்றிய உடல்; வில்லினேப்போல் வளேந்த கால்கள்; சப்பைமூக்கு; அழுக்கேறிய உடைகள்; அலேயும் கூரிய கண்கள்; பரட்டைத் தலே மயிர்; இத்தகைய உடலமைப்பினேயுடைய அந்தப் பையனேக் கண்டு ஆலிவர் வியப்படையாமல் என்ன செய்வான்? பெரியவர்களுக்குரிய உடைகளே அவன் அணிந்திருந்ததால், அவனது மேற்சட்டை கால்கள் வரையில் தொங்கியது. நீளமாயிருந்த சட்டையின் கைகளே அவன், முழங்கை வரையில் மடித்து விட்டிருந்தான்.

ஆலிவர் தன்னே நோக்குதலேக் கண்ட அந்தப் பையன் ஆலிவரிடம் வந்து, "பையா! என்ன செய்தி?" என்று வினவினுன்.

"எனக்குப் பசியும் சோர்வும் மிகுதியாயுள. ஏழு நாட்களாய் நடந்துகொண்டிருக்கிறேன். தொலே தூரம் நடந்துவிட்டேன்" என்று அழுதுகொண்டே சொன்னுன் ஆலிவர்.

அந்தப் பையன் ஆலிவரைத் தன் கைகளால் நிற்க வைத்தான். பிறகு அருகிலிருந்த ஓர் உணவு விடுதிக்கு அழைத்துச் சென்று வேண்டிய அளவு ஆலிவருக்கு உணவு வாங்கிக் கொடுத்தான். 'காய்ந்த மாடு கம்பில் விழுந்தது' போல ஆலிவர் வயிறு புடைக்கத் தின்றான்.

இருவரும் உணவு விடுதியினை விட்டு வெளியே வந்ததும், "என்ன? இலண்டனுக்குச் செல்லு கிறாயா?" என்று அந்தப் பையன் ஆலிவரைக் கேட்டான்.

"ஆம்" என்றான் ஆலிவர்.

"உனக்குத் தெரிந்தவர்கள் அங்கு யாரேனும் உளரோ?"

"இல்லை."

"கையில் பணம் இருக்கிறதா?"

"இல்லை."

இல்லை, இல்லை என்ற விடைகளைக் கேட்ட அந்தப் பையனுக்கு ஆலிவரைப்பற்றி என்ன தோன்றி யதோ. தன் சட்டைப் பைகளுக்குள் கைகளை நுழைத்துக் கொண்டு சீழ்க்கை யடித்தான். பையனின் நடத்தை ஆலிவருக்கு விளங்கவில்லை. தடுமாறிக்கொண்டே, அப்பையனைப் பார்த்து, "நீ இலண்டனில் வசிக்கிறாயா?" என்று ஆலிவர் வினவினான்.

"ஆமாம்........வேலை யில்லாதபோது இலண்டனி லிருப்பேன்........உம்ம்........உனக்கு இன்றிரவு தங்க ஓரிடம் வேண்டுமல்லவா?"

"ஆமாம். நான் ஒரு வீட்டுக் கூரையின்கீழ் படுத்து ஏழு நாட்களாகிவிட்டன."

"வருத்தப்படாதே! நான் இன்றிரவு இலண்ட னில் இருக்க வேண்டியவன். எனக்குத் தெரிந்த ஒரு

கனவான் இலண்டனில் இருக்கிறார். நான் உனக்காகப் பரிந்து பேசினால், அவர் உன்னைப் போன்றவர்களை யேற்றுக்கொண்டு இலவசமாக உணவும் இடமுமளிப்பார். உன்னை அகற்ற மாட்டார்.''

நீரில் மூழ்கிக்கொண்டிருப்பவனுக்கு ஒரு சிறு துரும்பு கிடைத்தாற்கூடப் போதும். அதனைப்பற்றிக் கொண்டு கரையேற முயற்சி செய்வான். அதுபோல் தன் நிலையை உணர்ந்த ஆலிவரும், எதிர்பாராது தனக்குக் கிடைத்த அந்த உதவியினை ஆராயாமலும் மறுக்காமலும் ஏற்றுக்கொண்டு அந்தப் பையனுடன் இலண்டனுக்குப் புறப்பட்டான்.

விசித்திரமான அந்தப் பையன் யார்? அவன் பெயர் ஜேக் டாக்கின்சு என்பதாகும். அவன் இலண்டனிலுள்ள அந்தக் கனவானுக்கு மிகவும் வேண்டியவன். அவர் அவனைக் குள்ளநரி, தந்திரசாலி, போலி, தளுக்கன் என்ற செல்லப் பெயர்களால் அழைப்பார். அவருக்காக அவன் எதனையும் செய்வான்.

வழி நடையின்போது ஆலிவர் மேற்கண்ட செய்திகளை, ஜேக் டாக்கின்சினிடமிருந்து அறிந்து கொண்டான்.

இருவரும் இலண்டனை யடைந்தபோது, இரவு மணி பதினொன்றிருக்கும். இருள் மண்டியிருந்த பல தெருக்களைக் கடந்து இருவரும் ஒரு வீட்டின் முன் வந்து நின்றனர். ஜேக் டாக்கின்சு வெளிக் கதவினைக் காலினால் எட்டி உதைத்கவும் அது தானாகவே திறந்து கொண்டது. டாக்கின்சு, ஆலிவரைக் கைகளால் கெட்டியாகப் பற்றிக்கொண்டு உள்ளே நுழைந்ததும் கதவினைத் தாழிட்டான். பின்னர் இருவரும் உடைந்துபோன சில படிகளின் வழியாக மேலே ஏறி ஓர் அறைக்குள் வந்து சேர்ந்தனர்.

அங்கு வசிப்போரின் செயல்களையும் இயல்பினையும் விளம்பரப் படுத்துவது போன்று, அந்த அறை கரி படிந்தும், தூசும் புழுதியும் நிரம்பியும் அலங்கோலக் காட்சியளித்தது. படுக்கைகளாகப் பயன் படுத்தப்பட்ட கோணிப்பைகள் தரைமீது பாதி விரிந்தும் பாதி சுருண்டும் கிடந்தன. கொடியொன்றில் பல நிறக் கைக்குட்டைகள் தொங்கிக் கொண்டிருந்தன. மேசைமீது ஒரு மெழுகுவர்த்தி விளக்கு அழுதுகொண்டிருந்தது. மேசையைச் சுற்றி நான்கு அல்லது ஐந்து பையன்சள் அந்த நள்ளிரவிலும் உறங்காமல் உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். அடுப்பின்முன் ஒரு கிழவன் உட்கார்ந்து, சட்டியில் எதனையோ வறுத்துக்கொண்டிருந்தான். கிழவனது முகத்தினை அவன் தலைமயிர் மறைத்துக்கொண்டிருந்ததால் அவனது பார்வையில் தோய்ந்திருந்த வஞ்சத்தினையும் முகத்தில் கூத்தாடிய அருவருப்பின் முழு அளவினையும் ஆலிவரால் அப்போது பார்க்க முடியவில்லை.

குள்ளநரி (ஜேக் டாக்கின்சு) உள்ளே நுழைந்ததும் அங்கிருந்த பையன்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு என்னென்னவோ கேள்விகளைக்கேட்டனர். அடுப்பு வேலையை அப்படியே விட்டுவிட்டு வந்த கிழவனும் குள்ளநரியினை வரவேற்றுக்கொண்டே, ஆலிவரை உற்றுப் பார்த்தான். அந்தப் பார்வையில் பரிவோ, பாசமோ, இன்பமோ, மலர்ச்சியோ ஒன்றுமில்லை.

"ஆலிவர்! இவர்தான் நான் சொன்ன அந்தக் கனவான்" என்றுன் ஜேக் டாக்கின்சு, அந்தக் கிழவனை ஆலிவருக்குச் சுட்டிக்காட்டி.

"பேகின் அவர்களே! இவன் என் நண்பன், ஆலிவர் டுவிஸ்ட்" என்று கிழவருக்கு ஆலிவரையும் அறிமுகப்படுத்தினுன். "ஓ, அப்படியா! மிக்க

மகிழ்ச்சி!" என்று சொல்லித் தலையை யாட்டிக் கொண்டே பேகின் ஆலிவரின் கைகளைப் பிடித்துக் குலுக்கினான். அதற்குள் மற்றப் பையன்கள் ஆலிவரைச் சூழ்ந்துகொண்டு, அவன் சட்டைப் பைகளில் கையை விட்டும், அவன் கையிலிருந்த மூட்டையினைப் பிடுங்கி அவிழ்த்தும் ஆராயத் தொடங்கி விட்டனர்.

ஆராய்ச்சிகள் ஒருவாறு முடிந்ததும் கிழவன் அனைவருக்கும் உணவு பரிமாறினான். ஆலிவருக்குப் போதுமான அளவு உணவு கிடைத்தது. உண்டபின் ஆலிவர் ஒரு கோணிப் பையின்மீது படுத்து, வழி நடந்த களைப்புத்தீர உறங்கலானான்.

தான் அடைக்கலம் புகுந்துள்ள இடம் சோம் பேறிச் சிறுவர்களுக்குத் திருட்டுத் தொழிலுக்குப் பயிற்சியளிக்கும் பண்ணை என்பதும், கனவான் என்று ஜேக் டாக்கின்சு குறிப்பிட்ட அந்தக் கிழவன் திருடர்களின் ஆசான் என்பதும், ஜேக் டாக்கின்சு அந்தக் கிழவனின் கையாள் என்பதும் ஆலிவருக்கு அப்போது எப்படித் தெரியும்?

## 6. சிறைப்படலும் விடுதலையும்

மறுநாள் பொழுது புலர்ந்தது. ஆலிவர் தூங்கி எழுந்ததும் பேகின் (கிழவன்) அவனுக்குச் சிற்றுண்டி அளித்தான். ஆலிவர் உண்டுகொண்டிருந்தபோது, ஜேக் டாக்கின்சு, சார்லி பேட்ஸ் என்ற மற்றொரு பையனுடன் அறையினுள் நுழைந்தான்.

பேகின், டாக்கின்சைப் பார்த்து, "என்ன, வேலையில் வெற்றிதானே?" என்று ஆவலுடன் வினவினான்.

"ஆம்! இரண்டு நோட்டுப் புத்தகங்கள்" என்று சொல்லிக்கொண்டே, டாக்கின்சு தன்

சட்டையின் உட்புறப் பையிலிருந்து இரண்டு நோட்டுப் புத்தகங்களை யெடுத்துப் பேகினிடம் கொடுத்தான்.

"சார்லஸ்! நீ என்ன கொண்டு வந்துள்ளாய்?"

"நான்கு கைக்குட்டைகள்" என்று சொல்லிச் சார்லஸ், தான் மறைத்து வைத்திருந்த நான்கு கைக்குட்டைகளையும் யெடுத்துப் பேகின் முன் வைத்தான். கைக்குட்டைகளைப் பேகின் எடுத்துப்பார்த்து, "மிக நேர்த்தியானவை" என்று பாராட்டிவிட்டு ஆலிவரை நோக்கி, "ஆலிவர், நீயும் விரைவில் இந்தத் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும். கற்றுக் கொண்டால் நீ உலகில் ஒரு பெரிய மனிதனாகிவிடுவாய்" என்றான்.

கள்ளக் கிழவனின் உள்ளத்தை அறிந்துகொள்ள மாட்டாத ஆலிவர், இந்தத் தொழில் என்பது எந்தத் தொழிலைக் குறிக்கின்றது என்று வினவாமல், "கற்றுக் கொடுத்தால் அறிந்து கொள்கிறேன்" என்றான்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் வேறு சில சிறுவர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். தம் குழுவினர் அனைவரும் வந்த பின்பு பேகின், வழக்கமான தன் அசாதாரண விளையாட்டினை விளையாடத் தொடங்கினான். தான் அணிந்திருந்த மேல் சட்டைப் பைகள், கால் சட்டை (நிஜார்)ப் பைகள் ஆகிய இவற்றினுள் ஒவ்வொன்றிலும் பணப்பை, மூக்குக் கண்ணாடி, கைக்குட்டை, கடிகாரம், நோட்டுப் புத்தகம்போன்ற பொருள்களைப் போட்டுக்கொண்டு ஒரு கனவான், எங்கேயோ பார்த்துக்கொண்டு அசட்டையாய் நடப்பதுபோல் அந்த அறையினுள் முன்னும் பின்னுமாய்ப் பல முறைகள் நடந்தான்; அப்படி நடந்தபோது ஒருமுறை பலகணியருகில்

**வந்து நிற்பான்; மற்ருெரு முறை கதவண்டை** சென்று பார்ப்பான்; வேருெரு முறை வானத்தை அண்ணுந்து நோக்குவான்; பின்னும் ஒரு முறை தன்னையே சுற்றிப் பார்த்துக் கொள்வான். இவ்வாறெல்லாம் அவன் செய்யும்போது அந்தப் பையன்கள், ஒவ்வொருவராக அவனிடம் சென்று அவனறியாமலே, அவனிடமுள்ள பொருள்களிலொன்றைக் கவர்ந்துவிட வேண்டும். அப்படித் திருடும்போது, பேகினிடம் அகப்பட்டுக் கொண்டால். அகப்பட்டுக் கொண்டவனுக்கு நல்ல உதை கிடைக்கும். எல்லாப் பையன்களும் திறமையாகவும் விரைவாகவும் தங்கள் கைவண்ணத்தைக் காட்டினர். ஒவ்வொரு நாளும் அப்பயிற்சி, பல முறை பையன்களுக்கு அளிக்கப் படும். அத்தகைய பயிற்சி எதற்காகக் கொடுக்கப் படுகின்றது என்பது முதல் நாள் ஆலிவருக்கு விளங்கவில்லை. அல்லாமலும் அப்பயிற்சி, தன்னை எங்ஙனம் உலகில் ஒரு பெரிய மனிதனுக்கக்கூடும் என்பதும் அவனுக்குப் புலப்படவில்லை.

* * *

ஆலிவர் இப்போது பேகினிடம் வந்து பல நாட்களாகிவிட்டன. பேகின் குறிப்பிட்ட அந்தத் தொழிலை அவன் நன்கு கற்றுக்கொள்ளுமாறு சூழ்நிலை செய்துவிட்டது. உதைக்கும் அடிக்கும் அஞ்சி அவன் அத்தொழிலைக் கற்றுக்கொண்டானேயன்றி, அதன்மேலிருந்த பற்றுலல்ல. அவன் உள்ளம் அதில் சிறிதும் ஊன்றவில்லை. பிறர் பொருளைத் திருடுவதென்பது தீய செயல் என்று அவனுக்குத் தெரியும். அவன் என்ன செய்வான்! தீயோர் கூட்டம் நல்லவனையும் கெட்டவனுக்கும் என்பதற்கு ஆலிவர் ஓர் எடுத்துக்காட்டாஞன்.

அந்த இருட்டறையில் பல நாட்களாக அடைபட்டுக் கிடப்பது ஆலிவருக்குப் பிடிக்கவில்லை. எப்படி

யாவது வெளிச்செல்ல வேண்டுமென்று அவன் துடியாய்த் துடித்தான். ஒரு நாள் அந்த வாய்ப்பு வந்தது.

ஆலிவர் திருட்டுத் தொழிலை நன்கு கற்றுக் கொண்டுவிட்டான் என்ற நம்பிக்கை ஏற்பட்டதும் பேகின், ஒருநாள் அவனை டாக்கின்சு, சார்லிபேட்ஸ் ஆகிய இருவருடனும் வெளியே யனுப்பினான்.

ஆலிவர் நடுவிலும், மற்ற இருவரும் இரு புறங் களிலுமாக ஒரு குறுகிய தெருவில் சென்றுகொண் டிருக்கையில் ஜேக் டாக்கின்சு திடீரென்று தன் இரு நண்பர்களையும் பிடித்திழுத்து நிறுத்தினான். ஆலிவர் ஒன்றும் புரியாமல், "என்ன செய்தி?" என்று டாக் கின்சைக் கேட்டான்.

"உஸ்....இரைச்சல் போடாதே! அந்தப் புத்தகக் கடைக்கு முன் நின்றுகொண்டிருக்கும் முதியவரைத் தெரிகிறதா?" என்று ஆலிவரின் வினவுக்கு எதிர் வினா விடுத்தான் டாக்கின்சு.

"தெரிகிறது....எதற்காகக் கேட்கிறாய்?"

"பார்த்துக்கொண்டே யிரு! தெரியும்."

"நல்ல வாய்ப்பு!" என்றான் சார்லி மகிழ்ச்சி யுடன்.

இத்தொடரின் குறிப்புப் புரியாமல் ஆலிவர் நின்று கொண்டிருந்தபோது, டாக்கின்சும் சார்லி யும் தெருவினைக் கடந்து சென்று அந்த முதியவருக் குப் பின்னால் நின்றனர். ஆலிவரும் சில அடிகள் அவர்களுடன் சென்று, இடையில் நின்றுகொண்டு மேல் நடக்கப்போவதனை நோக்கிக் கொண்டிருந் தான்.

கடையின்முன் நின்றுகொண்டிருந்த பெரியவர் ஒரு நூலினை வாங்கிப் படித்துக் கொண்டிருந்தார். அவர் சிந்தனை முழுதும் அதில் ஆழ்ந்திருந்தது.

அவர் அருகில் நின்றுகொண்டிருந்த டாக்கின்சு அம் முதியவர் அறியாவண்ணம், அவர் சட்டைப் பையில் தன் கையினை விட்டு, ஒரு கைக்குட்டையினை யெடுத்துச் சார்லியிடம் கொடுக்க, அதனை அவன் பெற்றுக் கொண்டு ஓடினான். மறுகணத்தில் டாக்கின்சும் சார்லியுடன் மறைந்தான். மேலும் தான் அங்கு நின்றுகொண்டிருந்தால், தனக்கும் ஏதேனும் இடுக்கண் விளையக்கூடுமென்று அஞ்சி, ஆலிவர் அவ்விடத்தினின்றும் ஓடத் தொடங்கினான். இவ்வளவும் மின்னல் வேகத்தில் கணப்போதில் நடைபெற்றது.

அதே நேரத்தில், கைக்குட்டையினை யெடுக்கத் தம் சட்டைப் பையினுள் கையை விட்ட அப் பெரியவர் அதனைக் காணுமல் திகைத்துச் சுற்று முற்றும் பார்க்க, ஆலிவர் ஓடுவது அவர் பார்வையில் பட்டது. அச்சிறுவன்தான் தம் கைக்குட்டையினைத் திருடிக்கொண்டு ஓடியவனாக விருக்க வேண்டுமென்று ஐயுற்ற அவர், "அதோ! திருடன் ஓடுகிறான்! திருடன்! திருடன்!! அவனைப் பிடியுங்கள்!" என்று கூச்சலிட்டார்.

அடுத்த கணத்தில் ஒரு மாபெருங் கூட்டமே திரண்டெழுந்து ஆலிவரைச் சுற்றி வளைத்துக் கொண்டது. கூட்டத்திலிருந்த ஒரு முரடன் தன் கையிலிருந்த கம்பினால் ஆலிவர் மண்டையிலடிக்க அடி தாளாமல் அவன் தரைமீது விழுந்தான். அவன் வாயினின்றும் குருதி பெருக்கெடுத்தது. சட்டை முழுதும் புழுதி கப்பிக்கொண்டது.

அப்போது கூட்டத்தைப் பிளந்துகொண்டு உள்ளே நுழைந்த காவல் அலுவலர்—போலீஸ் அதிகாரி—ஒருவர், ஆலிவரைப் பிடித்துத் தூக்கி நிற்க வைத்தார். ஆலிவரின் உடல் அச்சத்தால் ஆடியது; நின்று நின்று பெருமூச்சும் வந்தது; கண்கள் மிரட்சியைக் காட்டின; வியர்வை

சட்டையைத் தெப்பமெனநனைத்துவிட்டது! திகிலால் வாயடைத்து ஊமையாய் நின்றான் ஆலிவர்.

சிறிது நேரம் கழிந்ததும் காவல் அலுவலர் ஆலிவரைப் பிடித்திழுத்துக் கொண்டு காவல் நிலையத்தை யடைந்தார். கைக்குட்டையைப் பறிகொடுத்த அந்த முதியவரும் காவலர் ஆணைப்படி அவரைப் பின் தொடர்ந்தார்.

காவலர் நிலையத்தினுள், நீதி மன்றத் தலைவர் முன் ஆலிவர் நடுங்கிக்கொண்டே நின்றான். நீதி மன்றத் தலைவர், பொருளை யிழந்த அந்தப் பெரியவரை நோக்கி, "உமது பெயர் என்ன?" என்று வினவினார்.

"ப்ரௌன்லோ."

"உமது குற்றச்சாற்றென்ன?"

"என் கைக்குட்டை காணாமற் போனதும் நான் திரும்பிப் பார்த்தேன். இந்தச் சிறுவன் ஓடிக் கொண்டிருந்தான். இவனைப் பின் தொடர்ந்து நான் ஓடினேன்....இவன் என் சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்ததை நான் பார்க்கவில்லை........அவ்வளவுதான் நான் சொல்லக்கூடும். இச்சிறுவன் திருடனல்லவென்று நீதி மன்றத் தலைவர் நினைத்து இவனை விடுதலை செய்தால் நான் பெரிதும் மகிழ்வேன். திருடர்களுடன் தொடர்பு கொண்டவனாக இவன் இருக்கக்கூடுமென்று நீதித் தலைவர் ஒருகால் கருதினும், இவன்பால் அருள் புரிய வேண்டுமென்பது என் வேண்டுகோள்."

"சட்டம் எனக்குத் தெரியும்....குற்றவாளிகளை எப்படி நடத்த வேண்டும், அவர்களுக்கு என்ன தண்டனை விதிக்க வேண்டும், என்பனவற்றைக் குறித்து எனக்கு யாரும் கருத்துரைகள் வழங்கல்

வேண்டாம்........உம்....சரி....இச்சிறுவனுக்கு மூன்று திங்கள்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துளேன்....சிறைக்கு இவனை இழுத்துச்செல்லுங்கள்."

நீதி மன்றத் தலைவரின் ஆணைப்படி, பணியாளர்கள் ஆலிவரைக் கைதிக் கூண்டினின்றும் கீழே இறக்கிச் சிறைக்குக் கொண்டு செல்ல ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தபோது, "நிறுத்துக! நிறுத்துக! அவனைச் சிறைக்கு அனுப்பல் வேண்டாம்! இறைவன் பெயரால் மன்றாடுகிறேன்; ஒரு கணம் நிறுத்துங்கள்" என்று கத்திக்கொண்டே மூச்சு வாங்க ஓடி வந்த ஒருவன் நீதி மன்றத்தினுள் விரைவாக நுழைந்தான்.

"என்ன செய்தி? யார் இவர்? இவரைப் பிடித்து வெளியே தள்ளுங்கள்" என்று சீற்றத்துடன் இரைந்தார் நீதிபதி.

"நான் சொல்லப் போவதைக் கேட்டுத்தான் ஆக வேண்டும். என்னை எவராலும் வெளியேற்ற முடியாது. நான்தான் அந்தப் புத்தகக் கடையின் உரிமையாளன். நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் யானறிவேன். மன்றத் தலைவர்களே! என் உண்மைச் சொற்களுக்குச் செவிசாயுங்கள். மறுக்க வேண்டாம். மறுத்தால், நீங்கள் ஏந்தியுள்ள நீதிக்கோல் கோடும்; தங்களைப் பழி வந்து சூழும்" என்று உருக்கமும் உறுதியும் கலந்த குரலில் விண்ணப்பம் செய்துகொண்டான் புத்தகக் கடைக்காரன்.

உண்மைக் குரலின் முறையீட்டை மறுக்க நீதித் தலைவரால் இயலவில்லை.

"அப்படியானால் நீர் முன்னரே ஏன் இங்கு வரவில்லை?"

"கடையினைக் கவனித்துக்கொள்ள ஒருவரு மில்லை; ஐந்து நிமிடங்களுக்கு முன்னர்த்தான் உதவி கிடைத்தது. உடனே ஓடோடி வருகிறேன்."

"சரி, உண்மையைச் சொல்லும்."

"இதோ நின்றுகொண்டிருக்கும் இச்சிறுவ னுடன் வேறு இரு பையன்கள் என் கடை முன், தயங்கித் தயங்கி நின்றுகொண்டிருந்தனர். இந்தப் பெரியவர் என் கடையிலிருந்து ஒரு நூலினை வாங்கிப் படித்துக் கொண்டிருந்தார். அந்த இருவரில் ஒரு பையன் இவர் சட்டைப் பையிலிருந்த கைக் குட்டையைத் திருடி மற்றவனிடம் கொடுத்த பின் இருவரும் ஓடிவிட்டனர். சிறிது தொலைவில் நின்று கொண்டிருந்த இவன் அவர்கள் செயலினைக் கண்டு அச்சத்தால் கல்லாய் நின்றுவிட்டான். இதுதான் உண்மை! உண்மை!! உண்மை!!!"

"பையனை யான் விடுதலை செய்துவிட்டேன். இனி அனைவரும் இங்கிருந்து வெளியேறலாம்."

விடுதலை பெற்ற ஆலிவர் மன்றத்தினை விட்டு வெளியே வந்தான். தன் நன்றியறிதலை எப்படித் தெரிவித்துக் கொள்வதென அறியாமல், ஆலிவர் தெளிந்த முகத்துடன் அந்த முதியவரையும் நூலகத் தாரையும் மாறி மாறிப் பார்த்தான். அந்தப் பார்வையில் நன்றி யுணர்வு மலர்ந்திருந்தது.

ப்ரௌன்லோ ஆலிவரை அணைத்துக்கொண்டு, "அப்பாவிப் பயலே! அகப்பட்டுக்கொள்ள விருந் தாயே!" என்று அன்பு ததும்பப் பேசினார். விரைவில் ஒரு வண்டியினைக் கொணரச் செய்து, ஆலிவரை ஏற்றிக்கொண்டு பெண்டான்வில்லி என்னுமிடத்திலிருந்த தம் இல்லத்துக்குப் புறப் பட்டார்.

ஓர் உளச் சுமையினை யிறக்கிவிட்ட ஆறுதலும், நற்செயல் ஒன்று ஆற்றியதனால் உண்டாகும் உள நிறைவும் அப்போது அவருக்கு ஏற்பட்டன.

"இந்தச் சிறுவனைப் பார்த்தால், என்னையும் அறியாமலே இவன்பால் எனக்கு அன்பும் அக்கறையும் இரக்கமும் உண்டாகின்றன. என் உள்ளம் தானாகவே நெகிழ்கின்றது. இவனை எங்கோ எப்பொழுதோ பார்த்ததாக ஒரு நினைவுக் கீறல் நினைவுக்கு வருகிறது."—இவ்வாறு ப்ரௌன்லோவின் சிந்தனைத் திரை பிரிந்து, கடந்தகாலச் செய்திகளைக் கண்முன் காட்டப் பெரு முயற்சி செய்து கொண்டிருந்தபோது, ஊர்தி ஒரு வீட்டின் முன் நின்றது. அவர் சிந்தனைத் தொடரும் அவ்வளவில் அறுந்தது.

## 7. உருவப் படம்

ப்ரௌன்லோ, ஆலிவரை வண்டியினின்றும் மென்மையாக இறக்கி உள்ளே தூக்கிச் சென்று ஒரு படுக்கையில் படுக்கவைத்தார். முதலில் சாதாரணமாக ஆலிவரைத் தாக்கிய காய்ச்சல், விரவர நஞ்சு போல் ஏறியது. ஆலிவர் தன்னினைவிழந்து பல நாட்கள் படுக்கையிற் கிடந்தான். சிறந்த மருந்தும், உயர்ந்த பாதுகாப்பும், நல்ல உணவும், இவற்றினுக்கும் மேலாக, அவ்வீட்டுக்காரர் அவன்மீது பொழிந்த தண்ணளியும் சாவின் பிடிப்பினின்றும் அவனை மீட்டன. ஒரு நாள் ஆலிவர் தன் கண்களைத் திறந்தான். அறையில் யாருமில்லை. அவனுக்குப் பேச வேண்டும் போலிருந்தது.

"நான் இப்போது எங்கிருக்கிறேன்? இது யாருடைய வீடு? நான் முன்னர் இருந்த இடம் இது வல்லவே?" என்று ஆலிவர் ஈனக் குரலில் தனக்குத்

தானே பேசிக்கொண்டான். அப்போது, திரையினை விலக்கிக்கொண்டு அங்கு வந்த ஒரு மூதாட்டி (அவர் பெயர் பெட்வின் என்பது. அவர் அந்த மாளிகையின் தலைமை வேலைக்காரி.) "குழந்தாய்! பேசாமல் படுத்திரு! பேசினுல் மறுபடியும் காய்ச்சல் வந்துவிடும்; உன் உடல் சீர்கெட்டுளது" என்ருள்.

"அம்மையே! உங்களது இன்னருள்தான் எளியேனை, மீட்டும் இம்மண்ணுலக மனிதனுக்கியுளது. இப்போது என்னுடல் பெரிதும் நலம் பெற்றுள்ளது. உங்களுக்கு என் நன்றியறிதலை எங்ஙனம் புலப்படுத்திக்கொள்வது என்பதறியாமல் திண்டாடுகிறேன்" என்று ஆலிவர், தடுமாறிக்கொண்டே பேசினுன். ஆலிவர் பெட்வின் அம்மையுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவனுக்கெதிரில் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு படத்தை அவன் அடிக்கடி பார்ப்பதை அம்மூதாட்டி கவனிக்கத் தவறவில்லை. படங்களைப் பார்க்கச் சிறுவர்கள் விரும்புவார்கள் என்ற உண்மையினை உணர்ந்திருந்த பெட்வின் அம்மையார் ஆலிவரை நோக்கி, "குழந்தாய்! படங்கள்மீது உனக்கு ஆசையா?" என்று சிரித்துக்கொண்டே வினவினுள்.

"உங்கள் வினுவுக்கு விடை பகர எனக்குத் திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனுல், அந்தப் படத்தில் காணப்பெறும் அப் பெண்மணியைப் பாருங்கள்! அந்த முகத்தில்தான் எவ்வளவு அமைதி! உலகிலுள்ள சோகம் அவ்வளவும் உருண்டு திரண்டு அவள் கண்களில் தோய்ந்திருப்பதுபோல் தோன்றுகிறது. அது கற்பனை ஓவியமா அல்லது யாரேனும் ஒருவரது உருவப் படியா?" என்று கேட்டான் ஆலிவர்.

"அது எனக்குத் தெரியாது."

"அப்படத்திலுள்ள மாதரசி என்னையே நோக்குவதுபோல் எனக்குப் படுகிறது. அதனைப் பார்க்குந்தோறும் என் இதயத்துடிப்பு மிகுதிப்படுகிறது. அது உயிருடனிருப்பது போன்றும் என்னுடன் பேச விரும்புவது போன்றும் நான் நினைக்கிறேன்."

இவ்வாறு ஆலிவரும் அந்த அம்மையும் பேசிக்கொண்டிருக்கையில் ப்ரௌன்லோ அறையினுள் வந்தார். அவர் ஆலிவரை நோக்கி, "ஆலிவர் உடம்பு எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்.

"உங்கள் பேரருள் எனக்கு மறுவாழ்வு அளித்து விட்டது! நான் பிழைத்துக்கொண்டேன்" என்று ஆலிவர் தன் உள்ளக் கனிவு விளங்கச் சொன்னான்.

ப்ரௌன்லோ ஆலிவருடன் உரையாடிக்கொண்டிருந்தபோது, அவர் பார்வை சுவரில் தொங்கிக்கொண்டிருந்த அந்தப் படத்தின்மீது பட்டது. படத்திலுள்ள உருவத்தையும் ஆலிவரின் முகத்தையும் பன்முறை மாறிமாறிப் பார்த்தார்! அப்படத்தின் உயிர் வடிவாகவே ஆலிவர் அவர் கண்களுக்குத் தோற்றமளித்தான். இருவரது கண்கள், காதுகள், தலைகள், உதடுகள் ஆகிய எல்லாம் ஒரே அச்சில் வார்த்து, இரு கூறுகளாகப் பகிர்ந்த மாதிரியேயிருந்தன. ஆலிவரின் நெற்றிக் கோடுகளிற்கூட, சிறிதும் வேறுபாடில்லை. அவ்வளவு ஒற்றுமை இருவருக்கும். ப்ரௌன்லோ, தம்மையும் அந்தப் படத்தையும் பன்முறைகள் பார்த்துப் பார்த்து வியப்படைவதைக் கண்ட ஆலிவர் ஒன்றும் புரியாமல் வெருட்சியடைந்து படுக்கையிற் சாய்ந்தான்.

# 8. ஆலிவரைத் தேடல்

சென்ற சிறுவர்கள் திரும்பவில்லையே என்ற ஏக்கத்துடன் பேகின் தன்னறையினுள் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தான். அப்போது ஜேக் டாக்கின்சும் சார்லிபேட்ஸும் தலைகளைத் தொங்கப் போட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தனர். அவர்களுடன் ஆலிவரைக் காணுத பேகின் ஏமாற்றமடைந்து, "எங்கே, ஆலிவர்? எங்கே அவன்?" என்று உறுமினுன். பேகின் வினுவுக்கு விடையளிக்காமலே டாக்கின்சும் சார்லி பேட்சும் ஒருவர் முகத்தையொருவர் பார்த்தனர். பேகின் என்ன செய்வானுேவென்று இருவருக்கும் உள்ளூர அச்சந்தான்.

"ஆலிவர் என்ன வானுன்? உண்மையைச் சொல்லாவிட்டால் உன் கழுத்தைத் திருகிவிடுவேன்" என்று இரைந்துகொண்டே பேகின் டாக்கின்சின் தோள்களைப்பற்றி உலுக்கினுன். டாக்கின்ஸைவிடச் சார்லி அறிவாளி. அடுத்தபடியாகத் தனக்கும் அதே பரிசு கிடைக்கும் என்பதை யூகித்தறிந்துகொண்டு தொப்பென்று தரைமீது விழுந்து, "ஐயோ! ஐயோ!" வென்று கத்தத் தொடங்கினுன். பேகின் ஒரு பனங்காட்டு நரி. சார்லி எழுப்பிய சலசலப்புக்கு அவனு அஞ்சுவான்?

"சொல்லப் போகிருயா? இல்லையா?" என்று கேட்டுக்கொண்டே, டாக்கின்சு கன்னத்தில் ஓர் அறை அறைந்தான் பேகின்.

"நான் என்ன செய்வேன்? காவலர்கள் (போலீஸ் காரர்கள்) அவனைப் பிடித்துக்கொண்டு விட்டார்கள்" என்று சொல்லிக்கொண்டே டாக்கின்சு சிறிது பின்னடைந்து மேலும் தனக்கு அடி விழுமானுல் அதனைத் தடுத்துக்கொள்ள மேஜைமீதிருந்த ஓர்

கரண்டியினை எடுத்தான். சார்லியோ உரத்த குரலில் ஓயாமல் தன் புலம்பலை நீட்டிக்கொண்டிருந்தான்.

அவ்வேளையில், "என்ன! அறையில் பெரும்புயல் வீசுகிறது போலிருக்கிறதே!" என்ற குரல் அறையின் வெளியேயிருந்து கேட்டது.

"ஏன் வெளியே நிற்கிறாய்? உள்ளே வா! உன் ஆசிரியரைக் காண உனக்கு வெட்கமாயிருக்கிறதா?" என்று அக் குரலுக்கு விடை கொடுத்தான் பேகின்.

உள்ளே புகுந்த ஆசாமிக்கு முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலிராது. ஆள் வாட்ட சாட்டமாகத்தானிருந்தான். அவனுடன் ஒரு நாயும் உள்ளே நுழைந்தது.

"என்ன செய்கிறாய்? பையன்களை அடிக்கிறாயா? பேராசைப் பேயே! உனக்கு எவ்வளவு கொண்டு வந்து கொட்டினாலும் விடியாது. அவர்கள் உன்னைச் சும்மா விட்டிருக்கிறார்கள்! நானாயிருந்தால் உன்னைக் கொன்று போட்டிருப்பேன்" என்று ஆத்திரத்துடன் பேசினான் பில்ஸ்சைகஸ். அதுதான் உள்ளே நுழைந்தவனது பெயர். "பில்!....இரையாதே! நடந்ததனைக் கேள்" என்றான் பேகின் தணிந்த குரலில். ஆசிரியனுக்கு அந்த மாணாக்கனிடத்தில் அவ்வளவு அச்சம்.

ஆலிவர் வெளியே அனுப்பப்பட்டது முதல் சிறைப்பட்டது வரையில் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் பில்ஸ்சைகசுக்குத் தெளிவாய்த் தெரிவிக்கப்பட்டன. "நம்மை ஆலிவர் காட்டிக் கொடுத்து விடுவானோ என்னவோ?" என்று கவலையுடன் பேகின் கேட்டான். "அப்படியும் நடக்கலாம். அப்படி நடந்தால் நாம் அனைவரும் கூண்டோடு அழிய வேண்டியதுதான். காவல் நிலையத்தில் என்ன நடந்தது. ஆலிவரின் கதி யாதாயிற்று என்று நாம் உடனே தெரிந்துகொள்ள வேண்டும்" என்றான் பில்,

அப்போது அறையினுள் நுழைந்த இரு பெண்களின் வருகை, அங்கு நிகழ்ந்துகொண்டிருந்த பேச்சினுக்கு ஓர் உரம் ஊட்டியது.

"நான்சி! நீ தக்க தருணத்தில் வந்துள்ளாய்! நீ பெண்ணினத்தின் அணிகலம். உன் திறமைக்கு உன் தோற்றமும் பேச்சும் உறுதுணைகளாகும். நீ உடனே காவல் நிலையத்துக்குச் சென்று, ஆலிவர் என்ன ஆனுன் என்று மந்தணமாக அறிந்துவரல் வேண்டும்" என்று அங்கிருந்த இரு பெண்களுள் ஒருத்தியைப் பார்த்துப் பேகின் கேட்டுக் கொண்டான்.

அவ்விரு பெண்களும் அத் திருட்டுக் கூட்டத்தாரின் பொறியிலகப்பட்ட பறவைகள் என்பதனைக் கூறல் வேண்டாம்.

காவல் நிலையத்துக்கு நேராகச் சென்ற நான்சி, காவல் நிலையத் தலைவரிடம், குற்றவாளியெனக் கொணரப்பெற்ற ஆலிவர் தனது இளைய உடன் பிறந்தவனென்று அறிவித்து அவனைப் பற்றிய செய்திகளை வினவினுள். ஆலிவருக்குத் திடீரெனக் காய்ச்சல் வந்தது, அவன் குற்றவாளியல்லவென்று விடுவிக்கப்பெற்றது, நினைவிழந்த நிலையில் அவனைக் கைக் குட்டையினை யிழந்த பெரியவர் பெண்டான் வில்லி என்னுமிடத்துக்குத் தம்முடன் எடுத்துச் சென்றது ஆகிய செய்திகளை யறிந்துகொண்டு வந்து பேகினிடம் அறிவித்தாள்.

நான்சி கூறிய செய்திகளை அறிந்துகொண்டபின் பில்ஸ்கைஸ், அவ்விடத்திலிருந்து தன் நாயுடன் அகன்முன்.

"சார்லி! டாக்கின்சு! நான்சி! நீங்கள் மூவரும் எவ்விதத்திலாவது ஆலிவர் இருக்குமிடத்தை அறிந்துவந்து எனக்குத் தெரிவிக்கவேண்டும். இல்லையாஞல் நாம் அனைவரும் இல்லையாக வேண்டும்.

எவ்வளவு பணம் செலவானாலும் அதனைப் பற்றிக் கவலையில்லை. உங்களுக்குத் தேவைப்படும் பணத்தை இப்போது தருகிறேன்'' என்று சொல்லிக்கொண்டு பேகின் ஒரு பெட்டியினைத் திறந்து மூவருக்கும் போதுமான பணம் கொடுத்தான்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட மூவரும் அறையை விட்டு வெளியேறினர்.

## 9. கிரிம்விக் வருகை

இப்போது ஆலிவர் முழு உடல்நலம் பெற்று விட்டான், சோர்வின்றித் தொடர்ந்து பேசவும், வீட்டினுள் இங்குமங்கும் நடமாடவும் முடிந்தது. ப்ரௌன்லோ அவனுடன் தனிமையில் பேச விரும்புவதாகப் பெட்வின் அம்மையார் ஒரு நாள் மாலை ஆலிவரிடம் அறிவித்தார். உடனே ஆலிவர், ப்ரௌன்லோவிருந்த தனியறையினுள் நுழைந்து அடக்கமாக ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான்.

''ஆலிவர்! இப்போது யான் சொல்லப் போவதனைக் கருத்துடன் கேட்கவேண்டும். சிறிதும் ஒளிவு மறைவின்றி என் வினாக்களுக்கு விடை பகரத் தயங்கக் கூடாது. என்ன? தெரிகிறதா?........'' என்று வினவினார் ப்ரௌன்லோ.

அவரது பேச்சுக்களில் பண்டைய அன்பு இயைந்திருந்ததேனும், உறுதிப்பாடும், உண்மையினை அறிய வேண்டுமென்ற அவாவும் புலப்பட்டன. சிறிது கடுமையான எச்சரிக்கையும் கலந்திருந்தது.

''பெருந்தகையீர்! நீங்கள் எதனைக் கேட்டாலும் கேளுங்கள். உண்மையினை ஒளிக்காமல் உரைக்கின்றேன். ஆனால், என் வீட்டினை விட்டு வெளியேறு'' என்ற சொற்களை மட்டும் சொல்லிவிடாதீர்கள்,

நான் திக்கற்றவன்'' என்று தழுதழுத்த குரலில் கெஞ்சினுன் ஆலிவர். அப்போது அவன் கடைக் கண்களில் நீர் திரண்டு நின்றது.

''உன்னை வெளியேற்றுவதற்குரிய செயலினை நீயாகத் தேடிக்கொண்டாலன்றி, யாளுக என் வீட்டினை விட்டு வெளியேற்ற மாட்டேன். இது உறுதி.''

''அந்த வாய்ப்பினை யான் ஒருநாளும் தங்களுக் குத் தர மாட்டேன்.''

''யான் விரும்புவதும் அஃதே. உன்னைப் பற்றி யறிய இதுகாறும் யான் மேற்கொண்ட முயற்சிகள் யாவும், நீ என்னிடத்தில் முன்னர்த் தெரிவித்தபடி, நீ ஒரு திக்கற்ற சிறுவன் என்பதனை மட்டும் உறுதிப் படுத்தியுள. எனினும், உன் வரலாற்றினைப் பற்றிய விளக்கங்களை - முதலில் நீ எங்கிருந்து இலண்டனுக்கு வந்தாய்? உன்னை வளர்த்தவர் யார்? நான் உன்னை முதலிற் கண்டபோது உன்னுடனிருந்த அந்தத் திருட்டுப் பயல்கள் குழுவினில் நீ எங்ஙனம் சேர்ந் தாய்? என்பன போன்ற செய்திகளை மறைக்காமல், மாற்றுமல், குறைக்காமல், கூட்டாமல் உள்ளவாறே உரைக்கவேண்டும். உண்மையினை உரைப்பின், யான் உயிருடன் உள்ள வரையில் உன்னைக் கைவிடேன்.''

தான் அறிந்தவரையில் தன் நினைவிலிருந்த வற்றை ஆலிவர் ப்ரௌன்லோவுக்குக் கூறிக் கொண்டு வருகையில் கிரிம்விக் என்பவர் அறை யினுள் நுழைந்தார்.

இடையில், கிரிம்விக்கினைப் பற்றிச் சில சொற்கள். கிரிம்விக் ப்ரௌன்லோவின் நீண்ட கால நண்பர்; பள்ளித் தோழர்; சிறந்த வழக் கறிஞர்; எதனையும் ஐயக் கண்கொண்டு நோக்கு

பவர்; சிறியதனையும் பெரியதெனச் செய்துவிடுபவர்; நகைச்சுவை யறியாதவர்; தனித்து இருவர் உரை யாடும்போதும் எதிர்க் கட்சியினராகத் தம்மை யேற்றுக்கொண்டு வாது புரிபவர்: தம் பேச்சுக் கிடையில், 'நான் சொல்லுகிறபடி நடக்காவிடின் என் காதுகளையறுத்துக் கொள்ளுகிறேன்' என்று அடிக்கடி சூளுரை சொல்லுகிறவர்; ஆனால், ஒரு நாளும் காதுகளை அறுத்துக் கொள்வாதவர்; எப் போதும் தம் கையினைவிட்டு விலகாத கைத்தடி யினைத் தரையில் தட்டிக்கொண்டே யிருப்பவர். அவரது பேச்சுக்கள் வன்மை யுடையனவாகத் தோன்றும். ஆனால், அவர் உள்ளம் பெருமை யுடையது.

உள்ளே நுழைந்த கிரிம்விக், ப்ரௌன்லோ வினைப் பார்த்து, "பையன் யார்?" என்று வினவினார்.

"இவன்தான் நான் சொன்ன ஆலிவர்" என்றார் ப்ரௌன்லோ.

"பையா! உடல்நலம் எப்படியுளது?" என்று கிரிம்விக் ஆலிவரை நோக்கிக் கேட்டார்.

"நன்றி! பெரிதும் நலமடைந்துளது" என்றான் ஆலிவர்.

"பையன் எப்படி? நல்லவனாகத் தெரியவில் லையா?" என்று இடையில் ஒரு கேள்வி கேட்டார் ப்ரௌன்லோ கிரிம்விக்கினைப் பார்த்து.

"எனக்குத் தெரியாது."

"என்ன?....தெரியாதா?....உம்ம்...."

பேச்சு நேர்மாறாகத் திரும்பிவிடுமோவென்ற அச்சத்தில் ப்ரௌன்லோ அவ்வளவில் தம் வினாவினை நிறுத்திக்கொண்டு, ஆலிவரை வெளியே அனுப்பி விட்டுத் தங்களுக்குச் சிற்றுண்டி கொணருமாறு பெட்வின் அம்மையாரை ஏவினார்.

இருவரும் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருக்கையில் கிரிம்விக் ப்ரௌன்லோவினைப் பார்த்து, "நண்பரே! உமது வீட்டில் உம் உடைமைகள் திருடு போகாமலிருக்கின்றனவா? கரண்டிகள், கண்ணாடிகள், தட்டுகள் முன்னிருந்த கணக்குப்படி குறையாமலிருக்கின்றனவா? இன்றில்லாவிடினும் சில நாட்கள் சென்றேனும், வேலைக்காரி உம்மிடம் வந்து, 'இது காணவில்லை; அது காணவில்லை' என்று காணாமற் போன பொருள்களின் பட்டியலை நீட்டுவாள். அப்போது அறிவீர் ஆலிவரின் பண்பினை" என்று தமக்கே இயல்பான ஐயவுணர்ச்சியினை வெளியிட்டார்.

கிரிம்விக்கின் உளப்போக்கினைப் ப்ரௌன்லோ நன்கறிந்தவராதலால், அவர் உரைகளை மறுத்துரைப்பதில் பயனில்லையென்று ஒன்றும் பேசாமல் உண்டு கொண்டிருக்கையில், பெட்வின் அம்மையார் வந்து புத்தகக் கடைப் பையன் புத்தகக் கட்டொன்றினைக் கொடுத்துள்ளதாகச் சொன்னார்.

"பையனைச் சிறிது நிறுத்திவை. கடைக்காரனுக்குப் பணம் தரல் வேண்டும். அல்லாமலும் வேறு சில புத்தகங்களைத் திருப்பியனுப்பல் வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தார் ப்ரௌன்லோ.

"பையன் முன்னரே சென்றுவிட்டானே!" என்றார் பெட்வின்.

"ஏன்? ஆலிவரிடம் புத்தகங்களையும் பணத்தையும் கொடுத்தனுப்பலாமே. அவன்தான் நேர்மையுடையவனாயிற்றே!" என்று குறுக்கே பேசிய கிரிம்விக், குறும்புச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே தம் கருத்தினை அவர்களுக்குத் தெரிவித்தார்.

அதே வேளையில் அங்கு வந்த ஆலிவர், "ஆம்; என்னையனுப்புங்கள். ஐயா! நான் ஓடிச் சென்று

கொடுத்துவிட்டுச் சில நொடிகளில் திரும்புகிறேன்" என்று வேண்டினான். தன்னைப் புரந்தருகின்றவர்களுக்கு எங்ஙனமேனும் பணிபுரிய வேண்டுமென்பது ஆலிவரது ஒரே உட்கோள்.

சாதாரண சமயமாயிருந்தால், ப்ரௌன்லோ ஆலிவரை வெளியேயனுப்ப விரும்பியிருக்கமாட்டார். ஆனால், ஆலிவரைப்பற்றிக் கிரிம்விக் கொண்டுள்ள கருத்து, பிழையானதென்பதனை அவருக்குச் சுட்டிக்காட்ட வந்துள்ள வாய்ப்பினை நழுவ விடக்கூடாதென்ற துடிப்பில், ஆலிவரிடம் புத்தகங்களையும், கடைக்காரனுக்குத் தரவேண்டிய பணத்தையும் கொடுத்துப் பத்து நிமிடங்களில் மீளுமாறு சொல்லி விடுத்தார்.

ஆலிவரின் தலை மறைந்ததும் கிரிம்விக், "நண்பரே! நீர் குறித்துள்ள பத்து நிமிடங்களல்ல; பத்து மணிகள் சென்றாலும், பையன் திரும்பமாட்டான். ஆலிவருக்கும், புத்தகங்களுக்கும் பணத்துக்கும் நீர் இனிமேல் தலை முழுக்குப் போட்டுவிடலாம். அவன் திரும்பி வந்தால் நான் என் காதுகளை அறுத்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லித் தம் உறுதியினை நிலைநாட்டுபவரைப் போலக் கை கடிகாரத்தினைக் கழற்றி மேசைமேல் ப்ரௌன்லோ முன் வைத்தார்.

நண்பர்கள் இருவரும் தத்தம் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் வாய் பேசாமல் எதிரெதிராக அமர்ந்திருந்தனர். இருவருக்குமிடையிலிருந்த கடிகாரத்தின் முட்கள் விரைவாக நகர்ந்து கொண்டிருந்தன. மாலைப்பொழுது மங்கி, இருள் எங்கும் அழுத்தமாகப் பரவி வந்தது. நிமிடங்கள் மணிகளாயின. ஆனால், ஆலிவர் திரும்பவில்லை. ப்ரௌன்லோ முகத்தில் கவலை படர்ந்தது. கிரிம்விக் முகத்தில் வெற்றிக்குறி வில்லிட்டது.

# 10. ஆலிவர் கடத்தப்படல்

புத்தகக் கட்டினை எடுத்துக்கொண்டு ஆலிவர் கடைக்கு விரைந்து கொண்டிருந்தான். அவன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது, தன்னைத் தம் தனையனிலும் மேலாகக் கருதிப் புரந்துவரும் ப்ரௌன்லோ பெருமகனுருக்குச் சிற்றளவிலாவது தான் பயன்பட நேர்ந்ததே என்ற எண்ணம்தான் ஆலிவரின் மகிழ்ச்சிக்குக் காரணம். மகிழ்ச்சி மீதூர்ந்த மயக்கத்தில் ஆலிவர் கடைக்குச் செல்லும் வழியினை மறந்து வேறொரு சாலையிற்புகுந்து நடையும் ஓட்டமுமாக விரைந்து கொண்டிருக்கையில், "தம்பி! தம்பி! நில்! நில்! எங்கேயடா ஓடுகிறாய்" என்று யாரோ கூச்சலிடுவது கேட்டுத் திகைத்துத் திரும்புவதற்குள் இரு கரங்கள் அவனது கழுத்தினை யிறுகக் கட்டிப் பிடித்தன.

"யார் என் கழுத்தினைக் கட்டுவது? கழுத்தைக் கட்டாதே! நான் போகவேண்டும்! என்னை ஏன் பிடித்து நிறுத்துகிறாய்?" என்று சீறித் திமிறினான், ஆலிவர்.

"ஓ ஆலிவர்! ஆலிவர்!! துட்டப்பயலே! உன்னை எங்கெல்லாம் தேடுவது? எங்களுக்கு எவ்வளவு தொல்லை கொடுத்துவிட்டாய்! அன்புள்ள தம்பி! இப்போதாவது வீட்டுக்கு வா! பிடிவாதம் செய்யாதே!" என்று மேலும் மேலும் கூச்சல் போட்டாள் ஆலிவர் கழுத்தினைக் கட்டிக்கொண்டிருந்த அந்தப் பெண். அவள் போட்ட இரைச்சலைக் கேட்டு ஒரு சிறு கூட்டம் நடுத்தெருவில் கூடி விட்டது. கூட்டத்திலிருந்த ஒரு பெண், "என்ன செய்தி? யார் இவன்?" என்று பரபரப்புடன் வினவிக் கொண்டே ஆலிவரின் தோள்களைப் பிடித்து உலுக்கினாள்.

"அம்மா! இவன் என் தம்பி! ஒரு திங்களுக்கு முன் என் பெற்றோர்களைத் தவிக்கவிட்டு வீட்டை விட்டு ஓடித் திருட்டுப் பையன்களுடன் கூடிக் கொண்டு ஊர் சுற்றித் திரிகிறான். இவனைக் காணாமல் என் அன்னை உளம் உடைந்து வீட்டில் படுக்கையாய்க் கிடக்கிறாள். இவனை என் வீட்டுக்கு அனுப்பித் தாருங்கள்" என்று புலம்பினாள் ஆலிவரைப் பற்றிக் கொண்டிருந்த பெண்.

தன்னைப் பிடித்திருப்பவள் யாரென அறிய ஆலிவர் அவள் முகத்தினைக் கூர்ந்து நோக்கியதும், "ஓ! நீயா! நான்சி" என்று வியப்புடன் கூவினான்.

"பார்த்தீர்களா ஐயா! பார்த்தீர்களா! இவன் என் தம்பியில்லாவிட்டால் என் பெயர் இவனுக்கு எப்படித் தெரியும்? இவனை என்னுடன் நீங்கள் கூட்டியனுப்பாவிடில், என் பெற்றோர்கள் பிரிவுத் துன்பம் பொறாமல் செத்துப் போவார்கள். சிறிது அருள் செய்யுங்கள்" என்று உடன்பிறந்த தமக்கையைப்போல் விம்மினாள் நடிப்புக் கலையில் கை தேர்ந்த நான்சி.

அதே வேளையில் எதிர்க் கடையிலிருந்து தன் வெள்ளை நாயுடன் அங்கு வந்த பில்ஸ்சைகஸ், "அடா ஆலிவர்! எங்கேயடா இத்தனை நாட்கள் ஓடிவிட்டிருந்தாய்? இப்போது நான்சியுடன் உன் வீட்டுக்குப் போகிறாயா? இல்லையா?" என்று கேட்டுக்கொண்டே ஆலிவரைத் தானும் சேர்ந்து பிடித்துக்கொண்டான்.

"ஐயையோ! நான் இவளது தம்பியுமல்லன்; இவள் எனது தமக்கையுமல்லள்! எனக்கு உற்றார் உறவினர் யாருமிலர். நான் ஓர் அனாதை. இவர்களுக்கும் எனக்கும் யாதொரு தொடர்புமில்லை. இநதப் பொய்யர்களிடமிருந்து என்னை விடுவியுங்கள் பெரியோர்களே!" என்று வெருண்டு புலம்பினான் ஆலிவர்.

பாவம்! சிறுவன் ஆலிவர் வேறென்ன செய்வான்? "இவள் உன் தமக்கையல்லவா? இவளுக்கும் உனக்கும் யாதொரு தொடர்புமில்லையா? யாரிடம் சரடு விடுகிறாய்?" என்று உறுமிக்கொண்டே, பில் தன் கையிலிருந்த தடியால் ஆலிவர் தலைமீது ஓர் அடி அடித்தான்.

"அதுதான் சரி; அடிக்கும் தடிக்கும் விஞ்சியது உலகில் ஒன்றுமேயில்லை. இழுத்துக்கொண்டு செல்லுங்கள் இந்தக் கழிசடையினை" என்று கூட்டத்திலிருந்த ஒரு கனவான் கோரப்படாமலே தம் கருத்தினை வெளியிட்டார். இதற்குமேல் கேட்கவா வேண்டும்? நான்சி ஒரு பக்கமும் பில் மற்றொரு பக்கமும் ஆலிவரைப் பற்றிக்கொண்டு இருள் மண்டிய தெருக்களின் வழியாக இழுத்துச் சென்றனர். வழியில் ஆலிவர் திமிறினான்; அழுதான்; அரற்றினான்; கூவினான். ஏனென்று கேட்பார் யாருமில்லை. ஆலிவர் தன்னை விடுவித்துக் கொள்ளச் செய்த முயற்சிக்குப் பரிசாக அவனுக்குக் கிடைத்தவை, அடியும் உதையும் வசவும்தான். ஆட்டுமந்தை போன்ற ஆராய்ச்சியற்ற மனித விலங்குகளின் எண்ணிக்கை பலத்தாலும், சூழ்நிலையின் விபரீத விளையாட்டாலும், பொய் மெய்யாவதும், மெய் பொய்யாவதும் நாம் நாளும் உலகில் காணும் காட்சிகள் என்பதற்கு ஆலிவர் வாழ்க்கையில் இப்போது நடந்த நிகழ்ச்சியே சான்று.

* * *

இரவு வந்தது. ப்ரௌன்லோ மாளிகையில் விளக்குகள் வெளிச்சத்தை எங்கும் பரப்பின; இடையிலிருந்த கடிகாரம் மணி ஒவ்வொன்றாகக் கழிவதனைக் காட்டிக்கொண்டிருக்க, இரு தோழர்களும் எதிரெதிராக வீற்றிருந்தனர். வாயிற்படியில் உட்கார்ந்திருந்த பெட்வின் அம்மையார் அவ்

விடத்தை விட்டு அசையவேயில்லை. அதற்குள் வேலையாள் தெருக்கோடி வரையில் இருபது முறைகள் சென்று ஆலிவர் வருகிருஞ என்று பார்த்துவிட்டு வந்தான். ஆனல், ஆலிவர் திரும்பி வரும் அறிகுறியே காணப்படவில்லை.

## 11. மீட்டும் திருடர்கள் கூட்டத்தில்

நான்சியும் பில்ஸ்கைசும் ஆலிவரை இழுத்துக் கொண்டு பேகினது அறையினுள் நுழைந்தபோது, அறையிலிருந்தவர்கள் ஆலிவரை மறுபடியும் கண்ட மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்து, அவனைச் சூழ்ந்து கொண்டு கும்மாளமடித்தனர். அவர்கள் போட்ட கூச்சலால் அந்த அறையே அதிர்ந்தது.

"திருட்டுப் பயலே! அகப்பட்டுக்கொண்டாயா? ஆசிரியரே? இதோ பாருங்கள் ஆலிவரை" என்று சிரித்துக்கொண்டே சார்லஸ் பேட்ஸ் ஆலிவரை வர வேற்ருன். "ஆலிவர்! மறுபடியும் உன்னை இங்குக் காண மகிழ்கிறேன். நீ வருவதனை முன்னரே எனக்கு எழுதியிருந்தால் உனக்குத் தக்க வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்திருப்பேனே! சரி; அந்த உடை யினைக் கழற்றிவிட்டு, டாக்கின்ஸ் தரும் உடையினை அணிந்துகொள். அவன் தரப்போகும் உடைதான் இந்த விடத்தின் இயல்புக்கு ஏற்றது" என்று பேகின் குத்தலாக ஆலிவரிடம் பேசிக்கொண்டிருக்கையில், டாக்கின்சு ஆலிவரின் சட்டைப் பையினுள் கையை விட்டு ஐந்து பவுன் மதிப்புச் சீட்டு (நோட்டு) ஒன் றினை வெளியே எடுத்தான். டாக்கின்சு அதனை விரிப்பதற்குள் பேகின் ஒரே தாவலாகத் தாவி அதனை அவனிடமிருந்து பறித்துக் கொண்டான். அதனைக் கண்ட பில், "பேகின்! அது எனக்கே உரியது! என்னிடம் தந்திடு" என்ருன்.

"இல்லே! அது எனக்குத்தான் உரியது! நான் உங்கள் ஆசிரியன்; தலேவன்; பில்! வேண்டுமானல் புத்தகங்களே நீ எடுத்துக்கொள்."

"அது நடக்காது! நானும் நான்சியும்தான் ஆலிவரைக் கண்டுபிடித்தோம். ஆதலால் நோட்டு எமக்கே உரியது. இல்லேயானல் இப்போதே நான் ஆலிவரைப் பழைய இடத்தில் கொண்டுபோய் விட்டுவிடுவேன். இது உறுதி."

பில்லின் மிரட்டலேக் கேட்டுப் பேகின் உண்மையாகவே நடுங்கிப் போனன். முரட்டுத்தனத்துக்கு முன் வஞ்சனே அடிபணிந்தது. இவர்கள் இருவரது சண்டையும் தனது விடுதலேக்கு வழிகோலக்கூடுமோ வென்று சிறுவன் ஆலிவரின் இள நெஞ்சம் எண்ணியது. ஆனல்; முடிவு! பேகின் கையிலிருந்த நோட்டு பில்லின் சட்டைப் பைக்குள் குடிபுகுந்தது.

அதே வேளேயில், அறையிலிருந்த பையன்கள் புத்தகங்களேத் தாறுமாருகப் போடுவதனேக் கண்ட ஆலிவர் நடுங்கிக்கொண்டே, "நண்பர்களே! கடு நோயிலகப்பட்டுச் சாகும் நிலேயிலிருந்த என்னே யேற்று ஓம்பிக் காத்த அந்த அருளாளருக் குரியன வாகும் அப்புத்தகங்கள். அவற்றைப் பாழ் படுத்தாதீர்கள்! தலேவரே! வேண்டுமானல் என்னே என் வாணுள் முழுதும் இங்கேயே சிறை செய்து வையுங்கள். ஆனல், அப்புத்தகங்களேயும் பணத்தையும் அந்தப் பெரியவருக்கு அனுப்பிவிடுங்கள். அவற்றை நான் திருடிக்கொண்டு ஓடிவிட்டதாகவே அவர் நினேப்பார். உண்ட வீட்டினுக்கு இரண்டகம் நினேக்கலாமா? செய்ந்நன்றி கொன்ற கயவனுக என்னே யாக்காதீர்கள்! அருளின் பெயரால் உங்கள் கால்களில் விழுந்து மன்றுடுகிறேன்? கெஞ்சுகிறேன். உள்ளம் உருகி யான் சொரியும் என் கண்ணீர்

உங்கள் இதயக் கதவுகளைத் திறக்காதிருக்குமா? தம் கண்ணைப்போல் என்னைக் காத்த அந்த மூதாட்டியார் என்னைத் திருடனென்று நினைப்பாரானால்....? ஐயோ! அந்த எண்ணத்தைக்கூட என்னால் தாங்கக் கூடவில்லையே?'' என்று புலம்பிக்கொண்டே ஆலிவர் தரைமீது விழுந்து பேகின் கால்களைப் பற்றிக் கொண்டான்.

ஆலிவரின் விக்கலும், விம்மலும், விண்ணப்பமும், வேண்டுதலும் காற்றில் கலந்தனவேயன்றி, கயவர்களின் கருத்தில் பாயவில்லை. அதற்குள் ஆலிவரின் புத்துடைகளை அகற்றிய டாக்கின்சு வேறுடைகளைக் கொணர்ந்து கொடுத்தான். புளினர்களின் பொறியிலகப்பட்ட புல்வாயின் கதியே ஆலிவருக்கும் அப்போது ஏற்பட்டது. ஆலிவரிடமிருந்த புத்துடைகளையும், புத்தகங்களையும், பணத்தையும் கைப்பற்றிக் கொண்டதுடன் ஒவ்வொருவரும் அவனை ஏசினார்; கேலி செய்தார்; அடித்தார்; உதைத்தார். முடிவாக அவனை அவர்கள் ஓர் இருட்டறையில் தள்ளினார்கள்.

திருட்டுக் கூட்டத்தார் அனைவரும் ஆலிவருக்கு இழைத்த இன்னல்களை அப்போது அங்கிருந்த நான்சியினால் கூடப் பொறுக்க முடியவில்லை. நான்சி திருடர்களுக்கு உடந்தையாயிருந்தாளாயினும் பெண்ணுக்குரிய இரக்கப் பண்பு முற்றும் அவள் உள்ளத்தில் வற்றிவிடவில்லை. அதற்குக் காரணம் அவளது குடிப் பிறப்பே. காலமெனும் சூறுவளி அவளையும் திருடர்களுள் ஒருவனாகிய பில்ஸ்சைகினிடம் கொண்டு தள்ளிவிட்டது. ஏனைய திருடர்களுக் கஞ்சி அவள் ஆலிவரைப் பிடித்துத் தந்தாளேனும் அவளது அன்புள்ளம் ஆலிவருக்காக இரங்கியது. இனம் விளங்காத ஒரு பற்று அவளுக்கு ஆலிவர் மீது ஏற்பட்டது.

## 12. பொய்யினுக்கு விலை

பெண்டான் வில்லி மாளிகையினை விட்டு ஆலிவர் திருடர்களால் அகற்றப்பெற்றபின் அவ்வில்லத்தினை இருள் சூழ்ந்தது; மகிழ்ச்சி வெளியேறியது. ப்ரௌன்லோ மனமுடைந்து போனார். பெட்வின் அம்மையார் தம் இதயத்தையே இழந்துவிட்டவர் போல் துடித்தார். ஆலிவரைப்பற்றி அறிய எவ்வளவோ முயன்றும் துப்பொன்றும் கிடைக்காத நிலையில், "ஆலிவர்டுவிஸ்டினைப்பற்றிய வரலாற்றினைத் தெரிவிக்கின்றவர்களுக்கோ அல்லது அவனையே அழைத்து வருகின்றவர்களுக்கோ ஐந்து பவுன்கள் பரிசளிக்கப்படும்" என்று லண்டன் நாள் இதழ்களில் ப்ரௌன்லோ விளம்பரம் செய்தார்.

தற்செயலாக அப்போது இலண்டனுக்கு வந்திருந்த பம்பில் அந்த விளம்பரத்தினைப் படித்தான். அவன் நாக்கில் நீர் ஊறியது. நேராகப் பெண்டான் வில்லிக்குச் சென்று ப்ரௌன்லோ வீட்டுக்கதவினைத் தட்டினான். கதவைத் திறந்த ஒரு சிறுமி, "நீர் யார்?" என்று வினவினாள்.

"ப்ரௌன்லோ அவர்களிடம் ஆலிவரைப்பற்றிச் சொல்ல வந்திருக்கிறேன்" என்றான் பம்பில்.

அருகில் நின்றுகொண்டிருந்த பெட்வின் அம்மையார் ஆலிவர் என்ற பெயரைக் கேட்டவுடன் ஓடோடி வந்து, "உள்ளே வாருங்கள் ஐயா! என் அருமை ஆலிவரைப்பற்றி ஏதேனும் செய்தி கிடைக்குமென்று எனக்கு உறுதியாகத் தெரியும். அன்புக்கு என்றும் அழிவில்லை" என்று சொல்லி மகிழ்ச்சியால் கூத்தாடிக்கொண்டே பம்பிலைப் ப்ரௌன்லோ முன் கொண்டுபோய் நிறுத்தினார். அப்போது கிரிம்விக்கும் ப்ரௌன்லோவுடன் உட்கார்ந்திருந்தார்.

"உட்காரும்! நாளிதழில் யான் வெளியிட்டிருந்த விளம்பரத்தைப் படித்துத்தானே நீர் வந்திருக்கிறீர்!" என்று கேட்டார் ப்ரௌன்லோ பம்பிலைப் பார்த்து.

"ஆம்."

"ஆலிவர் இப்போது எங்குள்ளான்?"

"அதனைப்பற்றி உங்களுக்குத் தெரிந்த அளவுதான் எனக்கும் தெரியும்."

"அது போகட்டும்,அவனைப்பற்றி உமக்கு என்ன தெரியும்?"

"ஆலிவரைப்பற்றி நல்லது ஒன்றுமே உமக்குச் சொல்லத் தெரியாதல்லவா?" என்று குறுக்கிட்டார் கிரிம்விக்.

"ஆலிவரைப்பற்றி நீர் அறிந்துள்ளவற்றைச் சுருக்கமாகச் சொல்லும்" என்று தம் வினவினைத் தொடர்ந்தார் ப்ரௌன்லோ.

"ஆலிவர் பிறவியிலேயே ஒரு கழிசடை; தாழ் பிறப்பினன்; ஒழுக்கங்கெட்ட பெற்றோர்களுக்குப் பிறந்தவன்; நம்பிக்கை கோறல், செய்ந்நன்றி மறுத்தல், திருடல் போன்ற இழிசெயல்களைப் பிள்ளைப் பருவம் முதலே கைக்கொண்டவன்; தன்னை அன்புடன் வளர்த்த அருளாளர்களை ஏமாற்றிவிட்டு வெளியேறியவன். உண்மை ஒன்றுண்டென்பதனைச் சிறிதும் உணராதவன்; பட்டிமாடுபோல் ஊர் சுற்றிக் கெட்டலைபவன்" என்றெல்லாம் ஆலிவரைப் பற்றி இல்லாதனவற்றையும் பொல்லாதனவற்றையும் அடுக்கித் தான் கூறியவைகளுக்குச் சான்றாக இரு கடிதங்களையும் ப்ரௌன்லோவுக்குக் காட்டினான் பம்பில்.

பம்பில் கூறியவற்றினைக் கேட்டும், அவன் காட்டிய கடிதங்களைப் படித்தும் முடிந்தபின், ப்ரௌன்லோ வெறுப்பினால் பெருமூச்செறிந்து, "நீர் கூறியன அனைத்தும் உண்மையென்றே அஞ்சு

கிறேன். ஆனால், நீர் ஆலிவரைப்பற்றி நல்ல செய்திகளைச் சொல்லியிருப்பீரானால், இப்போது அறிவித்துள்ள தொகையினும் மும்மடங்கு அதிகமாக அளிக்க முன்வருவேன்" என்று தம் ஏமாற்றத்தினை வெளியிட்டார் ப்ரௌன்லோ.

ப்ரௌன்லோ சொன்னதைக் கேட்ட பம்பில் தன் தீயூழினைக் குறித்து வருந்தினான். ப்ரௌன்லோ எதனைக் கேட்க விரும்புகிறார் என்பதனை முன்னரே தான் அறிந்திருந்தால், ஆலிவர் மீது ஒரு புகழ்க் காவியமே பாடியிருக்கலாமே என்று எண்ணித் தன்னைத்தானே நொந்துகொண்டான். நற்காலம் நழுவி விட்டதால், ப்ரௌன்லோ அளித்த அந்த ஐந்து பவுன்களைப் பெற்றுக்கொண்டு வெளியேறினான் பம்பில்.

பம்பில் போன பிறகு, ப்ரௌன்லோ சிந்தனையில் ஆழ்ந்தார். ஆலிவரைப்பற்றிப் பம்பில் தீட்டிய சொல்லோவியம் அவருள்ளத்தில் கசப்பினையும் வெறுப்பினையும் மிகுவித்தது. சிறிது பொழுது கடந்ததும் பெட்வின் அம்மையாரை அழைத்து, "அந்தப் பையன் ஆலிவர் ஒரு பெரும் போலி எத்தன் என்று இப்போதுதான் தெரிகிறது" என்றார்.

"அப்படியிருக்காது" என்றார் பெட்வின் அம்மையார்.

"அப்படி இருக்காதா? இப்பொழுதுதானே அவன் வாழ்க்கை வரலாறு இங்கு அரங்கேற்றப் பட்டது. பிறந்தது முதற்கொண்டே அவன் கை தேர்ந்த தீயோனாக வளர்ந்திருக்கிறான்."

"நான் சிறிதும் நம்பமாட்டேன், ஒருகாலும் அப்படியிராது."

"கட்டுக் கதைகளையும், அரைகுறை மருத்துவர்களையும் நம்பி உயிர் வாழும் உன்னைப்போன்ற பாட்டிகளுக்கு உண்மை எப்படிப் புலப்படும்?

அன்றே நான் எச்சரிக்கை விடுத்தேன். கேட்டாயா? பையன் தோற்றத்தைக் கண்டு மயங்கினாய்! காய்ச்சலால் அவன் துன்புற்றதைக் கண்டு கலங்கினாய். இப்போது ஏமாற்றிவிட்டான்........உம்...........படு! படு!!" என்று இடைமறித்துப் பேசி கிரிம்விக் எரிகிற கொள்ளியில் எண்ணெயை வார்த்தார்.

"போதும்! ஆலிவரைப் பற்றி நீர் விரிக்கும் நற்சான்றிதழினை மடித்துக்கொள்ளும். குழந்தைகளின் இயல்புகளைப் பற்றிப் பிரம்மச்சாரியான உமக்கு என்ன தெரியும்! நாற்பதாண்டுகளாகக் குழந்தைகளுடன் பழகிவரும் யான் அறிவேன் அவர்கள் பண்புகளை. ஆலிவர் நல்லவன்; நன்றி மறவாதவன்; பண்பட்டவன்" என்று பெட்வின் அம்மையார் சுடச்சுட விடை கொடுத்தார் கிரிம்விக்குக்கு.

"போதும் பெட்வின்! உன் வாயை மூடு. இனி, அந்தத் திருட்டுப் பயல் பெயரினை என் காதில் போடாதே! நான் உண்மையாகவே சொல்லுகிறேன்" என்று ப்ரௌன்லோ சினந்து பேசி, அவ்வுரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

ப்ரௌன்லோவின் வீட்டிலிருந்தார் அனைவரது உள்ளங்களிலும் அன்றிரவு இருள் மண்டியது. ஆனால், ஆலிவர் தன்னைப் பேணிய பெருந்தகைகளின் அன்புடைமையினையும், தன்னை அவர்களிடமிருந்து பிரித்துவிட்ட திருடர்களின் இழிசெயலினையும், தனியறையில் நினைந்து நினைந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான்.

## 13. திட்டம் உருவாதல்

**ஆ**லிவர் திருட்டுக் கூட்டத்தாருடன் மீட்டும் கூட்டப்பட்டுப் பல நாட்களாகிவிட்டன. தனக்கு விடுதலை கிட்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்தினைவிட்டு இப்போது முற்றும் அகன்றது. திருட்டுத்

தொழிலின் உயர்வினைப் பற்றியும், தான் சிறு வயது முதற்கொண்டு ஆற்றிய அரும் பெருந் திருட்டு விளையாடல்களைப் பற்றியும் பேகின் ஆலிவருக்கு ஓயாது ஓதி வந்தான். நீண்ட சிறை வாழ்வும் தன் சொற்பொழிவுகளும் ஆலிவரைக் கைதேர்ந்த திருடனாக மாற்றிவிட்டிருக்குமென்பது பேகினின் நம்பிக்கை.

ஒரு நாள் இரவு. ஊதைக் காற்று வீசிக்கொண்டிருந்ததால் குளிர் கடுமையாகவிருந்தது. தன் உள்ளத்தில் உருவாக்கியிருந்த ஒரு திட்டத்தினை விரைவில் செய்து முடிக்க விரும்பிய பேகின், பில்ஸ்சைகசின் வீட்டிற்குச் சென்றான். அப்போது நான்சியும் பில்லும் கணப்பருகே யமர்ந்து குளிர்காய்ந்து கொண்டிருந்தனர். உள்ளே நுழைந்த பேகின் பில்லை நோக்கி, "என்ன பில்! செர்ட்சியில் (ஒரு சிறு நகரம்) நாம் நடத்த வேண்டிய கொள்ளையினைப் பற்றி என்ன சொல்லுகிறாய்? எப்போது நடத்தப் போகிறாய்?" என்று ஆவலுடன் கேட்டான்.

"அந்தத் திட்டத்தைக் கை கழுவி விட்டேன்."

"விட்டு விட்டாயா? ஏன்?"

"அந்த வீட்டிலுள்ள வேலைக்காரர்கள், இருபதாண்டுகளாக அதே வீட்டில் வேலை செய்து வருகிறார்கள். அத்தனை பேரும் வீட்டுத் தலைவியிடம் நன்றியறிதலுடையவர்களாக விருக்கின்றார்கள். எவ்வளவு தொகை கையூட்டாகக் கொடுத்தாலும் யாரும் பயப்பட மாட்டார்கள்."

"மேலும் சிறிது தொகை கொடுத்தாகிலும் வெளியாரின் உதவியினைக் கொண்டு கொள்ளையைத் திட்டப்படி நடத்தியாகவேண்டும். பில்! அந்த வீட்டில்தான் எவ்வளவு செல்வம்! நல்ல வேட்டை கிடைக்குமே!"

"சில நாட்களுக்குமுன் நானும், டோபி கிரேகிட்டும் தோட்டச் சுவர் ஏறிக் குதித்து அந்த

வீட்டினை ஆராய்ந்தோம். ஒரு சிறு பலகணி தவிர மற்றவிடங்களெல்லாம் அடைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பலகணி வழியாகத்தான் வீட்டினுள் புகுந்து வாயிற் கதவினைத் திறக்க வேண்டும். பலகணி வழியாக நுழைய வேண்டுமானால், அதனளவுக்குத் தக்க சிறுவன் ஒருவன் வேண்டும்.''

''ஆலிவரைப் பயன் படுத்திக்கொள்ளலாமே'' என்று நான்சி தன் கருத்தினைப் பேச்சின் நடுவில் வெளியிட்டாள்.

''அவன் தக்கவன்தான்'' என்றான் பில்.

''சரி! எப்போது செயலில் குதிக்கப் போகிறீர்கள்?''

''நாளை நீக்கி மறுநாளிரவு.''

ஆலிவரைத் தனது விடுதியிலிருந்து நான்சி அழைத்துச் சென்று பில்லினிடம் ஒப்படைக்க வேண்டுமென்று பேகின் கூறியதை நான்சியும் ஏற்றுக்கொண்டாள். இந்தத் திட்டம் தீட்டிய பிறகு பேகின் தன்னிடத்துக்கு மீண்டான்.

## 14. பில்ஸ்கைஸ் வீட்டில்

மறுநாள் பொழுது புலர்ந்ததும், பேகின் ஆலிவரைக் கூப்பிட்டு அவனுக்குப் புதுக் கால் சட்டை, மேற் சட்டை, காலுறைகள் முதலியன கொடுத்து அவற்றினை யணிந்து கொள்ளும்படி சொன்னான். அப்போது பேகின் பேசிய பேச்சுக்களில் அன்பின் சாயலடித்தது. பேகின் காட்டும் பரிவு, ஒருகால் தனது விடுதலைக்கு முன்னோடியாக விருக்குமோ வென்றுகூட ஆலிவர் ஐயுற்றான். ஆனால், பேகின் அடுத்தாற்போல் பேசிய பேச்சுகளிலிருந்து அந்த ஐயம் அகன்றது.

"ஆலிவர்! உன்னை நான் இன்றிரவு பில்லின் வீட்டுக் கனுப்பப் போகிறேன்" என்றான் பேகின்.

பில் என்ற சொல்லைக் கேட்டவுடனே ஆலிவரின் மூச்சு ஒரு கணம் தடைபட்டது; அச்சத்தால் உடல் ஆடியது. "என்னை அவர் வீட்டிலேயே தங்க வைக்கப் போகிறீரா?" என்று கேட்டான் ஆலிவர். இதனைக் கேட்டபோது ஆலிவர் அழுது விட்டான்.

"இல்லை! இல்லை!! அஞ்சாதே! நான் உன்னை ஒரு நாளும் விடமாட்டேன். வேலை முடிந்ததும் நீ இங்குத் திரும்பிவிடலாம்" என்று அன்பு குழையப் பேசினான் பேகின்.

பேச்சு அவ்வளவில் நின்றது.

அன்றிரவு குறிப்பிட்ட நேரத்துக்கு, ஆலிவரை அழைத்துப் போக நான்சி பேகின் வீட்டுக்கு வந்தாள்.

ஆலிவர் ஒரு விளக்கினை எடுத்து நான்சியின் முகத்தினை உற்றுப் பார்த்தான், அவள் முகம் வெளிறிட்டிருந்தது. கண்கள் ஆழ்ந்த கவலையைக் காட்டின.

"உடல் நல மில்லையா?" என்று கேட்டான் ஆலிவர். ஆலிவர் கேட்ட கேள்விக்கு நான்சி விடை யளிக்காமல், "ஆண்டவர்தான் என்னை மன்னிக்கவேண்டும். இப்படி நடக்குமென்று நான் நினைக்கவே யில்லை...........ஆலிவர்! உன்னை நான் என்னுடன் அழைத்துப்போக வந்திருக்கிறேன்........ உம்........புறப்படத் தயாராயிரு" என்றாள் வேதனை கலந்த குரலில்.

"என்னை எதற்காக அழைத்துச் செல்லப் போகிறாய்?"

"எதற்காக விருந்தாலும் நீ அஞ்சாதே, உனக்குத் துன்பம் வாராது."

"எனக்கு நம்பிக்கையில்லை."

"ஆலிவர், என்னை நம்பு. முன்னர் ஒரு முறை உனக்காகப் பரிந்து பேசினேனல்லவா? உன்மீது எனக்கு உண்மையான அன்புண்டு. அதனை மெய்ப்பிக்க என் இதயத்தை வேண்டுமாயினும் பிளந்து காட்டுவேன். நான் மட்டும் இல்லையானால் உனக்கு மேலும் அதிகமாகத் துன்பங்கள் விளைந்திருக்கும். ஆனால், இப்போது உன்னைக் காப்பாற்றும் ஆற்றலற்றவளாயிருக்கிறேன். அவர்கள் உன்னை ஓரிடத்துக்கு அழைத்துச் செல்ல விருக்கின்றனர். வழியில் அவர்கள் யாது கூறினும் வாய் திறவாதே. இல்லையானால் நம்மிருவருக்கும் அழிவுதான். உனக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டதென்று நான் கேள்விப்படின் சாவினில்தான் அமைதி காண்பேன். உனக்காக நான் எவ்வளவு இன்னல்களை மறைவில் ஏற்று வருகின்றேன் என்பதனை இறைவனே அறிவான்" என்று அழமாட்டாக் குறையாய் விளக்கினாள் நான்சி. நான்சி வாயினின்றும் வெளி வந்த ஒவ்வொரு சொல்லிலும் உண்மையின் ஒலி அழுத்தமாகக் கேட்டது.

பின்னர் இருவரும் அங்கிருந்து புறப்பட்டு நள்ளிரவு அளவினுக்குப் பில்லின் இல்லத்தினையடைந்தனர், ஆலிவரைக் கண்ட பில், "பையா! வந்து விட்டாயா! மிக்க மகிழ்ச்சி" என்று சொல்லி ஆலிவரை வரவேற்றுவிட்டு, நான்சியிடம், "வழியில் பையன் ஏதாவது...." என்று பேச்சினை இழுத்தான்.

"ஒன்றுமேயில்லை. பையன் ஊமைபோல் வந்தான்" என்று பேச்சினை முடித்தாள் நான்சி.

"ஆலிவர்! நீ எவ்வாறு என்னிடம் நடந்து கொள்ளவேண்டும் என்று நான்சி உனக்குச் சொல்லியிருப்பாளே?" என்று மறுபடியும் பேச்சினைத் தொடர்ந்தான் பில்.

"ஆம்" என்று தலையை யசைத்தான் ஆலிவர். ஆலிவர் தலையினை ஆட்டியதால் உளநிறைவு பெருத பில், அவனை மேலும் அச்சுறுத்தி வைக்க விரும்பி, மேசைமீதிருந்த தன் கைத் துப்பாக்கியினை யெடுத்து ஆலிவர் கன்னத்துக்கருகே நீட்டிக்கொண்டு, "இது என்னவென்று தெரியுமல்லவா? நீ என்னுடன் வெளியேயிருக்கும் பொழுது, நானகக் கேட்டாலல்லாமல், வாய் திறக்கக்கூடாது. திறந்தால் உன் மூளை சிதறிப் போய்விடும். நீ சாவதற்குத் துணிந்தால் வேண்டிய அளவு பேசலாம்....என்ன புரிகிறதா.... நினைவிருக்கட்டும். உம்....சரி, இன்னம் நேரமிருக்கிறது....போய்ப் படுத்துக்கொள். காலையில் எழுப்புகிறேன்" என்று ஆலிவரை நன்ருக மிரட்டிப் படுக்க வைத்தான் பில்.

அச்சத்தாலும், களைப்பின் மிகுதியினுலும் உறக்கம் பிடிக்காமல் நீண்ட நேரம் படுக்கையில் புரண்ட ஆலிவர், பின்னர்க் கண்ணயர்ந்தான்.

## 15. தோல்வியுற்ற முயற்சி

மறுநாட் காலை ஐந்தரை மணியளவுக்குப் பில் ஆலிவரை யெழுப்பித் தன்னுடனழைத்துக் கொண்டு வீட்டினை விட்டுக் கிளம்பினுன். ஊரினை மூடியிருந்த இருள் விலகவில்லை. தெருக்களில் மனித நடமாட்டமும் அதிகமாகவில்லை. அவர்கள் போய்ச் சேரவேண்டிய இலக்கு வெகு தொலைவிலிருந்ததால் இருவரும் நடையும் ஓட்டமுமாகவே முன்னேறினர். பில்லின் வேக நடையுடன் ஆலிவரால் போட்டி போட முடியவில்லை. அவன் பின்னுல் தங்கித் தங்கி நடந்தான். நல்ல வேளையாக வழியில் ஒரு வண்டி செர்ட்சியினை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இருவரும் அதில் ஏறிக் கொண்டனர். பல மணி நேரம் கழிந்து, வண்டி செர்ட்சியில் நின்றபோது

மாலை கழிந்து இருள் எங்கும் சூழ்ந்திருந்தது. வண்டியிலிருந்து இறங்கிய பில் ஆலிவரைத் தன் கையிற் பற்றிக்கொண்டு, வயல்களினிடையே தனித்து நின்ற ஒரு பாழடைந்த வீட்டினுள் நுழைந்தான். கொள்ளையடிப்பதற்குத் தேவைப் படும் பொருள்களுடன், திட்டப்படி, டோபி கிரேகிட் அங்குக் காத்திருந்தான். மூவரும் உண வருந்திவிட்டு உற்ற வேளை வரும் வரையில் உறங்கினர்.

நள்ளிரவு நகர்ந்து மணி ஒன்ருகி விட்டது. நகர் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கிக் கிடந்தது. தெருக்கள் கேட்பாரற்றுக் கிடந்தன. பில் ஆலிவரை எழுப்பினுன். ஆலிவர் நடுவே வர, ஒருவர் வலப்புறத்தும் மற்ருெருவர் இடப்புறத்துமாகப் பல தெருக்களைக் கடந்து கடைசியாக மூவரும் தனியாகவிருந்த ஒரு பெரிய வீட்டின் முன் வந்து நின்றனர்.

அவ்வீட்டினைச் சுற்றி ஒரு மதிற்சுவர் இருந்தது. ஒரு கண்ணிமைப் பொழுதில் டோபி அதன்மீது தாவி ஏறி நின்ருன். கீழேயிருந்த பில், ஆலிவரைத் தூக்கிப் பந்துபோல் மேலே யெறிய டோபி அவனைப் பிடித்துக்கொண்டு உட்புறத்தில் ஓசைப்படாமல் குதித்தான். பின்னர் பில்லும் டோபியினைத் தொடர்ந்து உட்புறத்தில் குதித்தான்.

அப்பொழுதுதான் ஆலிவருக்குத் தன்னை அவர்கள் அங்கு அழைத்து வந்த காரணம் விளங்கியது. அவ்வளவில் அவன் உடல் ஆடியது; வியர்வை உடலை மூடியது; கண்களில் நீர் ததும்பியது. தரைமீது விழுந்து தாள்களில் மண்டியிட்டுத் தன்னை விட்டு விடுமாறு அவர்களை வேண்டினுன்.

"எழுந்திருக்கப் போகிருயா? இல்லையா? உன்னைச் சுட்டுப் பொசுக்கி விடுவேன்" என்று

மிரட்டிக்கொண்டே, பில் தன் சட்டைப் பையினுள்ளிருந்த கைத் துப்பாக்கியினை எடுத்தான். "இறைவன் பெயரால் உங்களை இறைஞ்சுகிறேன். என்னை விட்டுவிடுங்கள். நான் எங்கேனும் சென்று செத்து மடிகிறேன். இந்தப் பக்கமே திரும்பேன். திருட்டுத் தொழிலில் என்னை ஈடுபடுத்தாதீர்தள். நான் திருட மாட்டேன்" என்று கெஞ்சினான் ஆலிவர்.

டோபி பில்லின் கையிலிருந்த துப்பாக்கியினைத் தட்டிவிட்டு, ஆலிவரின் வாயினைத் தன் கையினால் புதைத்து அவனைத் தரதரவென்று பிடித்திழுத்துக் கொண்டு வீட்டினருகிற் சென்று நின்றான். தலைக்கு மேல் சுவரில் அமைந்திருந்த ஒரு சிறு சாரளத்தினை ஓசையுண்டாக்காமல் கடப்பாறையினுதவியால் பில் பெயர்த் தெடுத்தான். அவ்வேலை முடிந்ததும், பில்ஸ்கைஸ் தன் சட்டைப் பையிலிருந்த விளக்கினை யெடுத்து ஏற்றி ஆலிவரின் முகத்துக்கு நேராகப் பிடித்துக்கொண்டு. "அடே! பொடியா! நான் சொல்வதனை நன்றாகக் கேள்! நான் உன்னை இந்தப் பலகணியின் வழியாக உள்ளே இறக்கி விடுவேன். நீ இந்த விளக்கினையும் உன்னுடன் எடுத்துச் செல். எதிரில் சில படிக்கட்டுக்கள் இருக்கும். அவற்றினைக் கடந்து, அடுத்து இருக்கும் தாழ்வாரத்தினைத் தாண்டி, வாயிற்கதவுப் பக்கம் வந்து கதவினைத் திற. நீ இதனைச் செய்து முடிப்பதற்குள் நாங்கள் வாயிற் கதவண்டை வந்து காத்திருப்போம்" என்று ஆலிவரிடம் அவன் செய்ய வேண்டிய வேலைகளைக் குறித்து விளக்கினான்.

பில்லின் விளக்கம் முடிந்தவுடன் டோபி ஆலிவரைத் தூக்கிப் பலகணியின் வழியாக உள்ளே மெல்ல இறக்கினான். ஆலிவரின் கையில் விளக்கிருந்தது. உள்ளே திகைத்து நின்ற ஆலிவர், தான் மாண்டாலும் மீண்டாலும் மாடிப் படியேறிச் சென்று வீட்டிலுள்ளவர்களை யெழுப்பிவிட வேண்டு

மென்று எண்ணி மாடிப் பக்கம் மெதுவாகச் சென்றான்; அதனைச் சாளரத்தின் வழியாகப் பார்த்த பில், ஆலிவர் வழிதப்பிப் போவதாக நினைத்து, "ஆலிவர்! திரும்பி வா! திரும்பி வா!" என்று கத்தினான். பில்லின் கத்தலைக் கேட்டு, முன் செல்வதா பின்னிடுவதா என்று விளங்காத நிலையில், ஆலிவர் தன் கையிலிருந்த விளக்கினைத் தொப்பென்று கீழே போட்டான்.

அவ்வளவே! வீட்டில் ஆரவாரம் எழுந்தது. விளக்குகள் ஒளி வீசின. மாடிப் படியின் மேல் இருவர் ஓடிவந்து நின்றனர். துப்பாக்கி முழங்கியது. எங்கும் புகை சூழ்ந்தது. தோளில் அடிவாங்கிய ஆலிவர் திரும்பி வருகையில் சாளரத்தின் கீழே சாய்ந்தான்.

ஆலிவரை நோக்கி வந்தவர்களைப் பில் தன் கைத்துப்பாக்கியினால் சுடவே அவர்கள் பின்னடைந்தனர். கீழே கிடந்த ஆலிவரைப் பில் தன் கைகளை விட்டுத் தூக்கிச் சாளரத்தின் வழியாக யிழுத்தெடுத்துக் கொண்டு கீழே குதித்து அப்பால் ஓடினான். உடன் வந்த டோபிகிரேகிட் எங்கே? என்னவானான்?

வீட்டினுள் வெடியொலி கேட்டதுதான் தாமதம்! தன் நண்பனையும் ஆலிவரையும் அங்கே விட்டுவிட்டு, உயிருக் கஞ்சி இருட்டில் எங்கோ ஓடி மறைந்தான் அவன்.

## 16. இரண்டாவது விடுதலை

நினைவிழந்த நிலையில் ஆலிவரைச் சுமந்து கொண்டு சுவரேறிக் குதித்து வீட்டினுக்கப்பாலோடிய பில்ஸ்கைஸ், பின்னால் தன்னை மூவர் துரத்திக்கொண்டு வருவதனைக் கண்டான். ஆலிவரைத் தூக்கிக்கொண்டு ஓடினால் தன்னால் தப்பு

முடியாதென்பதனை யுணர்ந்து, அவன் வழியிற் காணப்பட்ட ஒரு கால்வாயில் அவனைக் கிடத்தி, ஒரு துணியினால் மூடிவிட்டு இருட்டில் மறைந்தான், துரத்திவந்த மூவரும் திருடர்கள் தப்பி யோடி விட்டதனைக் கண்டு வறிதே வீட்டுக்கு மீண்டனர்.

* * *

இருள் திரையினைக் கிழித்துக்கொண்டு பகற் பொழுது பையப் பையப் வந்தது. காலைப் பொழுதின் வருகையினைக் கட்டியங் கூறி வரவேற்பது போல் குளிர் காற்று வீசியது. புகைப் படலம்போல் மூடுபனி ஊர் முழுவதும் கவிந்திருந்தது. திடீரென எங்கிருந்தோ வந்த ஒரு மேகம் மழையைப் பொழியத் தொடங்கியது.

குளிர், பனி, மழை ஆகியவற்றைச் சிறிதும் உணரமாட்டாது ஆலிவர், பில் தன்னைக் கிடத்தி விட்டுச் சென்ற விடத்திலேயே மயக்கமுற்றுக் கிடந்தான். மழை நின்று வெயில் சுள்ளென்று அடிக்கத் தொடங்கியதும், ஆலிவர் தன் கண்களை விழித்தான். அவனால் இப்படியும் அப்படியும், திரும்ப இயலவில்லை. துப்பாக்கிக் காயம் மரண வேதனையைக் கொடுத்தது. அவனை மூடியிருந்த துணி முழுதும் குருதியில் தோய்ந்திருந்தது. அப் பொழுதுதான் தனது இடக் கரம் துப்பாக்கிக் குண்டினால் முடம்பட்டுப் போனதை ஆலிவர் அறிந்தான். வலி தாங்காமல் முனகினான்; எவ்வாறாயினும் அவ்விடத்தைவிட்டு அகல வேண்டுமென்ற விருப்பத்தில் எழுந்து நிற்க முயற்சி செய்தபோது அந்தோ! கால்கள் ஊன்றாமையால், அடியற்ற மரம் போல் தரைமீது விழுந்தான்.

கீழே சேறும் சகதியும். மேலே கதிரவனின் சுடு கரங்கள். அந்தவிடத்தில், தான் மேலும் படுத்துக் கிடந்தால், பின்னும் சிறிது நேரத்துக்குள் மரணத்

தின் வாயிலே அடையத்தான் வேண்டும் என்ற அச்சம் உண்டாகவே, ஆலிவர் வாய்க்காலினின்றும் பெருமுயற்சி செய்து எழுந்து தவழந்தும், புரண்டும் உருண்டும் ஒரு தெருவினை யடைந்தான். ஓரிடத்தில் சிறிது நேரம் அமர்ந்து களையாறிய பிறகு சுற்று முற்றும் பார்த்தான். அருகில் ஒரு வீடு தெரிந்தது; அங்குச் சென்றால் அருளுடையவர் எவரேனும் உதவி யளித்தால் அதனை ஏற்றுக்கொள்வது! இல்லையானால் கால்வாயிற் கிடந்து தனிமையில் மரிப்பதைவிட மக்களிடையிலாவது சாவது என்ற உறுதியுடன் மெல்ல மெல்லக் குந்திச் சென்று அவ்வீட்டு வாயிற் படிமீது உட்கார்ந்தான். உட்கார்ந்தவன் சோர்வின் மேலீட்டால் அப்படியே மயக்கமுற்றுச் சாய்ந்தான்.

கடந்த நாளிரவு நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்து வீட்டினுள்ளே வேலையாட்கள் வம்பளந்துகொண்டிருந்தனர். அப்போது வெளியே அரவம் கேட்கவே, அவர்கள் அனைவரும் அஞ்சி ஒன்றுகூடிக் கதவினைத் திறந்து வெளியே வந்து பார்த்தனர். அவர்கள் நினைத்ததுபோல் அரவத்தை யெழுப்பியது ஒரு பூதமோ, பிசாசோ, அல்லது ஒரு பக்காத் திருடனோ அல்ல; ஒரு பையன்! களைப்பின் மிகுதியால் பேசுந் திறனையுமிழந்த ஒரு சிறுவன் படிமீது மயக்கமுற்றுக் கிடந்தான். அவன் உடல்மேல் குருதி உறைந்திருந்தது. அவன் தன் கண்களை மெல்லத் திறந்து முன் நிற்பவர்களைப் பார்த்தான். "அருளாளர்களே! என்னைப் புறக்கணிக்காதீர்கள். இவ் வேழையைக் காப்பாற்றுங்கள்" என்று ஊமை மொழிகளால் அவன் கண்கள் கெஞ்சின.

"அடேடே! ஒரு பையன்!...........ஏ! பிரிட்டில்ஸ், (ஒரு பணியாளன் பெயர்) இவனை உனக்குத் தெரியவில்லை! இவனைத்தானடா நேற்றிரவு நான் சுட்டேன்....அம்மா! அம்மா!....ஓடி வாருங்கள்........ நேற்றிரவு வந்த திருடர்களுள் ஒருவன் இங்குக்

கிடக்கிறான்........உடம்பெல்லாம் காயம்........அவனே வந்து வலையில் அகப்பட்டுக்கொண்டான்'' என்று வியப்பு மேலிட்டவனாய்க் கத்தினான் கைல்ஸ் என்ற ஒரு வேலைக்காரன்.

கைல்ஸ் போட்ட கூச்சலைக் கேட்டு மாடிப்படியின் மேல் வந்து நின்ற ஓரிளம் பெண், யாழினும் இனிய குரலில், ''கைல்ஸ்...இரையாதே! சித்தி அஞ்சுவாள்....நேற்றிரவு திருடர்கள் வந்து போனதிலிருந்தே சித்தி பெரிதும் வெருட்சி யடைந்திருக்கிறாள். பையனுக்குப் படுகாயமோ?........அவனை மாடிக்கு மெல்ல எடுத்து வந்து ஒரு கட்டிலில் படுக்க வை. பிரிட்டில்ஸை உடனே அனுப்பி ஒரு மருத்துவரையும் ஒரு காவல் அலுவலரையும் அழைத்து வரச்சொல்'' என்று சொல்லிவிட்டுச் சித்தி யிருந்த அறைக்கு ஓடினாள்.

இங்ஙனம் இரண்டாம் முறையாக ஆலிவர் திருடர்களின் குழுவிலிருந்து விடுதலை பெற்றான்.

## 17. பேகின் தடுமாற்றம்

கொள்ளைக்குப் போனவர்கள் குறித்த நேரத்தில் மீளாததால், பேகின் கவலை மிக்கவனாய்த் தன் அறையினைச் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தான். அவனுடைய திருட்டுக் கூட்டத்தைச் சேர்ந்த பலர் அறையினுள் இருந்தனர். அப்போது யாரோ படியேறி வரும் ஒலி கேட்டுப் பேகின் அறையின் கதவினைத் திறந்து பார்த்தான். இறங்கிய தலையுடன் பேகின் எதிரில் நின்றான் டோபி கிரேகிட். அவனுடைய தோற்றத்தைக் காணக் கண்ணராவியாயிருந்தது. உடல் முழுதும் ஒரே புழுதி. கண்கள் உள்ளே போயிருந்தன. உணவின்மையினால் அவனால் பேசவும் கூடவில்லை.

"எங்கே மற்றவர்கள்?" என்று சினத்துடன் டோபியைக் கேட்டான் பேகின்.

"முதலில் உணவு. பின்னர்த்தான் பேச முடியும்...."

பேகினுல் அந்தச் சிறு இடைவேளையைக் கூடப் பொறுக்கமுடியவில்லை.

உணவு முடிந்த பிறகு டோபி, பேகினை நோக்கி, "பில் எப்படி யிருக்கிருன்?" என்று வினவினுன்.

"பில் எங்கே என்று யான் உன்னைக் கேட்டால் நீ அதே கேள்வியினை என்னைப் பார்த்தா கேட்கிருய்?"

"ஏன்? பில் இன்னும்....?"

"என்னடா கதைக்கிருய்? அந்தப் பையனும் பில்லும் எங்கே ஓடிப் போனுர்கள்? சொல்....எங்கேனும் மறைந்து கொண்டிருக்கிருர்களா?"

"கொள்ளை முயற்சி குறி தப்பி விட்டது; தோல்விதான்!"

"அது எனக்கு தெரியும்; நாளிதழில் வெளி வந்த செய்திகளிலிருந்து அதனை அறிந்துகொண்டேன். மேலே சொல்."

"பையனை அவர்கள் சுட்டனர். கூட்டத்தார்களும் நாய்களும் துரத்தி வரவே, பில் பையனை ஒரு கால்வாயில் எறிந்துவிட்டு எங்கோ ஓடினுன். நானும் செத்தேன் பிழைத்தேன் என்று ஓடிவந்து விட்டேன். பையன் உயிருடன் இருக்கிருனே, இல்லையோ? இதற்குமேல் எனக்கொன்றும் தெரியாது."

அதற்கு மேலும் கேட்கப் பேகினுக்குப் பொறுமையில்லை. பெருங் கூச்சல் போட்டுக்கொண்டே அறையினை விட்டு வெளியே விரைந்தான். விரைந்தவன் பில் வழக்கமாகப் பொழுதினைக் கழிக்கும் பற்பல விடங்களுக்கும் சென்று அவனைப்பற்றி உசாவினுன். ஒன்றும் துப்புக் கிடைக்காத நிலையில் பில்லின் வீட்டினுக்கே சென்றுன்.

பில்லின் வீட்டினைப் பேகின் அடைந்தபோது நான்சி மேசைமீது தலையினை வைத்து உறங்கிக் கொண்டிருந்தாள். கதவு திறக்கப்படும் ஒலி கேட்டு அவள் தலையினைத் தூக்கிப் பார்த்தாள்.

"பில் வந்தானா?" என்று கேட்டுகொண்டே பேகின் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான்.

இல்லையென்ற குறிப்பில் நான்சி தலையை யாட்டினாள். பின்னர், பேகின் செய்தித்தாள்களிலிருந்தும் டோபியினிடமிருந்தும் தானறிந்த செய்திகளை அவளுக்குச் சொன்னான். அவற்றையறிந்த நான்சி, "பையன் இப்போதிருக்குமிடத்தில், இங்கிருப்பதனை விட நலமாகவே யிருப்பான். பில்லினுக்கு இடையூறொன்றும் ஏற்படவில்லையாயின் பையன் அந்தக் கால்வாயிலேயே மாண்டு கிடப்பான் என்பது உறுதி. அவன் உங்களிடமிருந்து விடுதலை பெற்று மீளாவிடத்துக்குச் சென்றுவிட்டதனைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். உங்களை யான் உண்மையாகவே வெறுக்கிறேன். உங்களுடன் கூடியுள்ள என்னையும் நான் வெறுத்துக் கெள்கிறேன்" என்றாள்.

"நான்சி....ஏதேதோ பேசுகிறாய்........இப்படிப் பேசுவது எனக்கு வியப்பா யிருக்கிறது. நான் சொல்வதனைக் கேள். பில்லினை ஒரே மூச்சில் என்னால் ஒழித்து முடித்துவிட வியலும்....ஆலிவரை அவன் தன்னுடன் அழைத்து வராவிடில், விரும்பினால் நீயே அவனைக் கொன்று தீர்த்துவிடு. அந்தக் கொடியவனிடமிருந்து தப்புவதற்கு உனக்கும் இது தக்க வாய்ப்பு."

"இது என்ன பிதற்றல்?"

"பிதற்றவில்லை....நான் சொல்லுவதனைக் கேள் ....ஆலிவரின் ஓர் உயிர் எனக்கு ஆயிரம் ஆயிரம் பவுன்களைவிட விலை மதிப்புடையது. குடிகாரனான பில்லின் மடமையினால் ஒரு மாமணியை நான்

இழக்க முடியாது. ஆலிவரை அவன் என்னிடம் ஒப்படைக்கவில்லையானால், பில்லினை அடுத்தப்படி தூக்கு மேடையில்தான் பார்க்கலாம்."

"இப்போது என்னைத் தொல்லைப் படுத்த வேண்டாம். பில் உமக்கு இதற்குமுன் எத்தனையோ நன்மைகளைச் செய்துள்ளார் என்பதனை மறக்க வேண்டாம். இப்போதும் உமது நலனைக் குறித்தே சென்றுள்ளார். நீர் செல்லலாம்" என்று சொல்லிக் கொண்டே நான்சி மேசைமீது மறுபடியும் தன் தலையினைச் சாய்த்துகொண்டாள். மேலே பேச்சினைத் தொடரமாட்டாமல் பேகின் தன் இருப்பிடத்துக்கு மீண்டான்.

பேகின் தன் அறையினை யடைவதற்கு முன்னரே மாங்க்சு அவன் வருகையினை எதிர்பார்த்து அறையினில் உட்கார்ந்திருந்தான். மாங்க்சு யாரென்பது பின்னால் விளக்கமாகப் புலப்படும். தான் ஒரு பையனைக் கண்டறிவதில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகவும், அம்முயற்சியில் பேகின் தனக்கு உதவி புரிந்தாலோ அல்லது பையனைத் தன்பால் கொண்டு வந்து ஒப்படைத்தாலோ அல்லது அவனைக் கொன்று விட்டாலோ, பேகினுக்கு மிகுதியாகப் பொருள் தருவதாகவும் மாங்க்சு ஏற்கெனவே சொல்லியிருந்தான். மாங்க்சு கூறிய உருவ அடையாளங்களிலிருந்து அப்பையன் ஆலிவரே என்று பேகினுக்குத் தெற்றென விளங்கிவிட்டது. ஆலிவரைப் பயன்படுத்திச் செர்ட்சியில் தான் நடத்தவிருக்கும் கொள்ளையினைப் பற்றிப் பேகின் சில நாட்களுக்கு முன் மாங்க்சுக்குத் தெரிவித்திருந்ததால், அதன் முடிவினை அறிந்து கொள்ளவே இப்போது மாங்க்சு பேகினை நாடி வந்துள்ளான்; செர்ட்சிக் கொள்ளை தோல்வியுற்றதனைக் குறித்துப் பேகின் மாங்க்சினிடம் விளக்கி வந்தபோது, "உங்கள் திட்டம் உருப்படாதென்று முன்னரே எனக்குத் தெரியும்,

அப்பையனை அதில் ஈடுபடுத்தியது தவறு. சிறு திருட்டுக்களில் அவனை ஈடுபடுத்திச் சிறையில் தள்ளியிருக்க வேண்டும். அல்லது நாடு கடத்தியிருக்க வேண்டும். தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடித்திருக்கும் முயற்சி இது'' என்று தன் ஏமாற்றத்தினை வெளிப்படுத்தினான் மாங்க்சு.

''அப்படிச் செய்திருந்தால் நீ பயன் பெற்றிருப்பாய்! எனக்கு யாதும் கிடைத்திருக்காது....ஆலிவர் மற்றப் பையன்களினின்று முற்றும் மாறுபட்டவன். அவனைத் திருடனாக்க எவ்வளவு பாடுபட்டும் என்னாற் கூடவில்லையே! ஒருமுறை, முன்பு அவனையனுப்பி விட்டு, நான் அவனை மீட்டும் கொணரப் பட்ட பாடு போதும்.''

''போனது போகட்டும்! இப்போது ஆலிவரை எப்படிப் பிடிப்பது?''

''அவன் செத்துப் போயிருந்தால்....?''

''அவன் செத்துப் போயிருந்தால், அது உன் முயற்சியால் நடந்ததல்லவென்பது தெளிவு. அப்போதைய அவன் சாவினுக்குச் சூழ்நிலை காரணமாகும். அதற்காக நான் உனக்கு ஒரு 'பென்னி' கூடத் தரமாட்டேன். இது உறுதி.''

இவ்வாறு கூறிவிட்டு ஏமாற்ற உணர்ச்சியுடன் மாங்க்சு அவ்விடத்தைவிட் டகன்றான். ஆலிவரையிழந்ததால் இன்னது செய்வதென அறியாது உளங் குழம்பிப் பேகின் தடுமாறினான்.

## 18. ஆலிவர் பாதுகாக்கப்படல்

**ஆ**லிவருக்கு அடைக்கலமளித்த அந்த வீட்டின் உரிமையாளர், மேலீ என்னும் அம்மையாராவார். செல்வத்தின் வளமையை அவரது உடைகள் வெளிப்படுத்தியதுபோல், அவரது பண்பட்ட உள்ளத்தினை அவரது முகத்தில் விளையாடிய

அன்பு தோய்ந்த இரு கண்கள் வெளியிட்டன. ஆண்டில் முதிர்ந்திருந்தும், மேலீ அம்மையார் சுறு சுறுப்பில் இளையவர்களையும் நாணச் செய்வார். அவரது வளர்ப்புப் பெண்ணாகிய ரோசு அதே வீட்டில் அம்மையாருடன் வாழ்ந்து வந்தாள். பதினேழாண் டுகள் நிரம்பப் பெறுதவளாயினும், ரோசு பல உயர் பண்புகட்கு உறைவிடமாய் விளங்கினாள். அவள் அழகின் கொழுந்து; அன்பின் ஆழி; அறிவின் சின்னம்; இல்லத்தின் ஒளி; இரக்கத்தின் இருப்பிடம்; காவியப் புலவர்கட்கும் ஓவியப் புலவர்கட்கும் கற்பனையூட்டும் கருவூலம். கன்னெஞ்சர்களும் வன் னெஞ்சர்களும் மலிந்த இந்த உலகத்தில், ரோசினைப் போன்ற கடவுட் பண்பினர் ஒருவர் ஆயிரம் ஆண்டு கட்கு ஒரு முறையே தோன்றுவர். மேலோர்—கீழோர், முதலாளி—தொழிலாளி என்ற வேறுபாடு கள் அவ்வீட்டிலில்லை. அவ்வீட்டில் பணியாற்றிய வேலைக்காரர்கள் அனைவரும் அம்மையார் இருவரை யும் தம்முயிர்போல் காத்து வந்தனர்.

மருத்துவரை அழைத்து வரச் சென்ற பிரிட் டில்ஸ், குடும்ப மருத்துவரான லாஸ்பெர்னை விரை வாக அழைத்து வந்தான். மருத்துவர் நேராக மாடிக்குச் சென்று ஆலிவரின் புண்களைக் கழுவி, மருந்திட்டுக் கட்டுகள் போட்ட பின்னர்க் கீழே யிறங்கி வந்தார். மருத்துவர் ஆலிவரின் உடல் நிலையைக் குறித்து யாது கூறுவாரோ வென்று துடித் துக்கொண்டிருந்த மேலீ அம்மையாரை நோக்கி லாஸ்பெர்ன், "எல்லாம் வியப்புடையனவாக இருக் கின்றனவே" என்றார்.

"சிறுவன் உயிருக்கு ஊறு வாராதிருந்தால், சரி" என்றார் மேலீ.

"உயிருக்குக் கேடு வரும் என்று தோன்றவில்லை. நீங்கள் அந்தத் திருடனைப் பார்த்தீர்களா?"

"இல்லை."

"அவனைப் பற்றி யொன்றும் கேள்விப்படவு மில்லையா?"

"இல்லை........ஆனால், ரோசு அவனைப் பார்க்க விரும்பினாள். நான்தான் வேண்டாமென்று தடுத்து விட்டேன்."

"அஞ்சத் தக்க தோற்றம் அப்படியொன்றும் பையனிடமில்லை........என்னெதிரில் அவனைப் பார்க்க உங்களுக்குத் தடையொன்றுமில்லையே?"

"தேவையென்று நீங்கள் கருதினால் எங்களுக்குத் தடையில்லை."

"கட்டாயம் நீங்கள் அவனைக் காண வேண்டும். கண்ட பின்னர், முன்னரே காணாது போனோமே என்றுகூட வருந்துவீர்கள். இப்போது பையனை நீங்கள் பார்க்கலாம்."

இருவரையும் லாஸ்பெர்ன் மாடிக்கு அழைத்துச் சென்று ஆலிவரைக்காட்டினார். முரட்டுத் தடியனான ஒரு திருடனுக்குப் பதிலாக ஒரு பச்சிளஞ் சிறுவன், கீரைத்தண்டுபோல் படுக்கையில் துவண்டு கிடந்தான். கட்டுப் போடப்பெற்ற கையினை அவன் மார்பின்மீது வைத்திருந்தான். உறங்கிக்கொண் டிருந்தானேனும், அவன் முகத்தில் பால் வடிந்து கொண்டிருந்தது. ரோசு ஆலிவரின் அருகில் சென்று அவன் முகத்தினைப் பாதியளவு மறைத்துக்கொண் டிருந்த தலைமயிரினை யொதுக்கிவிட்டு அவனைக் கூர்ந்து கவனித்தாள். அவளையும் மீறிக்கொண்டு அவள் கண்கள் நீரைக் கக்கின.

"என்ன இது? இந்தச் சிறுவனா திருட வந்திருப்பான்? நம்பமுடியவில்லையே!" என்றார் மேலீ அம்மை யார் ஆலிவரைப் பார்த்தவுடன்.

"மின்னுவதெல்லாம் பொன்னல்ல....தோற்றம் ஏமாற்றமாகவும் முடியக்கூடும். அமைதியாக ஆராய வேண்டும்" என்றார் மருத்துவர்.

"பையன் கொடியவனுக விருப்பினும், இவன் இளமையைப் பாருங்கள்! அன்னையின் அன்பும், இல்லத்தில் இனிமையும் கிட்டாத நிலையில், தீய பழக்கங்களும், உதையும், பட்டினியும் திருடர்கள் கூட்டத்தில் இவனைப் புகுத்தி யிருக்கலாம். சித்தி! இவனைக் காவலாளர்களிடம் காட்டிக் கொடுத்துச் சிறைக்கனுப்பினுல், தன்னைத் திருத்திக்கொள்ளும் வாய்ப்பினை அறவே இழந்துவிடுவான்" என்று இடையில் பரிந்து பேசினுள் ரோசு.

"குழந்தாய்! அஞ்சற்க! வாழுளின் எல்லையினை எட்டிக்கொண்டிருக்கும் யான் பையனைக் காட்டிக் கொடேன்........லாஸ்பெர்ன்!........பையனைச் சிறைக் கனுப்பா திருக்க வழி யாது?" என்ருர் மேலீ அம்மையார்.

"பையன் கண் விழித்ததும், உங்கள் எதிரிலேயே அவனுடைய வரலாற்றினை ஒளிக்காமல் கூறுமாறு அவனைக் கேட்கிறேன்; அவன் தெரிவிப்பனவற்றிலிருந்து நமது அன்புக்குரியவனென்று துலங்குமாயின் அவனைக் காக்க முயற்சி செய்யலாம்....இல்லையாயின் ஊழின் வழியினை அவன் ஏற்றுத்தான் ஆக வேண்டும்" என்று மருத்துவர் கூறினுர்.

மேற்கண்ட உரையாடல் நிகழ்ந்து சில மணி நேரம் கழிந்த பின், ஆலிவர் கண் விழித்தான். மருத்துவரின் விருப்பப்படி ஆலிவர், தன் அன்னை தன்னை ஏழைகள் பாதுகாப்பு விடுதியில் ஈன்று பின்னர் மாண்டது முதல், துப்பாக்கியால் சுடப்பட்டுத் தான் நினைவற்றுத் தரையில் வீழ்ந்தது வரையில் தனது துன்பியல் வரலாற்றினை ஒளிக்காமல் விளக்கமாகக் கூறினுன். ஆலிவரின் இன்னல்களைக் கேட்ட மருத்துவர்கூட உளம் நெகிழ்ந்து கண்ணீர் சொரிந்தாரென்ருல், மற்றவர்களின் நிலையைப் பற்றிக் கூறுவது மிகை.

ஆலிவரின் வரலாற்றினைக் கேட்டறிந்த மூவரும் எவ்வாறேனும் ஆலிவரைக் காவல் நிலையத்துக் கனுப்பாது காத்துவிட முடிவு செய்தனர். அம்முடிவின்படியே ஊர்க் காவலர்கள் கொள்ளையினைப் பற்றித் துப்புத்துலக்க வந்தபோது, மேலீ அம்மையார், ஆலிவர் கொள்ளைக் கூட்டத்தாருடன் தொடர்புடைய னல்லனென்றும், தேவைப்படுமானால் அவனைக் காவல் நிலையத்துக் கனுப்பி வைப்பதாகவும் பிணை யெழுதிக் கொடுத்தனுப்பிவிட்டார். ஆலிவரும் அம்மையார் இருவரது அன்பணைப்பில் விரைவில் முழு உடல் நலம் பெற்ருன்.

## 19. அன்புடையாரிடையில் ஆலிவர்

ஒரு நாள், ரோசு ஆலிவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, அவன் தன் நன்றி யறிதலைப் பிள்ளைச் சொற்களால் வெளிக் கொட்டினுன். அவன் சொற்களில் அறிவின் மேம்பாடும் கல்வியின் மாட்சியும் காணப்படாவிடினும், உண்மையுள்ள ஓர் இதயத்தின் ஒலி துடித்தது.

"ஆலிவர்! இன்னும் சில நாட்களில் நானும் சித்தியும், கோடைக் காலத்தினைக் கழிக்க ஒரு சிற்றூருக்குச் செல்லத் திட்டமிட்டிருக்கிருேம்" என்று தங்கள் திட்டத்தினை வெளியிட்டாள் ரோசு.

"அம்மையே! உங்கள் அன்பினுக்குத் தலையல்லால் கைம்மா றிலேன். ஆனல், என் உள்ளத்தினைச் சில நாட்களாக ஒரு பெருஞ் சுமை அழுத்திக் கொண்டிருக்கிறது. முன்பு என்னைப் பேணிப் பாதுகாத்த அந்தப் பெரியாரையும், அந்த அம்மையாரையும் கண்டு என் நிலையினை விளக்கினலன்றி, என் உள்ளம் அமைதியுருது. செய்ந்நன்றி கொன்ற கொடியவனுக அவர்கள் என்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பார்கள். அந்தக் கறையினை யூான்

அழித்தாக வேண்டும். இப்போது யானடைந்துள்ள நல்வாழ்வினை அவர்கள் கேட்டறிவார்களாயின் பெரிதும் மகிழ்ச்சி யடைவர்.''

''ஆலிவர்! நீ சொல்லுவது உண்மையே! சில நாட்கள் கடந்த பின்னர் மருத்துவர் லாஸ்பெர்ன் உன்னை அவர்களிடத்துக்கு அழைத்துச் செல்வதாக உறுதி யளித்துள்ளார்.''

''அப்படியா! நீங்கள் சொல்வதனைக் கேட்டு என் உள்ளம் மகிழ்ச்சிக் கூத்தாடுகிறது.''

* * *

சில நாட்கள் கழிந்த பின் ஒரு நாள், மேலீ அம்மையாரது வண்டியில் ஏறிக்கொண்டு, ஆலிவரும் லாஸ்பெர்னும், ப்ரௌன்லோ பெருமகனாரது இடத்துக்குப் புறப்பட்டனர். நெடுஞ் சாலைகளையும் குறுந் தெருக்களையும் கடந்த பின்னர், ஆலிவர் காட்டிய ஒரு வீட்டின் முன் வண்டி வந்து நின்றது. வெள்ளை மாளிகை என்ற பெயருடைய அந்த வீட்டின் முன் வண்டி நின்றதும், தன்னைப் புரந்தார்களைக் காணப் போகும் களிப்பினால் ஆலிவரின் இதயம் படபட வென்று அடித்துக்கொண்டது.

மருத்துவரும் ஆலிவரும் வண்டியினை விட்டிறங்கி வெள்ளை மாளிகையின் வாயிலை யடைந்தபோது வீட்டின் கதவு பூட்டப்பட்டுக் கிடந்தது. வெளியே ''வீடு குடிக்கூலிக்கு விடப்படும்'' என்றவொரு பலகை தொங்கியது. மருத்துவரும் ஆலிவரும் அடுத்த வீட்டுக்குச் சென்று ப்ரௌன்லோவினைப் பற்றி வினவினர். ஆறு வாரங்களுக்குமுன், பெட்வின் அம்மை, ப்ரௌன்லோ, ப்ரௌன்லோவின் பழைய நண்பரொருவர் ஆகிய மூவரும் மேற்கிந்தியத் தீவினுக்குச் சென்றுவிட்டதாக அவ்வீட்டு வேலைக்காரி சொன்னாள். அதனைக் கேட்ட ஆலிவருக்கு இயம்ப வொண்ணா ஏமாற்றம். அந்த அருளாளர்களைக் கண்டு என்னென்னவோ சொல்ல

வேண்டுமென்று அவன் கட்டியிருந்த மனக் கோட்டைகளெல்லாம் ஒரு கணத்தில் இடிந்து விழுந்து தவிடு பொடியாயின. லாஸ்பெர்ன் வண்டியினை வீட்டுக்குத் திருப்பி விடுமாறு வண்டிக்காரனை ஏவியபோது ஆலிவர், "ஐயோ! அந்தப் புத்தகக் கடைக்காரரையாவது பார்த்துவிட்டு வரலாம். யான் சிறை செல்வதினின்றும் அவர் என்னைக் காப்பாற்றினார். சிறிது அருள் செய்யுங்கள்" என்று கெஞ்சினான்.

"தம்பி! இப்போது நாம் அடைந்துள்ள இந்த ஓர் ஏமாற்றமே போதும். அந்தப் புத்தகக் கடைக்குச் சென்றாலும்கூடப் ப்ரௌன்லோ மாண்டுவிட்டாரென்றோ, அல்லது எங்கோ சென்றுவிட்டாரென்றோ தான் கேள்விப்படுவோம். மற்றொரு முறை பார்த்துக்கொள்ளலாம் வா!" என்று மருத்துவர் மறுத்துக் கூறவே, மறுமொழி பகராமல் ஆலிவர் வண்டியில் ஏறிக்கொண்டான்.

இரண்டு வாரங்கள் கழிந்தபின் மேலீ அம்மையார், ரோசு, ஆலிவர் ஆகிய மூவரும் குறித்திருந்த அந்தச் சிற்றூருக்குப் புறப்பட்டனர்.

அந்தச் சிற்றூரை இயற்கைத் தாயின் மணிமுடியென்றுதான் சொல்லவேண்டும். சாலைகளும் சோலைகளும் அவ்வூரை எம்மருங்கும் சூழ்ந்திருந்தன. ஊரினுக்கருகே ஒரு சிற்றோடை வளைந்து, நெளிந்து, தெளிந்து இனிய கீதம் இசைத்துகொண் டோடியது. மங்கல மங்கையர்போல், கொடிகள் பூத்துக் குலுங்கின. மரங்கள், புதுத் தளிர்க் கைகளினால் பூமித் தாயினைத் தடவிக் கதிரவனாலுண்டான வெப்பத்தைத் தணித்தன. பறவை யினங்கள் பண் பாடின; நறுமணத் தென்றல் ஊராரின் உடல்கட்கும் உணர்ச்சிக்கும் புத்துயிர் ஊட்டியது. இந்தச் சூழ்நிலையில் ஆலிவரின் அறிவும் உடலும் மேலும் வளர்ந்ததில் வியப்பில்லை.

இறைவன் தன் அருளுக் குரியவர்களை யென்றும் கைவிடுவதில்லை. அவன் அவர்களுக்கு உவந்து ஈயும் இன்பம் துன்பம் கலவாதது; இத்தகைய தென்று எடை போட்டு இயம்ப வியலாதது. அத்தகைய நிறையின்பம் ஆலிவருக்கு இச் சிற்றூரில் கிட்டியது. எவ்வுயிரையும் தம்முயிர்போல் கருதும் அருள் நெஞ்சங்கள் ஒரு புறம்; செய்ந்நன்றி மறவாத சீலமும், டளிங்கினும் தூய வுள்ளமும் மற்றொரு புறம். இவற்றினுக் கிடையில் வளர்ந்த ஆலிவர், மேலீ குடும்பத்தாருள் ஒருவனாகிவிட்டான். செல்வர்—அனாதை, வாழ்வித்தவர்—வாழ வந்தவன் என்ற வேறுபாடுகள் அங்கில்லை. மேலீயும் ரோசும் ஆலிவரைத் தம்முள் ஒருவனாகவே கருதினார்கள். ஆலிவரும் அதற்குத் தக நடந்துகொண்டான். சூழ்நிலை அவனைக் கண்ணிய முடையவொரு சனவானாக்கியது. அவன் உள்ளம் இன்பக் கடலில் துளைந்து விளையாடியது. அடி, உதை, தீயோர் கூட்டுறவு, சிறை, வசைமொழி ஆகியவைகள் அவனுக்குப் பழங்கதைகளாயின. இவ்வாறு மூன்று திங்கள் கழிந்தன.

## 20. ஒற்று வேலை

ஆலிவரைப் பறிகொடுத்த நாள் தொட்டுப் பேகின், ஊண் உறக்கத்தை மறந்தான். ஆவியினைத் தேடி அலையும் உடலைப் போலவும், மனிதனைத் தேடித் திரியும் அரவினைப் போலவும், பேகின் ஆலிவர் இருக்குமிடத்தைத் தேடித் தேடியுழன்றான். தன் மாணாக்கர்களைப் பல பக்கங்கட்கு அனுப்பினான். பல நாட்கள் கழித்து ஆலிவர் சிற்றூரொன்றில் இருப்பதனையறிந்து உளவறிய மாங்க்சுடன் அவ் வூருக்குப் புறப்பட்டான். மாலை வரும் வரையில் மறைந்திருந்தபின், திருடர்களிருவரும் தோட்டத்

தின் வழியாகப் புகுந்து ஆலிவரின் அறையினருகில் வந்து நின்றனர்.

அப்போது ஆலிவர், சாளரத்தினை நோக்கியுவாறு நாற்காலி யொன்றி லமர்ந்திருந்தான். மேசைமீது, புத்தகங்கள் விரிக்கப்பட்டுக் கிடந்தன. அவன் உறங்கவுமில்லை! விழித்துக்கொண்டிருக்கவுமில்லை. இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு நிலையிலிருந்தான். கண்கள் மூடியிருந்தன. ஆனால், கருத்து மூடியிருக்கவில்லை. அப்போது தான் மறுபடியும் பேகினது வீட்டிலிருப்பதுபோல் ஓர் உருவெளித் தோற்றம் அவனுக்குண்டாகியது. பேகின் தன்னருகே அமர்ந்திருந்த ஒருவனிடம், "அதோ இருக்கிறானே! அந்தப் பையன்தான் ஆலிவர்! பார்த்துக் கொண்டாயா? வந்துவிடு" என்றான்.

"ஆமாம்! ஆமாம்! அவன்தான்! இனி அவனை விடேன்" என்று மற்றவன் பேகினுக்குப் பதில் சொன்னான்.

அரைகுறை உறக்கத்தில் இந்தக் கனவினைக் கண்ட ஆலிவர், உளறியடித்துக் கொண்டு கண் விழித்தான். ஆலிவர் போட்ட கூச்சலைக் கேட்டு, வீட்டின் மற்றொரு புறத்திலிருந்தவர்கள் ஆலிவரின் அறைக்கு ஓடிவந்தனர்.

"பேகினும் மற்றொருவனும் இப்போது இந்தச் சாளரத்தினருகே வந்து நின்றனர். நான் கூச்சல் போட்டதும் அவர்கள் ஓடிவிட்டனர்" என்று தட்டுத் தடுமாறிக்கொண்டு ஆலிவர் சொன்னான். அப்போது அவன் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

ஆலிவர் சுட்டிக் காட்டிய திக்கில் வேலைக்காரர்கள் ஓடினர். வயற்புறங்களிலெல்லாம் தேடினர்; ஊர் முழுதும் துருவித் துருவியலைந்தனர்; திருடர்கள் காணப்பட்டிலர். ஒருகால் ஆலிவர் கனவு கண்டிருக்கக்கூடுமென்று எல்லோரும் எண்ணி அந்த நிகழ்ச்சியை அப்போதே மறக்கலாயினர்.

அது நிற்க. அன்று ஆலிவரைக் கால்வாயில் கிடத்திவிட்டு, இருட்டில் ஓடி மறைந்த பில்ஸ்கை சினைப் பற்றிப் பார்ப்போம். சொர்ட்சி கொள்ளை முயற்சி தோல்வியுற்றபின், தன் இருக்கைக்கு மீண்ட பில் தொடர்ந்து பழையவிடத்திலிருப்பது தீங்கு விளைவிக்குமென்று கருதினனே என்னவோ? தன் இருக்கையை வேருேர் இடத்துக்கு மாற்றிக் கொண்டான். இந்த விடம் மிக மோசமானது! வெளிச்சமும் காற்ருேட்டமு மில்லாதது; அதனுல் புத்திடத்தில் குடிபுகுந்த இரண்டொரு நாட்களுக் குள்ளாகவே பில்லினைக் காய்ச்சல் பற்றியது. படுக்கையோடு படுக்கையாகக் கிடந்தான். நான்சி அவனைக் கண்ணுங் கருத்துமாய்ப் பேணிவந்தாள். இரவெல்லாம் கண் விழித்திருந்து வேளை தவருமல் அவனுக்கு மருந்து கொடுப்பாள். அவன் அருகி லேயே அமர்ந்திருப்பாள். இப்படிப் பல நாட்கள் கண் விழித்திருந்து பாடுபட்டதால் அவள் உருக் குலைந்து போனுள். குரலினுலன்றி, வடிவத்தால் கண்டறிய முடியாத அளவினுக்கு நான்சி உருமாறிப் போனுள். அவ்வளவு உழைத்தும் முரட்டுத் தனத் திலும் கொடுமையிலும் ஊறிப்போன பில், நான்சி யினை வைவான்; அடிப்பான்; உதைப்பான். அவற்றினையெல்லாம் அவள் பொறுத்துக்கொண் டாள். ஒரு பெண், உள்ளம் சினக்காத வரையில், அலையோய்ந்த ஒரு கடல்; சினமேறினுல் ஓர் எரிமலை யாக மாறிவிடுவாள்! இன்னும் அந்த நிலை நான்சி யினைத் தீண்டவில்லை.

ஒரு நாள் மாலை. மணி ஏழிருக்கும். பேகின், ஜேக்டாக்கின்சு, சார்லி பேட்ஸ் ஆகிய மூவரும் பில் படுத்திருந்த அறையினுள் நுழைந்தனர்.

பேகினைப் பார்த்த பில், சீற்றங்கொண்டு படுத்தவாறே, "திருட்டுக் கிழமே! எந்த நச்சுக்

காற்று உன்னை இப்போது இங்கு அடித்துக்கொண்டு வந்து தள்ளியிருக்கிறதோ?" என்று இரைந்தான்.

"பில் இரையாதே! நச்சுக்காற்று ஒருவருக்கும் ஒரு நன்மையும் பயவாது. நோயால் மெலிந்துள்ள உன் உடலுக்கு வன்மையூட்டும் உணவுப் பொருள்கள் பல கொணர்ந்துள்ளேன். அவற்றினைக் கண்டால் நீ பெரிதும் மகிழ்வாய்! அடே! டாக்கின்சு! பேட்ஸ்! மூட்டையினை யவிழ்த்து அவற்றை வெளியே எடுத்து வையுங்களடா!"

"அவை கிடக்கட்டும்! நோயுண்ட எலி வளையினுள் நலிவதுபோல், நான் இங்கு அடைபட்டுச் சாகிறேன். மூன்று வாரங்களாக வராமல் இது காறும் என்ன செய்துகொண்டிருந்தாய்?"

"நான் என்ன செய்துகொண்டிருந்தேனென்று இந்தச் சிறுவர்கள்முன் விளக்கமாகக் கூற முடியாது. வெளியூர் சென்றிருந்தேன். சில திட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தேன். அதனுல் முன்னரே வரக்கூடவில்லை."

"எனக்குத் தெரியும்....! 'பில் எப்போது உடல் நலம் பெற்று எழுந்து வருவான்? அவனைக்கொண்டு இதைச் செய்யலாமா? அதைச் செய்யலாமா? அவனுக்கு எவ்வளவு பிச்சைக்காசு தரலாம்?' என்றெல்லாம் திட்டம் வகுத்திருப்பாய். அவை கிடக்கட்டும். எனக்கு இன்றிரவே பணம் வேண்டும்! உம்....! எடு! எடு!"

"இங்கு என்னிடம் ஒரு 'பென்னி' கூட இல்லையே."

"இங்கில்லாவிட்டால், வீட்டில் குவித்து வைத்திருக்கிறுய்! எனக்கு இப்போது நீ பணம் அவிழ்த்தாகவேண்டும்....கதை பேசிக் காலத்தையோட்டாதே....நீயாகத் தராவிடில் நானுகவே வந்து வேண்டிய அளவு எடுத்துக் கொள்வேன்."

"சரி! சரி! நான் டாக்கின்சினிடம் கொடுத்தனுப்புகிறேன்."

"நான் அந்த எத்தனை நம்ப முடியாது....அவன், ஏதேனும் சாக்குச் சொல்லிப் பணத்தை ஏப்பம் விட்டு விடுவான். நான்சியை உன்னுடன் அனுப்பு கிறேன். அவளிடம் கொடுத்தனுப்பு....அவள் திரும்பும் வரையில் சிறிது கண்ணயர்கிறேன்."

பில் படுத்துக்கொண்டதும், நான்சி பேகினுடன் புறப்பட்டு அவனது வீட்டினை யடைந்தாள்.

பேகின் தன்னறையினுள் நுழைந்தபோது சிறுவர்கள் சூதாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். அவர்கள் முன்பு, பணத்தை எடுத்தல் கூடாதென்று எண்ணிய பேகின், அவர்களை வெளியே விரட்டி விட்டுப் பணப் பெட்டியினை நெருங்கியபோது, யாரோ படியேறி வரும் ஓசை கேட்டது. பெட்டிச் சாவியினை விரைவாக மடியில் மறைத்துக்கொண்டு பேகின், "நான்சி! வருபவன் மாங்க்சாகத்தானிருக்க வேண்டும். அவனுக்குமுன் பணத்தைப் பற்றி வாய் திறந்து விடாதே" என்று எச்சரிக்கை செய்து விட்டுக் கதவினைத் திறக்கச் சென்றபோது, மாங்க்சு உள்ளே நுழைந்தான். அங்கு நான்சி உட்கார்ந் திருத்தலைக் கண்டு, அவன் திடுக்கிட்டுப் பின்னடைந் தான்.

"மாங்க்சு! இவளைக் கண்டு நீ அஞ்சவேண்டாம். இவளும் எனது குழுவினில் சேர்ந்தவளே!" என்று சொல்லிப் பேகின், அவனை மற்றோர் அறைக்கு அழைத்துச் சென்று கதவினை மூடிக்கொண்டான்.

நான்சி, தன்னை யொரு போர்வையினால் மூடிக் கொண்டு, மெல்லெனக் கதவினருகே சென்று உள்ளே நடக்கும் உரையாடலைக் கேட்கலானாள்.

கால்மணிநேரம் கழிந்திருக்கும். அறையினுள் நிகழ்ந்துவந்த பேச்சு முடிந்துவிட்டதனைக் குறிப்பினா லறிந்துகொண்ட நான்சி, ஓசைப்படாமல் மீண்டும் தன் பழைய விடத்திலமர்ந்துகொண்டாள். மாங்க்சினையனுப்பிவிட்டு அறையினுள் புகுந்த பேகின்,

விளக்கொளியில் நான்சியின் முகத்தினை உற்று நோக்கினன். நான்சி தங்களது பேச்சினை ஒற்றுக் கேட்டிருப்பாளோவென்ற அச்சம் அவனுக்கு! அந்தக் குழப்பத்தில், "நான்சி! ஏன் உன் முகம் பேயாலறையப்பட்டது போல் வெளுத்துக் கிடக்கிறது?" என்று கேட்டான்.

"அதெல்லா மில்லை........காற்ருேட்ட மில்லாத இந்த அறையில் நீண்ட நேரமாக அடைபட்டுக் கிடப்பதால், அப்படித் தோன்றுகிறது........நேரமாகிறது! நான் போகவேண்டும்........ கொடுங்கள் பணத்தை!" என்ருள் நான்சி.

பேகின் பெருமூச் செறிந்துகொண்டே, ஒவ்வொரு நாணயமாக வெண்ணி, நான்சியின் கையில் வைத்தான். பணத்தைப் பெற்றுக்கொண்ட நான்சி தெருவுக்கு வந்தாள்.

அவள் உள்ளத்தில் ஒரு பெரும்புயல் வீசிக் கொண்டிருந்தது. அறையினுள் அவள் கேட்ட திடுக்கிடும் செய்திகள் அவளைப் பயித்திய மாக்கின. உள்ளக் குழப்பத்தால் தான் செல்லவேண்டிய வழியினையும் மறந்து சில நிமிட நேரம் ஒரு வீட்டு வாயிற்படியில் உட்கார்ந்தாள்....சிந்தனை செய்தாள்.... ஏதோ உறுதியொன்றினைச் செய்துகொண்டவளைப் போன்று எழுந்து தன் இருப்பிடத்துக்குச் செல்லாமல் எதிர்த் திசையில் நடந்தாள். சிறிது நேரம் ஓடினுள். மூச்சு வாங்கியது. ஓய்வெடுத்துக்கொள்ள நடுத் தெருவிலேயே உட்கார்ந்தாள். மறுபடியும் ஊசலாட்டம்; பழைய நினைவு மீண்டது போலும்! தன் ஆற்ருமையை யெண்ணிக் கைகளைப் பிசைந்து கொண்டாள்........உள்ளத்தின் வேதனை கண்ணீராகக் கொட்டியது. கண்ணீர் அவளுக்குச் சிறிது ஆறுதலை அளித்தது. தன் வீட்டுக்குத் திரும்புவதே மேலென்றெண்ணி ஒரு வழியாகத் தன் இருப்பிடத்தினை யடைந்தாள்,

# 21. மறைவு வெளிப்படல்

பேகினிடமிருந்து பணம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில், பில் அடுத்த நாளினைக் குடிப்பதிலும் உண்பதிலும் கழித்தான். நல்ல உணவும் குடியும் அவனது முரட்டுத்தனத்தை ஓரளவு குறைத்தன. களிப்பின் பிடிப்பிலிருந்த அவனால் நான்சியிடம் ஏற்பட்டிருந்த மாறுதலை அறியக் கூடவில்லை. பூனைக் கண்ணனை பேகினுயிருந்தால் அந்த மாறுதலை உடனே கண்டிருப்பான்.

அன்றிரவு வந்தது. அப்போதும் நான்சியின் உள்ளத்தி லடித்துக்கொண்டிருந்த புயலின் வேகம் தணியவில்லை. அவளது கன்னங்கள் வெளிறிட்டிருந்தன வென்றாலும், கண்கள் கனலைக் கக்கின. பில்லின் அருகில் அவள் ஒரு துன்ப வோவியமாய் வாய் திறவாது உட்கார்ந்திருந்தாள்.

"என்ன நான்சி! உயிர்ப் பிணம்போல் காணப்படுகிறாய்! உடம்புக்கு என்ன?" என்று கேட்டான் பில்.

"உடம்புக்கொன்றுமில்லை.... ஏதோ வேதனை."

"வேதனையில்லை....உனக்கும் காய்ச்சல் வந்திருக்கிறது....நீ மிகவும் நல்லவள்.... இல்லையானால், என்றோ உன் கழுத்தைத் திருகியிருப்பேன்....எனக்கு அந்த மருந்தினை யூற்றிக் கொடுத்துவிட்டுப் படுத்துக்கொள்."

நான்சி யெழுந்து ஒரு கண்ணாடிக் குப்பியில் மருந்தினை யூற்றி, அதனுடன், தான் மறைத்துவைத்திருந்த மயக்க மருந்தினையும் கலந்து கொடுத்தாள். பில் அதனை அருந்தினான்....சிறிது நேரம் சென்றது.... பில்லின் கண்கள் மூடின.... திறந்தன.... மீட்டும் மூடின....மீட்டும் திறந்தன. பில் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான். மயக்க மருந்து தன் வேலையைச் செய்யத் தொடங்கியது....முடிவில்

கண்கள் இறுக்கமாக மூடிக் கொண்டன. நான்சி பில்லினை அசைத்துப் பார்த்தாள். சவம் போற் கிடந்தான் அவன்.

நான்சி விரைவாகத் தன் உடைகளை மாற்றிக் கொண்டு, அறைக் கதவினை ஓசைப்படாது மூடிவிட்டுத் தெருவில் நடக்கலானாள். கடைக்காரர்கள் கடைகளை மூடிக்கொண்டிருந்தனர். தெருக்களில் மக்கள் நடமாட்டம் அதிகமாக வில்லை; இங்கொருவரும் அங்கொருவருமே தென்பட்டனர். சுமார் ஒரு மணி நேரம் நடந்து சென்று இலண்டன் நகரில் ஹைட்பார்க் என்னும் பகுதியிலிருந்த ஓர் உணவு விடுதியின் முன் சென்று நின்றாள். விடுதி முன் பொருத்தப்பெற்றிருந்த கடிகாரம் அப்போது மணி பதினொன்று என்று காட்டியது. விடுதியின் பணியாளன் நான்சியிடம் வந்து, "யாரம்மா நீ? இங்கு யாரைப் பார்க்கவேண்டும்?" என்று கேட்டான்.

"இங்கு ரோசு என்ற அம்மையார் தங்கி யிருக்கிறார்கள். நான் அவர்களைப் பார்க்கவேண்டும்."

"உன் பெயரென்ன? என்ன வேலையாக அவர்களைப் பார்க்க விரும்புகிறாய்?"

"அந்த இரண்டினையும் உன்னிடம் சொல்வதற்கில்லை. அந்த அம்மையாரை நான் பார்த்தாக வேண்டும். என்னைத் தடுத்தால், ஒரு நற்செயலைக் கெடுத்த பழி உனக்குண்டாகும்."

பணியாளரின் இதயம் இளகியது. நான்சியினை மாடியறை யொன்றினில் இருக்கச் செய்துவிட்டு, ரோசினிடம் சென்று நான்சியின் வருகையினை அறிவித்துவிட்டகன்றான்.

ரோசு அறையினுள் வந்ததும், "உங்களைப்பார்க்கவே முடியாது போலிருக்கிறதே அம்மா! பணியாள் என்னைத் தடுத்து நிறுத்தியதனைக் குற்றமாக எண்ணிக்கொண்டு, மற்றவர்களைப் போல நானும்

திரும்பிச் சென்றிருந்தால், என்றுவதொருநாள் நீங்கள் வருந்தும்படி நேரிட்டிருக்கும். நான் இங்ஙனம் சொல்வதற்குத் தக்க காரணங்கள் உள'' என்றாள் நான்சி.

''யாரேனும் உன்னிடம் முரட்டுத்தனமாக நடந்துகொண்டிருந்தால் அதற்காக வருந்துகிறேன். அதனை மறந்து விடு! நீ பார்க்க விரும்பியவள் நான் தான். என்னை எதற்காகப் பார்க்க விரும்புகிறாய்?''

''அறைக் கதவு மூடப்பட்டிருக்கிறதா?''

''நன்கு மூடப்பட்டுள்ளது.''

''அம்மையே! என் உயிரினையும் மற்றும் சிலரது உயிரினையும் இப்போது உங்களிடம் ஒப்படைக்கப் போகிறேன். அன்றொரு நாள் மாலை, பெண்டான்வில்லி மாளிகையிலிருந்து ஆலிவர் புத்தகக் கடைக்குச் சென்றுகொண்டிருந்தபோது, அவனை வழிமறித்துப் பொய்யாக அவன் என் தம்பியென்று சொல்லிப் பிடித்திழுத்துச் சென்று பேகினிடம் மீண்டும் சிறைப்படுத்திய பாவி நான்தான்.''

''ஆ! நீயா?''

''நானேதான். திருடர்களிடையில் திருடியாக வாழ்ந்து வரும் ஒரு கயத்தி நான். அறிவு தோன்றிய நாள் தொட்டுப் பண்பட்ட வாழ்க்கை வாழாதவள். இன்சொற்களைக் கேட்டறியாதவள். என் கொடுமைகளிலிருந்து என்னைக் காக்க வல்லவன் இறைவன் ஒருவனே! ஆண்டில் இளையவளாகத் தோன்றும் யான் கொடுமைகளில் மூத்தவள். நான் தெருவில் நடந்து சென்றால், பிச்சைக்காரிகள் கூட என்னைக் கண்டு அருவருத்து அப்பாற் செல்லுகிறார்கள்.''

''நீ சொல்வனவற்றைக் கேட்க எனக்கு அச்சமுண்டாகிறதே!''

''குழந்தைப் பருவத்தில் வறுமை, பசி, பட்டினி, குடி, குழப்பம், சண்டை ஆகிய இவற்றினின்றும்

உங்களைக் காக்க நல்ல அருளாளர்கள் உங்கட்குக் கிடைத்தார்கள். ஆனால் நானோ, தொட்டிலிற் கிடந்த நாள் முதல் அந்தச் சாக்கடைகளிலேதான் உழன்று வருகிறேன். நஞ்சினையே உணவாக்கிக் கொண்டு விட்டேன்."

"நீ சொல்வதனை மேலும் கேட்டால் என் இதயம் வெடித்துவிடும்போல் தோன்றுகிறது."

"ஆண்டவன் உங்களைக் காப்பான்! என் துன்பியல் வரலாற்றினைத் தீட்ட நான் விரும்பவில்லை. நான் மறைவில் கேட்ட சில செய்திகளை உங்களுக் கறிவிக்கவே இப்போது ஓடோடி வந்துள்ளேன். நான் இங்கு வந்து அச்செய்திகளை உங்களிடம் சொல்லிச் சென்றதனை யறிந்தால், என்னுயிர்க்கு உலை வைத்துவிடக் கூடியவர்கள் சிலர் உளர்.... மாங்க்சு என்ற ஒருவனை நீங்கள் அறிவீர்களா?"

"அறியேன்."

"ஆனால் உங்களைப் பற்றி அவனுக்குத் தெரியும். நீங்கள் இந்த விடுதியில் தங்கியிருப்பதனைப் பேகினிடம் அவன் சொல்லக் கேட்டுத்தான் நான் இங்கு வந்தேன்."

"அந்தப் பெயரைக்கூட நான் கேட்டதில்லை."

"அவன் வெவ்வேறு பெயர்களில் இலண்டன் நகரில் நடமாடி வருகின்றான். இரண்டொரு நாட்களுக்கு முன் மாங்க்சு, பேகின் என்னும் திருடர்கள் தலைவனுடன் பேசிக்கொண்டிருந்ததனை நான் ஒட்டுக் கேட்டேன். அப்போது அவன் வெளியிட்ட மறைவான சில செய்திகளை இப்போது உங்கட்குச் சொல்லப் போகிறேன். ஆலிவரின் பெற்றோர் இன்னாரென்று அவனுக்குத் தெரியுமாம். ஆலிவர் அவனுக்கு ஒரு வழியில் தம்பியாம். நீங்களும் ஆலிவருக்கு நெருங்கிய உறவினராம். இந்த உண்மைகளை நிலைநாட்டவல்ல சில சான்றுகளை அவன்

(மாங்க்சு) எரித்துவிட்டானும். ஆலிவரின் அன்னே ஏழைகள் விடுதி யொன்றில் அவனைப் பெற்ற பின்னர் மரணடுவிட்டாளாம். அவள் அப்போது சில அணிகலன்களைப் பூண்டிருந்தாளாம். அவை பிறர் கைகளிற்படின், ஆலிவரின் பிறப்பு, விளங்கி விடக் கூடுமென்ற அச்சத்தினுல், மாங்க்சு அந்த நகைகளை அவ்விடுதியினை நடத்துவோரிடமிருந்து கைப்பற்றி ஆற்றிலெறிந்து விட்டானும். ஆலிவர் உயிருடனிருக்கும் வரையில், மாங்சுக்குச் செல்வ வாழ்வு கிட்டாதாம். ஆகையால், ஆலிவரைப் பேகின் பிடித்து மாங்க்சினிடம் ஒப்படைத்து விட்டால், அவன் அவனை (ஆலிவரை)ச் சிறைக்கோ தூக்குமேடைக்கோ, நாட்டுக்கு வெளியிலோ' சூழ்ச்சி செய்து அனுப்பி விடுவானும். பின்னர் ஆலிவரின் தகப்பனுர் எழுதி வைத்துள்ள உறுதிச் சீட்டுப்படி (உயிலின்படி) ஆலிவருக்குச் சேர வேண்டிய பெருஞ் செல்வம் மாங்க்சுக்கு உரிமையாகிவிடுமாம். மாங்க்சு சொன்னவற்றிலிருந்து பார்த்தால், அவன் பேகினைவிடக் கொடியவனென்றும், அவன் ஆலிவருக் கிழைத்துள்ள இன்னல்களுக்கு அளவேயில்லை யென்றும் தெரிகின்றன."

"மாங்க்சின் தம்பியா ஆலிவர்?"

"ஆம். அப்படித்தான் அவன் சொன்னுன். ஆலிவரைப் பழி தீர்த்துவிட அவன் முடிவு கட்டியுள்ளான். தன் உறுதியினை அவன் எவ்வாறேனும் நிறைவேற்றி விடுவான். அக் கொலைகாரனிடமிருந்து ஆலிவரைக் காப்பாற்றுங்கள். நான் இங்கு வந்ததனைப் பிறர் அறியா முன்னம் யான் திரும்பியாக வேண்டும். எனக்கு நேரமாகிறது, விடை கொடுங்கள்."

"மேலும் உன் உதவி இல்லாமல் நீ சொன்ன செய்திகளைத் தெரிந்துகொண்டு நான் என்ன செய்ய முடியும்? அவ்வளவு கொடியவர்களென்று

சொன்னாயே! அவர்களிடம் திரும்பிச் செல்ல நீ ஏன் இவ்வளவு துடிக்கிறாய்? அடுத்த அறையில் ஒரு கன்வான் இருக்கிறார். அவரைக் கூப்பிடுகிறேன். நீ இப்போது என்னிடம் கூறிய செய்திகளை அவரிடமும் அறிவித்தால், நன்மையுண்டு. உன்னை யும் அவர் பிறர் தொல்லைகளிலிருந்து விடுவிப்பார்."

"இப்போது அவரை யழைக்க வேண்டாம். பின்னர்ப் பார்த்துக்கொள்ளலாம். நான் திரும்பிச் செல்லத்தான் வேண்டும். வஞ்சனை யறியாத உங்க ளிடம் நான் என் நிலையினை எப்படி விளக்குவேன்? நான் சொன்ன திருடர்கள் கூட்டத்துள் ஒருவன் உள்ளான். அவன் கொடுமையின் கொடுமுடி; முரட்டுத்தனத்தின் முழு வடிவம்; எனினும், என் வாழ்வு அவனுடன் இணைந்தும் பிணைந்தும் விட்டது; அவனைவிட்டு விலகி என்னால் ஒரு கணமும் உயிர் வாழ முடியாது."

"நீ சொல்வனவெல்லாம் உண்மை யென்றே ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், ஆலிவரைக் காக்க வேண்டுமெனின், முதலில் நாங்கள் உன்னை யன்றோ காத்தாக வேண்டும். அந்த நரகக் குழியினின்றும் உன்னை வெளியேற்றி, உனக்குப் புதுவாழ்வளிக்க எங்களால் இயலும். தெருவினில் திக்கற்று விடப் பட்ட ஒரு பெண்ணை எவ்வளவு தொல்லைகள் எதிரிடும் என்ற உண்மையினை, உன்னினத்தைச் சார்ந்தவளாகிய நான் நன்கறிவேன். நான் சொல்வ தனைக் கேள்; மறுத்துரைக்காதே. நீ அங்கு மீளல் வேண்டாம்."

"அம்மையே! நீங்கள் மனித வடிவில் தோன்றி யுள்ள ஓர் அணங்கு. பண்புடைமையிற் பிறந்து, அன்பில் ஊறி, அருளில் அரும்பிய உங்களது அமுத மொழிகளைப் போன்ற சொற்களை நான் இதுகாறும் கேட்டதில்லை. இத்தகைய சொற்கள் சில ஆண்டு கட்கு முன் என் செவிகளில் விழுந்திருக்குமானால்,

கறைப்பட்ட என் வாழ்வு மறைபட்டுப் போயிருக்கும். இப்போது காலங் கடந்துவிட்டது. பக்குவம் பாழ்பட்டுவிட்டது.''

''மாசுகளைத் துடைத்துக்கொண்டு மன்னிப்பினை எப்போதும் பெறலாம்....காலங் கடந்துவிட்டதென்ற பேச்சே இங்கில்லை.''

''நீங்கள் யாது கூறினும் அவனை என்னால் விட முடியாது. அவன் சாவினுக்கு நான் ஒரு நாளும் உடந்தையாக விருக்கமாட்டேன்.''

''கண்ணீர் வெள்ளத்தில் உன்னை எப்போதும் மிதக்க விட்டுக்கொண்டிருக்கும் ஒருவனுக்காக, நஞ்சினும் கொடிய நாசக்காரன் ஒருவனுக்காக, நீ உன்னுயிரினை மாய்த்துக்கொள்ளப் பார்ப்பது பேதைமை. பயித்தியக்காரச் செயல்!''

''அது அப்படித்தான். அவன் கைகளினால் நான் மாள வேண்டுமென்பது ஊழின் கட்டளையாயின் புன்னகையுடன் அதனையும் ஏற்பேன். நான் திரும்பிச் செல்லத்தான்வேண்டும். என்னைத் தடுக்காதீர்கள்.''

''நீ ஏகிவிடின், இப்போது அரைகுறையாக வெளியிட்ட இச் செய்திகளால் யாது பயன்? முழுச் செய்திகளையும் துப்பறிந்தாலல்லாமல், ஆலிவரை எங்ஙனம் காக்க வியலும்?''

''நம்பிக்கையுள்ள ஒருவரின் உதவியை நாடினால்?''

''சரி! தேவையானால் உன்னை மறுபடியும் எங்குக் காணலாம்? எப்போது காணலாம்? ஆனால், அந்தத் தீயோர்கள் வாழுமிடத்தை நான் தெரிந்து கொள்ள விரும்பவில்லை.''

''நான் சொன்ன மறை(ரகசிய)ச் செய்திகளை வெளியிட மாட்டீர்களே?''

''மாட்டேன். ஐயுறல் வேண்டாம்.''

''அப்படியானால், நான் அதுகாறும் உயிருடனிருந்தால், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை இரவும்

பதினொன்று முதல் பன்னிரண்டு மணிக்குள்ளாக இலண்டன் பாலத்தில் நீங்கள் என்னைப் பார்க்கலாம்.''

''பேதைப் பெண்ணே! என் உள்ளம் உன்பால் உருகுகிறது, 'என் வேண்டுகோளுக்குச் சரி என்று ஒரு சொல் சொல். உன்னை இன்ப வானில் ஏற்றி விடுகிறேன். தீமையை விட்டொழிக்க ஏன் மறுக்கிறாய்? உன் இதயத்தை மாற்ற என் சொற்களால் முடியவில்லையே!''

''அம்மையீர்! அன்பும் பண்பும் செறிந்த உங்களுக்கு இந்த உலகு ஓர் இன்பப் பூங்கா. இழிதகையளாகிய எனக்குப் பழி வாழ்வும் புலை மரணமுமே தக்கன. பெண்ணென்று போற்றப்படுதற்குரிய இந்தவொரு நல்ல செயலினையாவது, என் வாணாளில் நிறைவேற்ற முடிந்ததே யென்ற ஆறுதலுடன் இப்போது செல்கிறேன். விடையளியுங்கள்.''

''இரு. சிறிது தொகை தருகிறேன். நீ நேர்மையாக வாழ ஓரளவேனும் உதவும்.''

''ஒரு 'பென்னி'யைக் கூடத் தீண்டேன்.''

''பெண்ணே! நான் நீட்டிய எனது அன்புக் கரங்களை ஏன் ஒடிக்கிறாய்?''

''உங்களது தூய கரங்களால் என்னை இப்போதே கொன்றுவிட்டால், நான் நற்பேறு பெற்றவளாவேன். உங்கள் நன்மொழிகள் எனது கடந்த காலக் கறை வாழ்வினைக் கருத்தூன்றிப் பார்க்கச் செய்தன. சிந்தித்தேன். நீங்களே என் வாழ்வினுக்கு விடையளிப்பின் பெரிதும் மகிழ்வேன். ஆண்டவர் எனக்களித்துள்ள இன்னல்களுக்கும் பழிகளுக்கும் மாறாக மேலான இன்பமும் புகழும் உங்களுக்கருள் வாணாக! நேரமில்லை, நான் வருகிறேன்'' என்று சொல்லித் தேம்பிக்கொண்டே நான்சி, ரோசினிடம் விடை பெற்றுக்கொண்டகன்றாள்.

நான்சி சென்ற பிறகு, வியப்பூட்டும் இந்தச் சந்திப்பு கனவில் நடந்ததா? நினைவில் நிகழ்ந்ததா? என்று தெள்ளிதின் உணரமாட்டாத குழப்பத்தில் தடுமாறிய ரோசு, அப்படியே ஒரு நாற்காலியிற் சாய்ந்து சிதறுண்ட தன் சிந்தனைகளை ஒன்று திரட்ட முயன்றாள். இராப்பொழுது சிறிது சிறிதாக நகர்ந்து கொண்டிருந்தது.

## 22. பிரிந்தவர் கூடினர்

அடுத்த நாள் ஆலிவர் வரலாற்றினை மூடியுள்ள இருட் படலத்தினை யகற்றி எங்ஙனம் உண்மையினை வெளியிடுவதென்று, ரோசு கடந்த சில மணிநேரமாகத் தனித்து ஆராய்ந்து கொண்டிருந்த போது, ஆலிவர் பரபரப்புடன் அறையினுள் நுழைந்து, "அம்மா! சிறிது நேரத்துக்கு முன் நான் அவரைக் கண்டேன்....கண்டேன்....அவரை. நான் உங்களிடம் கூறியவை அனைத்தும் உண்மையென்பதனை இனி அவரால் நீங்கள் அறிய முடியும்!" என்றான்.

"ஆலிவர்! நீ சொன்னவற்றைப் பொய்யென்று நான் என்றும் கொண்டவள் அல்லள். அஃதிருக்கட்டும். நீ கண்டது யாரை?" என்று கனிவுடன் கேட்டாள் ரோசு.

"அவருடைய நல்லியல்புகளைப் பற்றிக்கூட நாம் அடிக்கடி பேசியிருக்கிறோமே அம்மா. அவர்தாம்.... ப்ரௌன்லோ பெருமகனார்."

"ப்ரௌன்லோவா? அவரை எங்கே கண்டாய்?"

"அவர் ஒரு வண்டியினின்றும் இறங்கி ஒரு வீட்டினுள் புகக் கண்டேன். அவர் என்னைக் காணவில்லை. அவரைக் கண்டு பேச எனக்கு உள உறுதி ஏற்படாததால், அவரிருக்கும் வீட்டின் முகவரியினை

மட்டும் கேட்டு எழுதி வந்துள்ளேன். நாம் அவரைக் காணச் செல்வோமா?"

"இப்போதே புறப்படலாம். நாம் சிறிது நேரம் வெளியே சென்று வருவதாகச் சித்தியிடம் சொல்லிவிட்டு வருகிறேன்."

வாடகை வண்டியொன்றில் ஆலிவரும் ரோசும் ஏறிக்கொண்டு ப்ரௌன்லோ தங்கியிருந்த இடத்துக்குப் புறப்பட்டனர். வண்டி வீட்டினை யடைந்ததும், ரோசு ஆலிவரை வண்டியிலேயே இருக்குமாறு சொல்லிவிட்டு, தான் மட்டும் வேலைக்காரி வழிகாட்ட ப்ரௌன்லோவின் அறைக்குள் சென்ருள். அப்போது இருவர் அறையிலிருந்தனர்.

"தாங்கள் தாமே ப்ரௌன்லோ!" என்று ரோசு அங்கிருந்த இருவருள் ஒருவரை வினவினுள்.

"ஆம்....நான்தான். இவர் எனது நண்பர் கிரிம்விக்."

"தாங்கள் எனது இளைய நண்பனெருவனுக்குச் சிறிது காலத்துக்கு முன்பு பேருதவி யளித்தீர்களே, நினைவிலிருக்கிறதா? அவனைப்பற்றி மேலும் அறிய உங்களுக்கு விருப்பந்தானே?"

"அதில் ஐயமேன்?"

"அவனுடைய பெயர் ஆலிவர் டுவிஸ்ட்,"

"அவனுக்கு நான் செய்த உதவியினைப் பெரிதாகப் பேசல் வேண்டாம். அவனைப் பற்றித் தவருக எண்ணும்படி ஏற்பட்டுவிட்டது. அதனை மாற்ற வல்ல செய்திகள் மட்டும் இருந்தால் சொல்லுங்கள்."

"ஆலிவரா? திருட்டுப் பையனுயிற்றே அவன். இல்லையானல் நான் என் காதுகளை அறுத்துக்கொள்கிறேன்" என்று வேண்டப்படாமலேயே இடையில் கிரிம்விக் தம் கருத்தினை வெளியிட்டார்.

"இல்லை! இல்லை! பெருந்தன்மையும் அன்புள்ளமும் பெற்றவன் அவன்" என்று ரோசு கிரிம்விக்கின்

கூற்றினுக்கு மறுப்புரைத்து விட்டு, ஆலிவர் ப்ரௌன்லோ மாளிகையினை விட்டுச் சென்றது முதல் மேலீ அம்மையாரின் பாதுகாப்பின் கீழ் வந்தது வரையில், அவனுக்கேற்பட்ட இன்னல்களை யெல்லாம் எடுத்தோதி, ப்ரௌன்லோ பெருமகனு ரைக் காணாமையால் அவன் கொண்டுள்ள வருத்தத் தையும் வெளியிட்டாள்.

"ஆண்டவனுக்கு என் வணக்கம்! என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. அம்மையே ஆலிவர் இப்போது எங்குள்ளான் என்று சொல்லவில்லையே! நானும் முன்னரே கேட்க மறந்துவிட்டேனே" என்று, தமது கண்களில் ஒளி வீச வினவினார் ப்ரௌன்லோ.

"வாயிலில் வண்டியில் அமர்ந்திருக்கிறான்."

"வாயிலிலா?" என்று கேட்டுக்கொண்டே, ப்ரௌன்லோ ஒரு சிறு பையனைப்போல், இரண்டு மூன்று படிகளாகத் தாவித் தாவிக் குதித்துக் கீழிறங் கித் தெருவினுக்குச் சென்று வண்டியிலிருந்த ஆலி வரைக் கட்டி யணைத்தார்; களிக்கூத் தாடினார்; அன்பு மொழிகள் பொழிந்தார்; அறைக்குள் அழைத்துச் சென்று பெட்வின் அம்மையாருக்குக் காட்டினார்.

பெட்வின் அம்மையார் ஆலிவரைக் கட்டி யணைத்துக்கொண்டு, "என் செல்வமே! நீ என்றே னும் எம்மிடத்துக்குத் திரும்பி வந்துவிடுவாய் என்று எனக்குத் தெரியுமடா! இப்போது நீ ஒரு பெருமகனின் திருமகன் போலவேயிருக்கிறாய்! உனது மாம்பழக் கன்னங்களும் மலர் விழிகளும் என்னை முன்பு போலவே மகிழ்விக்கின்றன" என்று அவனைப் பற்பல விதங்களிற் பாராட்டி மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்தாள்.

ஆலிவரையும் பெட்வின் அம்மையாரையும் ஓரிடத்தில் அமைதியாகப் பேசுமாறு விட்டு விட்டு

ரோசு ப்ரௌன்லோவினை வேறோர் அறைக்கு அழைத்துச் சென்று, அவரிடம் நான்சி தன்பாற் கூறிய செய்திகளனைத்தையும், ஒன்றும் விடாமல் தெரிவித்தாள். அவற்றினை யெல்லாம் பெருவியப்புடன் கேட்டு வந்த ப்ரௌன்லோ, "நாம் மேற்கொண்டு துணிவதற்கு முன் நான்சியினை வரும் ஞாயிற்றுக்கிழமை யன்று கண்டு மாங்க்சின் அடையாளங்களை நமக்கு அறிவிப்பாளாவென்று கேட்க வேண்டும். மேலீ அம்மையார், மருத்துவர் லாஸ்பெர்ன், வழக்கறிஞர் கிரிம்விக் ஆகியோருக்கு இச் செய்திகளை யறிவித்து, அவர்களின் துணையுடன் ஆலிவரின் வரலாற்றை யாராய்ந்து தெளிந்து, அவனுக்குரிய செல்வத்தை அவனிடம் மீட்டுக் கொடுக்க வேண்டும். இவற்றினையெல்லாம், நாம் ஐவருமன்றிப் பிறரறியாவண்ணம் மறைவாக வைத்திருத்தல் வேண்டும். ஆலிவருக்குக்கூட அறிவிக்கக்கூடாது. என்று பேசி முடித்தார்.

மேற்கண்ட முடிவுகள் செய்யப்பட்டபின் ரோசு ஆலிவரை யழைத்துக் கொண்டு தன் இருப்பிடத்துக்குப் புறப்பட்டாள்.

## 23. ஒற்றாடல்

ரோசினைக் கண்டு பேசிவிட்டு மீண்டதிலிருந்து நான்சியின் உள்ளம் ஒரு நிலையிலில்லை. அவளது உளநோய், உடலினைத் தாக்கியது. முகம் வெளுத்தது. உடல் சுக்குப் போல வற்றியது. பித்துப் பிடித்தவளைப் போல் சில வேளைகளில் கத்துவாள். சில வேளைகளில் ஊமை போல் உட்கார்ந்திருப்பாள். அவளது மாற்றத்துக்குக் காரணத்தைப் பில்லினாற் கூட அறிய முடியவில்லை.

ஞாயிற்றுக்கிழமை வந்தது. இரவு மணி பதினொன்றிருக்கும். பில்லும் பேகினும் பேசிச்

கொண்டிருந்தனர். அப்போது தன் போர்வையினை யெடுத்துக் கொண்டு நான்சி வெளியே செல்ல வெழுந்த பொழுது, பில், "இந்த நேரத்தில் எங்குப் புறப்படுகிருய்?" என்று அதட்டிஞன்.

"சிறிது நேரம் வெளியே சென்று வரலாமென்று நினைக்கிறேன்."

"எதற்காக?"

"எனக்கு உடல் நல மில்லை யென்று சொல்லி யிருக்கிறேனே! காற்றில் உலவி வரலாமென்று புறப் படுகிறேன்."

"நீ வெளிச் செல்லக் கூடாது" என்று உறுமிக் கொண்டே பில் நான்சியைப் பிடித்திழுத்துச் சென்று வேறோர் அறையிலிருந்த நாற்காலியில் அமர்த்தி விட்டுத் தானும் அவள் எதிரில் உட்கார்ந்து கொண்டான்.

மணி பன்னிரண்டாகியது. பேகின் தன் இருப் பிடத்துக்குப் புறப்பட்டான். மாடிப் படிக்கட்டுகள் இருண்டு கிடந்ததால், பேகின் வெளிச்சம் காட்டு மாறு வேண்டிஞன்.

"நான்சி! அந்த விளக்கினை யெடுத்துத் தெருவுக் குச் செல்லும் வரையில் பேகினுக்கு வழி காட்டு" என்றுன் பில். விளக்கினை எடுத்துக்கொண்டு, நான்சி தெருவரையில் பேகின் பின்ஞல் வந்தாள். தெருவில் காலை வைத்த பேகின் திரும்பி, "நான்சி! வருந் தாதே. அவன் ஒரு முரடன்! விலங்கு! நான் உனது உயிர் நண்பன். என்னை நம்பு. நீ பில்லினைப் பழி வாங்க விரும்பிஞல், என்னிடம் ஒரு சொல் சொல். ஒரு நொடியில் அவனை ஒழித்துக் கட்டிவிடுகிறேன்" என்று ஆத்திரமாகப் பேசிஞன். பில்லின்மீது பேகி னுக்கு அவ்வளவு வெறுப்பு.

"நன்றி! சென்று வருக!" என்று சொல்லிக் கொண்டே நான்சி தன் சீற்றம் புலப்படக் கதவினைத்

தடாரென்று சாத்தித் தாழிட்டுக்கொண்டு உள்ளே சென்றாள்.

தெருவில் நடந்துகொண்டிருந்த பேகினின் மூளை விரைவாக வேலை செய்யத் தொடங்கியது. 'நான்சியின் உள்ளத்தில் ஏதோவொரு புதுத் திட்டம் உருவாகியுள்ளது. அதனைப் பற்றித்தான் இந்த நள்ளிரவில் அவள் வெளிச் செல்ல விரும்பினாள். ஓர் ஒற்றனையமர்த்தி அதனைக் கண்டறிய வேண்டும்'' என்று எண்ணிக்கொண்டே பேகின் தன் வீடு திரும்பினான்.

ஒற்று வேலை செய்யப் பேகினுக்கு ஒருவன் அகப்பட்டான். அவன்தான் நோக்ளேபோல். நோக்ளேபோல் பணிப் பையனாகச் சௌபெரியின் வீட்டில் வேலை செய்து வந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். அவன் சௌபெரியினிடமிருந்து பணத்தைத் திருடி வந்து, பேகினது திருக்கூட்டத்தில்—திருடர் கூட்டத்தில்—சில நாட்களுக்கு முன்னர் அடைக்கலம் புகுந்துவிட்டான்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை வந்தது. பில் வெளியூருக்குச் சென்றிருந்தான். அது பேகினுக்குத் தெரியும். எப்படியும் அன்றிரவு நான்சி தன் திட்டத்தினை உருவாக்க வெளிச் செல்லக் கூடுமென்று உறுதியாக நம்பிய பேகின், நோக்ளேபோலினை அழைத்துக் கொண்டு சென்று, பில்லின் வீட்டுக்கெதிரில் இருட்டில் மறைந்திருந்தான்.

மணி பதினொன்றுக்கு மேலாகியது. நான்சி வீட்டின் கதவினைத் திறந்துகொண்டு வெளியே வந்து தெருவினைப் பார்த்தாள். கண்ணுக்கெட்டிய தொலைவு வரையில் மனித நடமாட்டம் காணப்படவில்லை. கதவினை மெல்ல மூடிவிட்டு விரைவாகத் தெருவில் நடந்தாள். அவளைப் பின் தொடரும்படி நோக்ளேபோலினுக்குப் பேகின் குறிப்புச் செய்யவும் அவன் சிறிது தொலைவு இடைவிட்டு, நான்சியினைப் பின் தொடர்ந்தான்.

நான்சி இலண்டன் பாலத்தினை நெருங்குவதற்கும் மணி பன்னிரண்டு அடிப்பதற்கும், சரியாக விருந்தது. யாரேனும் தென்படுகிறார்களா வென்று நான்சி சுற்று முற்றும் பார்த்தாள். ஒருவரும் காணப்படாது போகவே பாலத்தினைக் கடந்து ஆற்றின் மறு கரையிற் போய் நின்றாள்.

அதே வேளையில் பாலத்துக்கருகில் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இளம் பெண்ணொருத்தியும் முதியவ ரொருவரும் இறங்கினர். வண்டி திருப்பியனுப்பப்பட்டது. நான்சி எங்கேனும் ஓடிக்கொண்டிருக்கிறாளா வென்பதனையறிய இருவரும் இருமருங்குகளிலும் பார்த்துக்கொண்டு பாலத்தினைக் கடந்து செல்லும்போது, நான்சி அவர்களை எதிர்நோக்கி வந்தாள். இவற்றினை யெல்லாம் ஒற்றன் மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

"பாலத்தின் நடுவில் நின்றுகொண்டு நாம் பேசுதல் கூடாது. அதோ படிகள் தெரிகின்றனவல்லவா? அங்குச் செல்லலாம்" என்றாள் நான்சி. அப்போது அவளை அச்சம் பற்றிக்கொண்டிருந்த தென்பதனை அவளது நடுங்கிய குரல் காட்டியது.

நான்சி காட்டிய படித்துறைக்கு மூவரும் சென்று அமர்ந்தனர். அவர்களைப் பின் தொடர்ந்த ஒற்றனும், சிறிது உயர்வாகக் கட்டப்பெற்றிருந்த கைப்பிடிச் சுவரின் கீழே மறைந்து கொண்டான். அங்கிருந்து அவர்கள் பேசிக்கொண்ட பேச்சினை நன்கு கேட்க முடிந்ததுடன், பேசுகின்றவர்களின் உருவங்களையும் அவனால் நன்கு காண இயன்றது.

"நான்சி மிகவும் அஞ்சுகிறாள். அவளிடம் அன்பாகப் பேசுங்கள்" என்று பேச்சினைத் தொடங்குமுன் ரோசு, ப்ரௌன்லோவினை வேண்டிக்கொண்டாள்.

"பெண்ணே! கடந்த ஞாயிறன்று நீ ஏன் சொன்னபடி இங்கு வரவில்லை?" என்று பேச்சினைத் தொடங்கினார் ப்ரௌன்லோ.

"வீட்டினை விட்டு வெளிவராதபடி தடுத்து விட்டார்."

"யார்?"

"இந்த அம்மையாருக்கு அந்த மனிதர் யாரென்று தெரியும்."

"இன்று தடுக்கவில்லையா அவர்?"

"இன்று அவர் ஊரிலில்லை."

"நீ தெரிவித்த செய்திகளனைத்தையும் என்னிடமும் நம்பத்தக்க ஒரு சிலரிடமும் இவள் அறிவித்தாள். முதலில் உன்னைப்பற்றி யான் ஐயங்கொண்டதுண்டு. ஆனால், நீ இப்போது உன் சொற்படி ஈண்டு வந்திருப்பதிலிருந்து உன்னை முழுதும் நம்புகிறேன்."

"நம்பிக்கையின் அடித்தளத்தில்தான் மனித வினத்தின் நல்வாழ்வே கட்டப்பட்டுள்ளது. என்னை நீங்கள் ஐம்புலன்களார நம்பலாம்."

"நான்சி! நான் உன்னை உளமார நம்புகிறேன். ஐயுறல் வேண்டா; நான் உன்னை நம்புகிறேன் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு கூறுகிறேன். மாங்க்சு என்பவனைப் பிடித்து அவனிடமிருந்து ஆலிவரின் பிறப்பினைப்பற்றிய உண்மைகளை எவ்வாறேனும்—அன்பூட்டியோ, அச்சுறுத்தியோ—வெளிக்கொணரத் திட்டமிட்டிருக்கிறோம். நீ மாங்க்சை எங்களிடம் காட்டிக்கொடுத்தாக வேண்டும். அவனைக் கைப்பற்றக்கூட வில்லையாயின், பேகினையேனும் ஒப்படைத்தாக வேண்டும். அதற்கு உன் உதவி தேவை."

"ஐயா! பேகின் ஒரு பேயனாக விருக்கலாம். உலகம் இந்நாள் வரையில் கண்டிராத கொடி

யோனுக விருக்கலாம். ஒருவரிடமிருந்து மற்ரெருவரைப் பிரிக்க முடியாத அளவினுக்கு எங்கள் அனைவரின் வாழ்க்கையும் இறுகிவிட்டது. பேகினே அல்லது அவனைச் சேர்ந்தவர்களோ விரும்பியிருந்தால் என்னைக் காட்டிக் கொடுத்திருக்கலாம். ஆனல் அவர்கள் அவ்வாறு செய்திலர். ஆதலால், என்னை நம்பியவர்களின் கழுத்தினை யறுக்க நான் உடன் படேன். இது உறுதி. மாங்க்சினைப் பற்றித் தெரிவிக்கத் தடையில்லை. ஆனல், அவன் மற்றவர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டால்—?"

"ஆலிவரைப் பற்றி அவனுக்குத் தெரிந்துள்ள உண்மைகளை எங்களிடம் அவன் ஒளிக்காமற் கூறிவிட்டால், அவனை அவ்வளவில் விட்டுவிடுவோம். மற்றவர்களைப்பற்றி நினைக்கவும் மாட்டோம். ஆலிவரின் வரலாற்றில், உலகோர் அறியத் தகாத சில செய்திகளும் விரவியிருக்கவும் கூடும், ஆதலால், இதில் தொடர்புடையவர்களை வெளிக்குக் காட்டா திருத்தலே நன்று."

தங்கள் குழுவினைச் சார்ந்தார் எவரும் காட்டிக் கொடுக்கப்படார் என்ற உறுதியினை ப்ரௌன்லோ விடமிருந்து பெற்றுக் கொண்ட பின், நான்சி மாங்க்சின் தோற்றம், நெடுமை, பருமை, நிறம், உடை, நடை, பண்பு, அவன் அடிக்கடி செல்லுமிடம், தங்கியிருக்குமிடம், அவனது நண்பர்கள் ஆகியவற்றினைக் குறித்து விளக்கமாகவும் நுட்பமாகவும் அவருக்கு எடுத்துக் கூறினள்.

"பெண்ணே! பெரிதும் எங்களுக்குப் பயன்படக் கூடிய உதவியினை நீ இப்போது செய்துள்ளாய். அதற்காக உனக்குக் கைம்மாறு செய்ய விரும்புகிறேன்" என்ருர் ப்ரௌன்லோ.

"ஆலிவர்பால் யான் கொண்டுள்ள அன்பினல் யான் இங்கு வந்தேனே யன்றி கைம்மாறு கருதி வந்தேனல்லேன்."

"என் உதவியினை மறுக்காதே. சிந்தித்து வேண்டுவதனைக் கேள். உனது கடந்த கால வாழ்வு பாலைவனமாய்ப் போய்விட்டது. இறைவன் உனக்கருளியுள்ள இளமையும், அறிவும், ஆற்றலும் தீமைகளின் வளர்ச்சிக்கே பயன்பட்டு விட்டன. உனது உள்ளத்துக்கு அமைதியும், அறிவுக்குப் பெருமையும், ஆற்றலுக்கு ஆக்கமும் பெருமளவில் நல்க எம்மாலாகாதென்பதனை ஒப்புக்கொள்கிறேன். அவற்றினை நீயேதான் தேடிக்கொள்ளல் வேண்டும். ஆனால், ஓர் அமைதியான சூழ்நிலையினையும் தூய வாழ்வினையும் நீ விரும்பினால் அவற்றினை, இந்நாட்டில் உன் பகைவர்களாலும் அறிய முடியாத ஓர் இடத்திலோ, அல்லது வெளிநாட்டிலோ, எங்காயினும் தேடித்தர எங்களால் இயலும். நீ அந்த விடங்கொண்ட பட அரவு போன்றார்கள்பால் மீண்டேகுதலை யான் விரும்பேன். காலமும் நட்பும் இப்போது உனக்குக் கைகொடுக்கக் காத்து நிற்கின்றன. அறியாமையினால் அவற்றினை உதைத்துத் தள்ளாதே."

"பெரியோரே! மீள வியலாத அளவு, தீய நெறியில் நான் முன்னேறிவிட்டேன். உண்மையாகவே நான் வெறுக்கின்றேனெனினும் என் வாழ்வு, அதனுடன் பிரிக்க மாட்டாதபடி, பிசின்போல ஒட்டிக் கொண்டுள்ளது. எனக்கு அச்சம் மீண்டும் மீதூர்கின்றது. விடையளியுங்கள் வீட்டுக்குச் செல்ல."

"அதனை வீடென்றா சொல்லுகிறாய்?" என்றாள் ரோசு இடையில்.

"ஆம். எனது கறைச் செயல்களாலும் கண்ணீர்ப் பெருக்காலும் பல ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட அவ்விடம்தான் எனது வீடு. அதனுடன் யான் ஒன்றிவிட்டேன். எனக்கு விடையீந்து என்னையனுப்பி வைப்பதே, யானாற்றியுள்ள தொண்டினுக்கு நீங்கள் இப்போது எனக்குச் செய்ய வேண்டிய கைம்மாறு."

நான்சியுடன் வாதாடுவதால் யாதொரு பயனும் விளையாதென்பதனை யுணர்ந்துகொண்டப்ரெளன்லோ, "நாம் இனிமேலும் இவளை இங்கு நிறுத்தி வைப்போமாயின் இவளுக்குக் கேடு விளைவித்தவர்களாவோம்" என்று ரோசிடம் சொல்லிவிட்டு, நான்சிக்கு விடையளிக்க எழுந்தார். இளநங்கையாயிருந்தும், நான்சி தனது கொள்கையிற் காட்டிய உறுதியும், தனக்குத் தீங்கிழைப்போரிடமும் அவள் காட்டும் பற்றுள்ளமும் அவரது நெஞ்சினை நெகிழ்வித்தன.

"பேதைப் பெண்ணே! உன் வாழ்வு எப்படி முடியப் போகிறதோ?" என்று, ரோசு நான்சியினையணைத்துக்கொண்டு கழிவிரக்கத்துடன் பேசினாள். "அம்மையே! நம் எதிரில் அமைதியாகப் பாய்ந்தோடும் இந்த ஆற்றின் கருநீர்தான் எனக்குப் புகலிடம். நான் ஒருத்தி இப் பூமியில் பிறந்தேன், வளர்ந்தேன், வாழ்ந்தேன் என்ற சுவடுகூடத் தெரியாதபடி என்றேனுமொருநாள், இது என்னை விழுங்கி ஏப்பம் விடப் போகிறது" என்று தழுதழுத்த குரலில் பேசினாள் நான்சி.

இந்தச் சொற்களைக் கேட்ட ரோசுக்கு அழுகை வந்துவிட்டது.

"வகுத்த வகையே யாவும் வரும்" என்று நான்சி ரோசினுக்கு ஆறுதல் மொழிந்து, அவள் (ரோசு) தனது நினைவுச் சின்னமாக ஈந்த ஒரு கைக்குட்டையினைப் பெற்றுக்கொண்டபின் அவ்விடத்தினின்றும் எழுந்தாள். ரோசும் ப்ரெளன்லோவும் புறப்பட்டனர். அவர்கள் சென்றபின் நான்சி படிக்கட்டின்மீது படுத்துக்கொண்டு வாய்விட்டுக் கதறினாள். கதறல் அவளது உள்ளச் சுமையினை ஓரளவு குறைத்தது. பின்னர் எழுந்து தன்னிடத்துக்கு விரைந்தாள்.

அதுகாறும் கைப்பிடிச் சுவரின்கீழ் மறைந்து ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த நோக்ளேபோல், புதைபொருளேக் கண்டறிந்துவிட்ட ஓர் ஆராய்ச்சி யாளனைப்போல, எக்களிப்புடன், பேகின் வீட்டினை நோக்கிக் காற்று வேகத்தில் ஓடினான்.

## 24. சாவின் கரங்களில்

பொழுது விடிவதற்கு இரண்டு மணி நேரம் இருந்தது. என்றாலும் அப்போது கார்காலமாத லால், நள்ளிரவு போன்று எங்கும் இருள் மண்டிக் கிடந்தது. கள்ளர்களும் பித்தர்களும் கூடிப் படுக் கையிற் கனவுகள் கண்டுகொண்டிருந்தனர். இலண் டன் நகரமே உறக்கத்தில் மூழ்கிக் கிடந்தது. ஆனால், பேகின் மட்டும் உறங்காமல் எதனையோ பறி கொடுத்தவனைப்போல் தன்னறையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அப்போது அவனது உள்ளத்தி லடித்துக்கொண்டிருந்த புயலை, அவனுடைய சிவந்த கண்களும், நிமிர்ந்த புருவங்களும், வெளுத்துப் போன முகமும் எடுத்துக் காட்டின. அவனது பார்வை, மேசைமீது எரிந்து சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டிருந்த மெழுகு வர்த்தியின்மீது பதிந்திருந்தது. அதனைப்போலத் தன் வாழ்வும் தேய்ந்து குன்றிவிடுமோ என்ற அச்சம் அவனை அலைக்கழித்தது. நான்சியின் நன்றிகொன்ற செய லால் தான் போட்டிருந்த திட்டம் உருப்பெறாமல் கெட்டமை; நான்சி தன் கூட்டத்தாரிடம் காட்டும் வெறுப்பு; பில்லினைக் காட்டிக்கொடுக்க அவள் மறுத் தது; எந்த நேரத்திலும் தான் எதிரிகளால் பற்றக் கூடும் என்ற அச்சம்-ஆகிய இத்தனைச் சிந்தனை யலை களும் அவன் உள்ளக் கடலில் ஓங்கியோங்கி வீசின.

அறையினுள் ஒரு மூலையில், நோக்ளேபோல் பாய்மீது உறங்கிக் கொண்டிருந்தான். அப்போது கதவு தட்டப்படும் ஓசை கேட்கவே, பேகின் எழுந்து சென்று கதவினைத் திறந்தான். பில்ஸ்கைஸ் ஒரு சிறு முடிச்சுடன் உள்ளே நுழைந்தான். தன் கையி லிருந்த மூட்டையை மேசையின் மீது வைத்து விட்டுப் பேகினை நோக்கி, "இதனை நன்கு பயன்படுத் திக்கொள். இதனைப் பற்றுவதற்கு நான் என்ன பாடுபட்டேன். தெரியுமா?" என்றான் பில்.

பேகின் அந்த முடிச்சினை யெடுத்துப் பெட்டியில் வைத்துப் பூட்டிய பிறகு, பில்லின் எதிரில் வந்து ஒரு நாற்காலியில் வாய் திறவாது உட்கார்ந்தான். பேகின் தன்னைப் பாராட்டுவான் என்று எதிர் பார்த்த பில், அவன் முகத்தைப் பார்த்தான். பேகின் ஒன்றும் பேசாது, தன் விரல் நகத்தினைக் கடித்துக் கொண்டே வைத்த கண்ணை வாங்காமல் பில்லின் முகத்தினையே உற்று நோக்கினான்.

"ஏன் என் முகத்தினை அப்படிப் பார்க்கிறாய்?" என்று வியப்புடன் வினவினான் பில்.

ஏதோ சொல்ல முயற்சி செய்பவனைப் போலப் பேகின் தன் விரலை யாட்டிக்கொண்டே வாயைத் திறந்தான். ஆனால், சொற்கள் வெளி வந்தில. துக்கம் அவன் தொண்டையை அடைத்ததுதான் காரணம்!

"என்ன? ஏதேனும் செய்தி உண்டோ?" என்று பரபரப்புடன் கேட்டான் பில்.

"நான் சொல்லப் போகும் செய்தியினைக் கேட்டால், என்னைவிட நீ மிகவும் அரண்டு போவாய்."

"செய்தியினை விரைவாகச் சொல். நான் குறிப்பிட்ட நேரத்தில் வீடு திரும்பாவிடில், நான் அவளைக் கைவிட்டு விட்டதாக எண்ணி நான்சி வருந்துவாள்."

"அவள் உன்னை முன்னரே கைவிட்டு விட்டாள். தெரியுமா?"

"என்ன சொல்லுகிருய்? சொல்வதனை விளக்கமாகச் சொல்."

"அதோ படுத்துறங்குகிருனே, அந்தப் பையன், நம் எதிரிகளிடம் சென்று, நம் நடவடிக்கைகளைப் பற்றியும், நம்மைக் கைப்பற்றும் வழிகளைப்பற்றியும் சொல்லிவிடுகிருன் என்று வைத்துக்கொள். அப்போது நீ என்ன செய்வாய்?"

"நான் வரும் வரையில் அவனை உயிருடன் விட்டு வைத்திருந்தால், அவனை என் காலடியில் போட்டு மிதித்து நசுக்கிக் கொன்று விடுவேன்."

"நானே அந்தச் செயலைச் செய்திருந்தால்....?"

"நீயோ, அல்லது வேறு யாரோ அதனைச் செய்திருந்தாலும், அதே பரிசுதானளிப்பேன். காலத்தைக் கடத்தாமல் செய்தியினைச் சொல்."

பில் கேட்ட கேள்விகளுக்குப் பேகின் நேராக விடை பகராமல், உறங்கிக் கொண்டிருந்த நோக்ளே போலினை யெழுப்பி, இலண்டன் பாலத்துப் படித்துறையில் அவன் கேட்ட உரையாடலை அப்படியே பில்லினுக்கு எடுத்தோதச் சொன்னுன்.

க்ளேபோல் தான் கேட்ட செய்திகளைச் சொல்லிக் கொண்டு வரும்பொழுதே, பில்லின் கண்கள் சிவந்தன. உதடுகள் துடித்தன. அப்போது அவன் விட்ட நெட்டுயிர்ப்பு அண்டையிலிருந்தவர்களைச் சுட்டெரித்தது. மிகுந்த சினத்தால் அவன் மண்டையே வெடித்து விடும் போலாயிற்று. க்ளேபோல், தன் பேச்சினை முடிக்கும் வரையிற்கூட அவனுற் பொறுக்க முடியவில்லை. பெருஞ் சீற்றத்துடன் துள்ளி யெழுந்து வாயிற் கதவண்டை ஓடினுன். பேகின் தன் இருகைகளையும் அகல விரித்து

அவனைத் தடுத்து, "பில்! அவசரப்பட்டு அடாததைச் செய்து, அல்லலை வருவித்துக் கொள்ளாதே" என்று எச்சரிக்கை செய்தான்.

"எது வரினும் வருக! என்னைத் தடுக்காதே! உம்....வழி விடு" என்று இரைந்துகொண்டே அவன் கைகளைத் தட்டிவிட்டுத் தெருவிற் பாய்ந்தான் பில்.

வீட்டினை யடைந்த பில், அறையினுட் புகுந்து கதவினை உட்புறமாகத் தாழிட்டான். அருகிலிருந்த மேசையினை யிழுத்துக் கதவினைச் சாரப் பொருத்தினான். மேசை யிழுக்கப்படும் ஓசை கேட்டு, நான்சி கண் விழித்தாள். எதிரில் ஓர் எரிமலைபோல் நின்ற பில்லினைப் பார்த்துப் புன்னகை புரிந்துகொண்டே, "ஓ! நீங்களா?" என்று வரவேற்றாள்.

"ஆம்! நான்தான்....எழுந்திரு."

இந்த ஏவலைப் பில் விடுவித்தபோது, அவன் குரல் இடிபோல் முழங்கியது. நான்சி நடுநடுங்கிப் போனாள். சீலையை அவள் விலக்கச் சென்றபோது, "திரையினை விலக்காதே! நான் செய்யப் போகும் வேலைக்கு இந்த வெளிச்சமே போதும்" என்று கூச்சலிட்டுக்கொண்டே நான்சியின் தலை மயிரைப் பற்றி நடுவறைக்கு இழுத்து வந்து, தன் வலிய கரத்தால் அவள் வாயினைப் பொத்தினான்.

"பில்! என் வாயினை ஏன் பொத்துகின்றீர்கள்? நான் கத்துவேன் என்ற அச்சமா? கத்தவே மாட்டேன். உதட்டினைக்கூட அசைக்கேன். நான் என்ன தவறு செய்துள்ளேன் என்று என்னிடம் சொல்லுங்கள்."

"எல்லாம் உனக்குத் தெரியும். அடுக்களையில் நடந்தது அம்பலத்துக்கு வந்துவிட்டது. நீ படித்

துறையில் படித்த பாடத்தின் ஒவ்வோர் எழுத்தும் எனக்குத் தெரிந்துவிட்டது.''

''தெரிந்துவிட்டால் என்ன? உங்கள் உயிரினைக் காக்கவே நான் அவ்வளவு பாடுபட்டேன். அது போல் நீங்களும் என் உயிரினைக் காக்க வேண்டும். உங்கள் கால்களைப் பற்றிக் கொள்கிறேன். என்னைக் கொல்ல உங்கள் உளம் துணியுமா? நேற்று ஓர் இரவு மட்டும் உங்களைக் காக்க நானிட்ட போரினை நீங்கள் கேட்டிருந்தால், உளம் உருகிப் போவீர்கள். சிந்திக்க இன்னும் நேரமிருக்கிறது. உங்களைத் தழுவும் இக் கரங்களைத் தட்டிவிடாதீர்கள். நான் நினைத்திருந் தால், நீங்கள் என்றோ வேறுலக மனிதராகப் போயி ருப்பீர்கள். நான் அப்படிச் செய்ய உள்ளத்தால் உடம்படவில்லை. உங்களிடம் உண்மையாக நடந்து கொண்டிருக்கிறேன். என் இளமை, எழில், அறிவு, ஆற்றல், மேன்மை, வாழ்வு ஆகிய அனைத்தையும், உங்கள் நல்வாழ்வு என்ற பீடத்தில் பலியிட்டுக் கொண்டேன். ஒரு சமயம் என் காலடியில் வீழ்ந்து கெஞ்சிய திருமகளை உங்களுக்காகவே உதறி யுதைத்து, உங்களது வறுமையினையும் வஞ்சக வாழ் வினையும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டேன். எனது உள்ளத்தின் ஏவலையும் கேவலையும் உங்கள் பொருட்டே புறக்கணித்துத் தீயோராகிய உங்களுக் குக் கற்புக்கடம் பூண்டேன். இறைவன் பெயரால் கெஞ்சுகிறேன். என்னைக் கொன்று, என் குருதியினால் உங்கள் கைகளைக் கறைப்படுத்திக்கொள்ளாதீர்கள்.''

பில்லினால் ஒன்றும் பேச முடியவில்லை. பேசும் ஆற்றல் அவனுக்கு அப்போதில்லை. தன்னைப் பற்றி யிருந்த அந்த மெல்லியலாளின் பூங்கரங்களது பிணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள, அவன் பெரிதும் முயன்றான். ஆனால், அவள் தன்

பிடிப்பினை விடாமல் மீண்டும், "பில்! அந்தக் கனவானும் இளநங்கையும் வேற்று நாட்டுக்கு என்னையனுப்பி, அங்கு அமைதியான இன்ப வாழ்வு எனக்களிப்பதாகச் சொன்னார்கள். அவர்களை நான் மறுபடியும் கண்டு, என்பால் அவர்கள் காட்டும் அதே அன்பினையும் அருளையும் உங்களிடம் காட்டு மாறு மன்றாடுகிறேன். இந்த நரகத்தினை விட்டு நாம் இருவரும் வெளியேறி, இன்பக் கதிரவன் தவழ்ந்து விளையாடும் வேற்று நாட்டுக்குச் செல்ல லாம். உங்களுக்கு என்னுடன் வாழ விருப்பமில்லை யாயின் நாம் ஒருவரை யொருவர் விட்டு விலகித் தனித்து வாழலாம். ஒருவர் நினைவுகூட மற்றொரு வருக்கு வேண்டாம். நாம் கூடி வாழ்ந்தோம் என்பது பழங்கதையாகட்டும் பில்! காலம் கடக்க வில்லை. சிந்தித்துப் பாருங்கள்" என்றாள்.

கல்லாயிருந்தாலும் ஒரு காலத்தில் உருகும். ஆனால், கல்லினும் வலிய நெஞ்சம் படைத்த அக் கொடியவன் உள்ளத்தில் நான்சியின் கனிமொழிகள் பாய்ந்தில. நான்சியினை உதைத்துத் தள்ளிவிட்டுத் தன் கைத் துப்பாக்கியினை எடுத்தான். அவளை ஒரே மூச்சில் சுட்டுக் கொன்றுவிட வேண்டுமென்பது தான் அவனது துணிபு. துப்பாக்கி வெடியின் ஒலி, தன்னை உடனே வெளிக்காட்டிவிடும் என்ற உண்மை வெறியுற்றிருந்த அந் நிலையிலும் அவனுக்குப் புலப்பட்டது. சுடுவதற்குப் பதிலாகத் துப்பாக்கி யைக் கீழ் மேலாகப் பிடித்துக்கொண்டு, நான்சியின் தலையில் இருமுறை ஓங்கியடித்தான்.

மண்டை பிளந்து, குருதி வெள்ளமாய்ப் பாயப் பிணமாய்த் தரைமீது சாய்ந்தாள் நான்சி. பாறையி னிடையே குழம்பிக் கிடந்த ஒரு நன்னீர்ச்சனை அப் பொழுது வற்றியது! வானத்திலிருந்த மீன் ஒன்று வழுக்கி வீழ்ந்தது!

# 25. வினை சூழ்தல்

இருள் கவிழ்ந்த இரவில், இலண்டன் நகரின் எல்லைக்குள் எத்தனையோ கொடுஞ் செயல்கள் நிகழ்த்தப் பெறுகின்றன. என்றாலும், இன்றிரவு நடந்த நான்சியின் கொலைச் செயல் கொடுமையினும் கொடுமை வாய்ந்தது. கண்டால் கண்ணும், நினைத்தால் உளமும் வெடித்து விடும் கண்ணராவித் தன்மை வாய்ந்தது.

நகரினை மூடியிருந்த இருட்படலத்தை விலக்கிக் கொண்டு கிழக்கில் கதிரவன் தோன்றினான். கதிரவன் ஒளியை மட்டுமா உதவுகிறான்? மக்களுக்குப் புத்துயிரினையும், நம்பிக்கையையும், தெளிவையும், வன்மையையுங்கூட நல்குகிறான். அவனது நீண்ட செங்கரங்கள், மச்சு வீடாயினும் குச்சு வீடாயினும், கோயிற் கோபுரமாயினும் குடிசையின் சுவர் வெடிப்பாயினும், எங்கும் வேற்றுமையின்றிப் பாய்ந்து ஒளியினைப் பரப்பத் தவறுவதில்லை. நான்சி கொடுமையாகக் கொலையுண்டு கிடந்த அந்தப் பாழ் அறையினுள்ளும் பரிதியொளி பாய்ந்தது. அதுகாறும் நான்சியின் சவத்தைப் பில் ஒரு கணம் கூடத் திரும்பிப் பாராது உட்கார்ந்திருந்தான். இருளில் மறைந்து கிடந்த பிணம் பகலவன் ஒளியால் காட்சிக் கிலக்காகித் தன் கோரத் தன்மையினைக் காட்டவும், அதனைக் கண்ணுற்ற பில் அச்சத்தால் துணுக்குற்றான். அதற்குமேல் அந்த அறையிலிருக்க அவனுக்குத் துணிவில்லை. தரையில் தோய்ந்திருந்த குருதிப் புள்ளிகள் அவனைக் கண்டு எள்ளி நகையாடின. குருதி படிந்திருந்த தன் கைகளையும் உடைகளையும் கழுவிய பின்னர், ஒரு மூலையில் முடங்கிக் கிடந்த தன் நாயினை யிழுத்துக்கொண்டு வெளியே வந்து அறைக்கதவினை வெளிப்புறமாகப் பூட்டினான். சாவியினைச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு, கால்கள் காட்டிய வழியில் நடந்தான்.

அச்சம் பற்றியவனுக்கு அமைதி எங்கே? ஊண் எங்கே? உறக்கம் எங்கே? தெருவினில் போவார் வருவார் அனைவரும் தன்னையே நோக்குவது போன்ற ஒரு மயக்கம் அவனுக்கு. அவன் காணும் ஒவ்வொரு பொருளும் நிற்பதும், ஊர்வதும் அவன் புரிந்துள்ள கொலைக் குற்றத்தை வெளியிடத் துடிக்கும் ஒரு வாய் என்ற நினைப்பு. இந்த உள நிலையில் பில் மூன்று நாட்கள் ஓயாது நடந்தான். அவனைப் பின் தொடர்ந்து நாயும் கால் வலி தாங்காது நொண்டி நொண்டி நடந்தது. மூன்றும் நாள் இரவு ஒன்பது மணிக்கு ஒரு சிற்றூர்ச் சத்திரத்தை யடைந்தான். சிலர் கணப்பருகே அமர்ந்து தீக் காய்ந்து கொண்டிருந்தனர். அவர்களிடம் அமரப் பில்லுக்குத் துணிச்சல் உண்டாகவில்லை. தன் நாயுடன் இருண்ட ஒரு மூலைக்குச் சென்று உட் கார்ந்துகொண்டு உணவு கொணர ஏவினன். வந்த உணவினைத் தானும் உண்டு நாயினுக்கும் போட்ட பின் உறங்கத் தொடங்கினன்.

உறங்கிக் கொண்டிருந்தவன், கூச்சல் கேட்டுக் கண் விழித்தான். ஒரு தெரு வணிகன் தன் பையினைப் பிரித்து அதனுள்ளிருந்த பொருள்களை யெடுத்து வேடிக்கையாகப் பேசி விலை கூறிக் கொண்டிருந்தான். அவன் ஒரு பொருளினை எடுத் துத் தன் கையில் வைத்துக்கொண்டு அங்கிருந்தவர் களுக்கு அதனைப்பற்றி ஒரு சிந்து பாடிக் கொண் டிருந்தான்.

கூட்டத்திலிருந்த ஒருவன், அந்த வணிகன் காட்டிய ஒரு பொருளைப் பார்த்து," அது என்ன? தின் பண்டமா? தின்றல் இனிக்குமா?" என்று கேட்டான்.

"இது தின்பண்டமல்ல. எந்தப் பொருளில் எத்தகைய கறை யிருப்பினும், அதனைக் கணப் பொழுதில் அகற்றவல்ல இணையற்ற, விலை மதிக்க முடியாத மருந்து இது. குருதிக் கறை, குழம்புக்

கறை, சாராயக் கறை, சாயக் கறை, பழக் கறை, மைக் கறை, எந்தக் கறையாயினும் சரி, கறைபட்ட விடத்தில் இந்த மருந்தினை ஒரு முறை தேய்த்தால், ஒரு நொடியில் கறை நீங்கி விடும். இதன் விலை ஒரு 'பென்னி' தான். (பில்லினைச் சுட்டிக் காட்டி) இதோ இருக்கிறாரே இந்தக் கனவான். அவரது தொப்பியிலிருக்கும் கறையினை ஒரு கணத்தில் நீக்கிவிடுகிறேன் பாருங்கள்" என்று ஒரு குட்டிச் சொற்பொழிவாற்றிக் கொண்டே, பில்லின் தலையி லிருந்த தொப்பியினை எடுத்தான் அவன்.

"தொப்பியினைத் தொடாதே. கொடு" என்று சீறிக்கொண்டெழுந்த பில் அவனிடமிருந்து தன் தொப்பியினைப் பிடுங்கிக்கொண்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினான்.

கொள்ளிக்கும் விள்ளாத கூரிருள் யாண்டும் படர்ந்திருந்தது. தனிமையும் இரவும் நடந்து செல் லும் பில்லின் அச்சத்தை மிகுவித்தன. அவன் நடை யின் எதிரொலியே, நான்சியின் ஆவி தன்னைப் பின் தொடர்வது போன்று அவனுக்குத் தென்பட்டது; காற்றில் இலைகள் அசைந் தெழுப்பிய சலசலப்பு நான்சி மரணவேதனையில் முனகுவதுபோலப் பட்டது. வழியில் தென்பட்ட ஒரு குடிசையின் தாழ்வாரத்தில் படுத்துக் கண்களை மூடினான். அப் போதும் அவன் துன்பங்கள் அகன்றில. அந்தக் கண்கள் அவனை அன்புடன் நோக்கிக் கெஞ்சின. கண்களை விழித்தான்; அவனது உடலில் ஒவ்வோர் உறுப்பும் கிடுகிடுத்தது. மயிர்க்கால்தோறும் வியர்வை வெள்ளமாய்ப் பெருகியது. இன்னது செய்வதென் றறியாது அவன் உளம் குழம்பிக் கொண்டிருக்கையில் சிறிது தொலைவில் பெருங் கூச் சல் கேட்டது. அவ்விடத்தை நோக்கி ஓடினான் பில்.

தீயில் வீடுகள் எரிந்து கொண்டிருந்தன. ஆண் களும் பெண்களும் எரியும் வீடுகளினின்றும் தத்தம்

உடைமைகளை வெளிக்கொணர்ந்து கொண்டிருந்தனர். சிலர் வீடுகளை நீரால் அணைத்துக் கொண்டிருந்தனர். நெருப்பினை அணைக்கப் பில் தன்னாலான உதவிகளைப் புரிந்தான். தீ ஒருவாறு தணிந்தது. ஆனால், அவன் உள்ளத்தினை எரித்துக்கொண்டிருந்த தீ மேன்மேலும் பொங்கி யெழுந்தது.

அங்குக் கூடியிருந்த கூட்டத்தாருள் ஒருவன், இலண்டன் நகரில் நடந்த கொலையினைப் பற்றிப் பேசி வரும்போது, "கொலையாளி, எங்கோ நாட்டுப் புறத்துக்கு ஓடிவிட்டானாம். ஒற்றர்கள் அவனைத் தேடித் திரிகின்றனர். காவல் நிலையங்களுக்கு அவன் அடையாளங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன" என்று குறிப்பிட்டது பில்லின் காதுகளில் விழுந்தது.

அதற்குமேல் அங்கிருக்க அவனுக்குத் துணிவு உண்டாகவில்லை. தன் நாயினை இழுத்துக்கொண்டு இலண்டன் நோக்கிப் புறப்பட்டான். அப்போதுள்ள நிலையில் நாட்டுப்புறத்தி லிருப்பதனைவிட இலண்டனில் மறைந்துறைவதே பாதுகாப்பளிக்கும் என்பது அவனது கருத்து. ஆனால், நாயினை என் செய்வது? தனது அடையாளப் பொருள்களுள்அஃது ஒன்றாயிற்றே! அதனைக் கொன்றுவிடுவ தென்று முடிவு செய்து, மேலும் நடந்து கொண்டிருக்கையில் வழியில் குட்டையொன்று தென்பட்டது. பெருங் கல்லொன்றினை யெடுத்துத் தன்னிடமிருந்த கைக் குட்டையினால் அதனைக் கட்டினான். கல்லுடன் கைக் குட்டையினை நாயின் கழுத்தில் கட்டிக் குட்டையில் அதனை மூழகடித்துவிடத் துணிந்து நாயினையழைத்த போது, தனக்கு வரவிருக்கும் ஆபத்தினை யுணர்ந்து கொண்ட அவ்விலங்கு ஊளையிட்டுக்கொண்டே அவ்விடந்தினின்றும் ஓடியது. நாயினைப் பல முறைகள் அழைத்தான். அது ஏன் திரும்பிப் பார்க்கும்? ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டது. பில் மட்டும் தனியனாய் இலண்டனை நோக்கி நடந்தான்.

## 26 மாங்க்சு பிடி படல்

அந்தி மயங்கும் வேளையில், ஒருநாள் ப்ரௌன்லோ ஒரு வாடகை வண்டியிலிருந்து தமது வீட்டின்முன் இறங்கினார். அவரைத் தொடர்ந்து மூவர் இறங்கினர். நடுவ ணிருந்தவனை இரு பக்கங்களிலும் இருவர் பற்றி இழுத்துக்கொண்டு வீட்டினுட் சென்றனர். நடுவிலிருநதவனே மாங்க்சு.

மாடியிலிருந்த தனியறை யொன்றில் மாங்க்சினை விட்ட பின்னர் மற்ற இருவரும்வெளியேறினர். ப்ரௌன்லோவும் மாங்க்சுமே அவ்வறையிலிருந்தனர்.

"என் தந்தையின் பழைய நண்பரென்று சொல்லிக்கொள்ளும் நீங்கள் என்னை இவ்விதம் துன்புறுத்தலாமா?" என்று கசப்புடன் கேட்டான் மாங்க்சு.

"உன் தந்தை எனது பிள்ளைப் பருவ நண்பராக விருந்தார் என்ற காரணத்துக்காகவும், அவரது உடன் பிறந்தாளை நான் மணக்கவிருந்தேன் என்ற காரணத்துக்காகவுமே நான் உன்னைத் தொல்லைகட்குள்ளாக்க விரும்பவில்லை."

"என்னை எதற்காக இங்கு இழுத்து வந்திருக்கின்றீர்கள்?"

"எட்வர்டு லீ போர்டு? அதுதானே உனது உண்மைப் பெயர்? உனக்கு ஒரு தம்பியுள்ளான் அல்லவா?"

"நான் தனியன், அது உங்களுக்குத் தெரியுமே."

"சரி; நான் இப்போது வெளியிடும் செய்திகளைக் கேள். உன் தந்தையான எட்வின் லீ போர்டு, தம் பெற்றோர்களின் வற்புறுத்தலுக் கிணங்கி, உன் தாயை மணந்தார். எனினும், உன் பெற்றோர்கள் நீண்ட காலம் ஒற்றுமையுடன் வாழ்ந்திலர். நீ பிறந்த பின் அவர்களிருவரும் பிரிந்து தனித்து

வாழ்ந்தனர். உன் தாயை விட்டு விலகிய பின்னர் உன் தகப்பனுருக்குக் கடற்படை யலுவலர் ஒருவரின் நட்புக் கிடைத்தது. அவருக்கு ஏக்னசு, ரோசு என்ற இரு பெண்கள் உண்டு. மூத்தவளான ஏக்னசை உன் தந்தை மணந்தார். ஏக்னசு சில தினங்களில் கருவுற்ருள். அவள் கருவுற்றிருக்கையில் அவளை விட்டு விட்டு உன் தந்தை ரோம் நகருக்குச் செல்ல நேர்ந்தது. அவர் ஊரை விட்டுச் செல்லுமுன் ஒரு பெண்ணின் படத்தை என்னிடம் கொடுத்துவிட்டுச் சென்ருர். அவர் அந்நகருக்குச் சென்ற சில நாட்களுக்குள் நோயுற்ருர். அப்போது பாரிசு நகரிலிருந்த உன் தாய் அவர் நோய்வாய்ப் பட்டிருத்தலைக் கேள்விப்பட்டுச் சிறுவனுகவிருந்த உன்னையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு உரோம் நகரினையடைந்தாள்; அவள் அங்குச் சேர்ந்த மறு நாளே உன் தந்தை மாண்டார். அவரது செல்வமனைத்தையும் உன் தாய் உடனே கைப்பற்றிக்கொண்டாள்.

"ஏக்னசுவுக்குப் பிறந்த மகனே ஆலிவர்; உன் தம்பி. சூழ்நிலையிலும் வலியதான ஊழ் ஆலிவரை ஒரு பொழுது என்பால் கொண்டு சேர்த்தது. உன் தம்பியின் முழுச் சாயலையும் அப்பெண்ணின் (ஏக்னசின்) படத்தில் கண்ட நான், ஆலிவரின் வரலாற்றினை யறிய முயற்சி செய்துகொண்டிருந்த போது உன் நண்பர்கள் அவனைக் கடத்திச் சென்று விட்டனர். உன் அன்னை இறந்து விட்டதாலும், உன்னைக்கொண்டே ஆலிவரின் வரலாற்றினை யறிய வேண்டியிருந்ததாலும், உன்னை நான் இந்நாள் காறும் தேடியலைந்தேன்,

"உன் தம்பிதான் ஆலிவர் என்பதும், அவனுக்கு உன் தந்தை தம், செல்வத்தின் பெரும் பகுதியினை ஓர் உறுதித் தாள் (உயில்) மூலம் எழுதி வைத்தார் என்பதும், அவ் உறுதித் தாளினை உன் தாய் எரித்து விட்டு இறக்குமுன் அவர் செல்வம் அனைத்தையும்

உன்பால் ஒப்படைத்ததுடன் ஆலிவரைப் பற்றிய வரலாற்றினையும் உனக்குத் தெரிவித்துள்ளாள் என்பதும், ஆலிவரைக் கைப்பற்ற நீ திட்டங்கள் வகுத்தாய் என்பதும், அத்திட்டங்களை வெளியிட்டவொரு காரணத்துக்காக ஒரு மாதரசி கொல்லப்பட்டாள் என்பதும் இப்போது அம்பலமாகிவிட்டன. மாங்க்சு! நான் இதுகாறும் கூறிய செய்திகள் அரைகுறையானவை. நீ எஞ்சியுள்ள செய்திகளையும் வெளியிடுவாயாயின் உயிர் தப்பிப் பிழைக்கலாம். என்ன? வெளியிடுவாயா?"

"வெளியிடுவேன்."

"சரி! நீ சொல்ல வேண்டிய உண்மைச் செய்திகளனைத்தையும் ஒரு தாளில் எழுதிக் கையொப்பமிட்டு வை. தக்க சான்றுகள் முன்னர் மீட்டும் அச்செய்திகளை உண்மை யென்று நீ ஒத்துக்கொள்ள வேண்டும். உன் தந்தை, உறுதித் தாளில் (உயிலில்) எழுதியிருந்தபடி ஆலிவருக்குச் சேரவேண்டிய செல்வத்தினை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும். இவற்றினைச் செய்து முடித்த பின்னர் நீ விடுதலை பெறுவாய்."

"அப்படியே செய்கிறேன்.

இவ் வுறுதியினைப் பெற்றுக்கொண்டு ப்ரௌன்லோ அறையிலிருந்து வெளிக் கிளம்பவெழுந்த போது, லாஸ்பெர்ன் வேகமாக அறையினுட் புகுந்து, "அவன் இன்றிரவு பிடிபட்டுவிடுவான்" என்றார்.

"கொலையாளிதானே?"

"ஆம்?"

"பேகின்........?"

"இதற்குள் பிடிபட்டிருப்பான்."

பின்பு, இருவரும் அறையினை விட்டு அகன்றனர். மாங்க்சு பூட்டப்பட்ட அந்த அறையினுட் கிடந்தான்.

## 27. கறை வாழ்வின் மறைவு

தேம்சு ஆற்றின் தென் கரையில் ஏழைகள் பேட்டையொன்றுண்டு. அங்கிருந்த வீடுகள் அனைத்தும் சிதைந்தவை; சரிந்தவை; பாழ்பட்டவை. இப்படிப்பட்ட வீட்டின் மாடியறை யொன்றில் மூவர் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் மூவரும் பேகினின் மாணுக்கர்கள்.

"பேகின் எப்போது பிடிபட்டான்?" என்று ஒருவன் அடுத்திருந்தவனைக் கேட்டான்.

"இன்று பிற்பகல் இரண்டு மணிக்குப் பேகினைச் சுற்றி ஒரு பெருங்கூட்டமே கூடியிருந்தது. காவலர்கள் மட்டும் தடுத்திராவிடில், மக்கள், பேகினைக் கால் வேறு கை வேருகப் பிய்த்து எறிந்து விட்டிருப்பார்கள். பேகின் உடல் முழுவதும் குருதி வெள்ளத்தில் மூழ்கியிருந்தது. அவனால் நிற்கக்கூடவியலவில்லை" என்று பேகின் பிடிபட்டதனைக் கண்டவன் விளக்கமாகக் கூறினுன்.

அப்போது பில்லின் நாய் அவ்வறையினுள் நுழைந்தது. அதனைக் கண்டு, டோபி என்பவன். "என்ன? நாய் மட்டும் வருகிறதே? நாய் மட்டும் தனித்து வருவதால், பில் இங்கு வரமாட்டானென்றே நினைக்கிறேன்" என்றுன்.

"ஒன்று பில் தற்கொலை செய்துகொண்டிருக்க வேண்டும். அல்லது நாட்டைவிட்டு வெளியேறியிருக்கவேண்டும். அதனுற்றுன் நாய் தனித்து வந்துள்ளது. டோபி! நாயினுக்கு உணவு போடு. அது மிகவும் சோர்ந்து வந்திருக்கிறது" என்றுன் ஜேக் என்பவன்.

இட்ட உணவினை யுண்டுவிட்டு நாய் ஒரு மேசையினடியிற் சென்று படுத்துக்கொண்டது.

இரண்டு நாட்களுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சி அங்கிருந்த அவர்களது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து வேதனையை விளைவித்துக்கொண்டிருந்தது. தங்களது முடிவு யாதாகுமோவென்ற அச்சம் அவர்களையும் அலைக் கழித்தது. மூவரும் நெருக்கமாக அமர்ந்து ஒருவர் முகத்தினையொருவர் படம் பிடித்துக்கொண்டிருந்தனர்.

அப்போது வாயிற் கதவினை விரைவாகத் தட்டும் ஒலி கேட்டது. டோபி, கீழே சென்று கதவினைத் திறந்தான். கைக்குட்டையினுல் தன் முகத்தினை மறைத்துக் கொண்டிருந்த ஒருவன், டோபிக்குப் பின்னுல் மாடிப்படிகள் ஏறி அறையினுட் புகுந்தான். புகுந்த பின் தன் முகத்திரையினை விலக்கினுன். வெளிறிய முகம்; ஆழத்தில் பதிந்திருந்த கண்கள்; வற்றிப்போன கன்னங்கள், அழுக்கேறிய உடைகள்—இக்கோலத்தில் அவர்கள் முன் நின்றுன் பில். சில நாட்களுக்குள் அப்படி உருமாறிப் போன பில்லினைக் கண்டு அவர்கள் வியப்புற்றனர்.

பில்லுடன் எவரும் பேச முன்வந்திலர். அவனும் ஒருவனுடனும்பேசாமல்,ஒவ்வொருவரது முகத்தினையும் உற்று உற்று நோக்கினுன். பில் தம்மைப் பாராத போது அவர்கள் அவனைப் பார்த்தனரே யன்றி, நேருக்கு நேராகப் பார்க்க அஞ்சினர். இறுதியில், அங்கு நிலவிய அமைதியினைக் குலைத்துக்கொண்டே "இந்த நாய் இங்கு எப்படி வந்தது?" என்று பில் வினவினுன்.

"தனியாகத்தான் வந்தது, மூன்று மணி நேரத்துக்குமுன்."

"பேகின் பிடிக்கப் பட்டுவிட்டதாக இன்றைய தினத் தாள்களில் போடப்பட்டிருக்கிறதே! அது மெய்யா? பொய்யா?"

"மெய்தான்."

"நீங்கள் நாசமாய்ப் போக! என்னிடம் சொல்வதற்கு வேறு செய்திகள் இல்லையா?"

ஒருவரும் வாய் திறந்திலர்.

"என்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறீர்களா? அல்லது ஒற்றர்களின் வேட்டை முடியுமளவு, இங்குத் தங்க எனக்கு இடமளிப்பீர்களா?"

"இது பாதுகாப்புள்ள இடமென்று உனக்குத் தோன்றினால், இங்குத் தங்கலாம்" என்று சிறிது தயக்கத்துடன் பதிலளித்தான் டோபி.

மீண்டும் கதவு தட்டப்படும் ஓசை. டோபி சென்று கதவினைத் திறந்தான். சார்லி பேட்ஸ் என்னும் இளைஞன் அறையினுள் நுழைந்தான். பேயினைக் கண்டு அஞ்சுபவனைப்போல, அங்கிருந்த பில்லினைக் கண்டு அவன் அஞ்சிப் பின்னால் நகர்ந்தான்.

"சார்லி! ஏன் பின்னிடுகிறாய்? என்னைத் தெரியவில்லையா உனக்கு?" என்று வினவிக்கொண்டே பில் சார்லி முன் வந்தான்.

"கொலைகாரா! என்னருகில் வராதே! உன்னைக் கண்டு நான் அஞ்சேன். ஊர்க் காவலர்கள் இங்கு வரின் நான் உன்னை அவர்களிடம் பிடித்துக் கொடுக்கத்தான் போகிறேன். நீ என்னைக் கொன்றாலும் அஞ்சேன்" என்று சீற்றத்துடன் பேசிக்கொண்டே, "கொலை! கொலை!! உதவி! உதவி!!" என்று கத்தினான் சார்லி. கத்தியதுடன் நில்லாமல் பில்லின்மீது பாய்ந்தான். ஆடு புலியினைத் தாக்க முற்பட்டதுபோல, இருவரும் தரைமேல் கட்டிப் புரண்டனர்.

டோபி குறுக்கிட்டு பில்லினைப் பற்றியிழுத்து வந்து பலகணி வழியாகத் தெருவைக் காட்டினான். தெருவில் மக்கள் கூட்டம்! கூச்சல்! முழக்கம்! குழப்பம்! தீப்பந்தங்கள்! குதிரைகளின் குளம்பொலி!

"கதவினைத் திறக்கப் போகிறீர்களா? இல்லையா" என்று இரைந்துகொண்டே பலர் வீட்டின் கதவினைப் பலமாகத் தட்டினர்.

"வேண்டுமானால் நீங்கள் கதவினைப் பிளந்தெறியுங்கள்; உள்ளே யிருக்கும் நாங்கள் திறவோம்" என்று அறையினுள்ளிருந்து பதிலும் பிறந்தது.

மேலும் மேலும் கூச்சல் அதிகமாயிற்று. பில் சார்லி பேட்ஸினைப் பிடித்திழுத்துச் சென்று ஓர் அறையினுள் தள்ளிப் பூட்டிவிட்டுச் சாளரத்தினைத் திறந்து தெருவினைப் பார்த்தான். ஒரே கூட்டம்! "உங்களாலானதைச் செய்யுங்கள். ஆனால், என்னைப் பிடித்து விடலாமென்று மட்டும் கனவுகாணுதீர்கள்" என்று கூட்டத்தினை நோக்கிக் கூவினான் பில்; கூட்டத்திலிருந்த சிலர், "வீட்டினைக் கொளுத்துங்கள்" என்று கத்தினர். சிலர், "கொலைகாரனைச் சுடுங்கள்" என்று இரைந்தனர். சிலர் சுவர்கள்மேல் தாவி ஏறிக் கூரைக்குச் செல்ல முயன்றனர்; சிலர், வேறொன்றும் செய்ய மாட்டாதவராய் வசைமாரி பொழிந்தனர்.

சாளரத்தை மூடிவிட்டுத் திரும்பிய பில் அறையிலிருந்தவர்களைப் பார்த்து, "நான் வந்தபோது ஆற்றில் நீர் ஏற்றம் இருந்தது. ஒரு நீண்ட கயிறு கொடுங்கள். நான் கூரை மீதேறிக் கயிற்றின் உதவியால் ஆற்றில் குதித்துத் தப்பிவிடுகிறேன். கயிறு கொடுக்க மறுப்பீர்களானால், இங்கு மூன்று தலைகள் உருளும். நானும் தற்கொலை செய்து கொள்வேன்" என்று மிரட்டினான்.

அஞ்சிய அவர்கள் கயிறொன்றினைக் கொணர்ந்து கொடுத்தனர். கயிற்றினை வாங்கிக்கொண்டு கூரை மீதேறிய பில் ஆற்றினை நோக்கினான். ஆற்றில் நீர் இறங்கிச் சேற்றுப் படுகைதான் தெரிந்தது.

அதற்குள், கதவினைப் பிளந்துகொண்டு காவலர்கள் மாடிப்படிகள் ஏறிவிட்டனர். பில்லினுக்குத் தன்னை எதிரிட்டுள்ள நெருக்கடி பளிச்சிட்டது. ஒரு கணமும் இனித் தாமதிப்பதற்கில்லை. கயிற்றின் ஒரு முனையினை யெடுத்துப் புகைக்கூண்டினைச் சுற்றி இறுகக் கட்டினான். மறு முனையில் ஒரு சுருக்குப் போட்டான். அந்தச் சுருக்கினைக் கழுத்தின் வழியாக இடுப்பு வரையிற் செலுத்தி, இடுப்பில் கட்டிக் கொண்டு ஓர் ஆள் உயரத்தில் தான் தொங்குமாறு செய்துகொண்ட பின்னர், கத்தியால் கயிற்றினை அறுத்தால் ஆற்றில் விழலாம். விழுந்து எழுந்து கரை யேறித் தப்பிவிடலாம். இதுதான் பில்லின் திட்டம்.

பில் ஒரு கையில் கத்தியினைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையினால் சுருக்கினை யெடுத்துத் தன் தலையில் நுழைத்து, இடுப்புக்கு இறக்க முயற்சி செய்துகொண் டிருக்கையில் கால் வழுக்கி விடவும், சுருக்கு விரைந்து மேலேறிக் கழுத்தினை நெருக்கி இறுக்கிவிட்டது. ஐம்பத்து மூன்றடி உயரத்தில் பில்லின் உடல் ஊசலாடியது. அவனது உடற் சுமையினைத் தாங்க மாட்டாது புகைக் கூண்டே அதிர்ந்தது.

அதுகாறும் மேசையினடியிற் பதுங்கிக்கொண் டிருந்த நாய், கூரைமீது தாவி யேறிக் கயிற்றில் தொங்கிக்கொண்டிருந்த தன் தலைவன் சவத்தைப் பார்த்துப் பார்த்துக் குரைத்தது; அழுதது; ஊளையிட்டது; கண்ணீர் வடித்தது; பிணத்தினை நோக்கித் தாவியபோது, குறி தவறிக் கீழே விழுந்தது. கீழே இருந்த கல்லில் தலை பலமாக மோத, மூளை சிதறித் தன் தலைவனுடன் தனது ஆவியை விட்டது. வாழ்வில் பிரியாதிருந்த இரு நண்பர்களும் சாவிலும் பிரியாராயினர்!

# 28. இன்பத்தின் எல்லையில்

**பே**கின் தன் வாழ்நாளில் ஆற்றிய கொடுமைகள் பத்தல்ல; நூறல்ல; ஆயிரக் கணக்கில். எத்தனையோ இளமொட்டுக்கள் அவனது தீக் கரங்களிற் சிக்கிக் கருகிப் போயின. பண்புடையவர்களாக வாழவேண்டிய பல ஆண்களும் சில பெண்களும்கூட, அவனது பசப்புப் பேச்செனும் மதுவினை யுண்டு, மயங்கி, அறிவிழந்து, குறியும், நெறியும், பொறியும் கெட்டுச் சிறைக்கோட்டத்துக்கும், தூக்குமேடைக்கும், தற்கொலைக்கும் ஆளாயினர். பல ஆண்டுகளாக அவன் நிகழ்த்திய திருட்டுக்களாலும், கொள்ளைகளாலும் வறியராயினோர் பலர். அவனுடைய மாணாக்கர்களது அருந் தொண்டில் குறுக்கிட்டதற்காகத் தலைகளை இழந்தவர்கள், கால்களை இழந்தவர்கள், இடுப்புக்கள் ஒடிபட்டவர்கள் பலப்பலர். அரசியலாருக்கும் மக்களுக்கும் அவன் கொடுத்து வந்த தொல்லைகட்கு எல்லையில்லை. அவனை உயிருடனோ பிணமாகவோ கொண்டு வருகிறவர்களுக்கு, ஆயிரக் கணக்கில் பரிசு தருவதாக அரசியலார் அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதனைக்கொண்டே, அவன் விளைவித்து வந்த துன்பங்களை ஒருவாறு கணித்தறியலாம். நான்சி வெளியிட்ட செய்திகளும், ப்ரௌன்லோவின் பெருமுயற்சியும் இல்லாவிடின் இன்னும் எத்தனை யாண்டுகள் பேகினது திருவிளையாடல்கள் நாட்டில் நடைபெற்றிருக்குமோ?

அன்று, பேகின் பிடிபட்ட செய்தியினைக் கேட்டு இலண்டன் நகரமே மகிழ்ச்சிக் கூத்தாடியது. அவனைப் பிடித்த ஒற்றர்களைப் பாராட்டி நாளிதழ்களெல்லாம் பதிகங்கள் பாடின. பேகின் வழக்கினை யாய்ந்த நீதி மன்றத் தலைவர், அவனுக்குத் தூக்குத் தண்டனை வழங்கியபோது, அதனைக் கேட்டுக்கொண்

டிருந்த மக்கள் போட்ட மகிழ்ச்சிக் கூச்சல் விண்ணில் எதிரொலித்தது. கண்ணீர்விட வேண்டிய வேளையிலா களிப்பின் ஆரவாரம் என்று வினவலாம். அவன் விளைவித்த கொடுமைகள் அத்தகையன! மக்களின் பொறுமைக்கு ஓர் எல்லையுண்டல்லவா? எத்தனையோ சாவுகளுக்குக் காரணமாயிருந்த பேகினுக்கும் ஒரு முறைதானே தூக்குத் தண்டனை! நன்மலர்ச் சோலையின் நடுவிலிருந்து நாசத்தினை விளைவித்து வந்த ஒரு நச்சு மரம் வேருடன் வெட்டி வீழ்த்தப்பட்டது! அவனது மறைவினைக் கேட்டு இலண்டன்வாழ் மக்கள் விடுதலைப் பெருமூச்சு விட்டனர்.

அந்தத் திருக்கூட்டத்தில் இன்னும் ஒருவனே எஞ்சியுள்ளான். அவன்தான் மாங்க்சு. இனி அவனைப் பின்பற்றுவோம்.

மாங்க்சு அடைக்கப்பட்டிருந்த அறைக்குள் ப்ரௌன்லோ ஆலிவருடன் நுழைந்தார். அவர்களைத் தொடர்ந்து லாஸ்பெர்ன், கிரிம்விக், ரோசு, மேலீ ஆகிய நால்வரும் வந்தனர். மாங்க்சு தான் எழுதி வைத்திருந்த தாளினை அங்கிருந்தார் அனைவருக்கும் காட்டிய பின்பு, அடியில் தன் கையெழுத்தினையு மிட்டான்.

"நீ இந்தத் தாளில் எழுதியுள்ள செய்திகளை இவர்களுக்கு முன் கூறவேண்டும். இதோ இருக்கிறானே இந்தச் சிறுவன்—ஆலிவர்—இவன் யார் தெரியுமா? இவன் உன் சிற்றன்னையின் மகன். என்னுடைய நண்பர் எட்வின் லீ போர்டுக்கும் ஏக்னசுக்கும் பிறந்தவன்" என்று சொல்லிக்கொண்டே ஆலிவரை யணைத்துக்கொண்டார் ப்ரௌன்லோ. சிறுவனான ஆலிவர், மாங்க்சு தன் உடன் பிறந்தவனென்றறிந்ததும் அவனையே வியப்புடன் உற்று நோக்கினான்.

"எல்லாச் செய்திகளையும் இந்தத் தாளில் வரைந்திருக்கின்றேனே! மீட்டும் அவற்றினை ஈண்டு எதற்காக ஒப்பிக்க வேண்டும்?"

"எல்லாச் செய்திகளையும் சொல்ல வேண்டாம். அன்று யான் உன்னிடம் கூறிய செய்திகள் இவர்கட்கும் தெரியும். அவற்றினை நீக்கிவிட்டுப் பிற செய்திகளை மட்டும் சொல்."

மாங்க்சு சொன்னான்: "என் தந்தை உரோமில் இறப்பதற்கு முதல் நாளே நானும் என் தாயும் அந்நகருக்குச் சென்று அவரைக் கண்டோம். அப்போது அவர் நினைவிழந்திருந்தார். அவரது மேஜையறையினுள் இரண்டு உறைகள் இருந்தன. ஒன்று, அவர் உங்களுக்கெழுதிய கடிதத்தினைக் கொண்டது. மற்றொன்று, உயில் அடங்கியது. அந்த உயிலில், என் தந்தை, ஆலிவருக்கும் அவனது அன்னைக்கும் தமது உடைமைகளில் மிகப்பெரும் பகுதியினை உரிமைப் படுத்தியிருந்தார். அந்த உயிலினைப் படித்த என் அன்னை, ஏமாற்றத்தால் சீற்றங்கொண்டு அதனையும் மற்றக் கடிதத்தையும் எரித்துவிட்டாள். பின்னும் சின்னாட்களில் மன வேதனையால் அவள் இறந்தாள். இறக்குமுன், எப்படியாவது ஆலிவரைக் கண்டு பிடித்து, அவனைக் கொன்றுவிட வேண்டுமென்று என்னிடம் உறுதிமொழி பெற்றுக்கொண்டாள். அன்று முதல் நான் ஆலிவரைக் கைப்பற்றப் பல முயற்சிகளை மேற்கொண்டேன். அவற்றினை நீங்கள் நான்சியின் மூலம் கேள்விப்பட்டிருப்பீர்கள்."

மாங்க்சு மேற்கண்ட செய்திகளை வெளியிட்டதும், ப்ரௌன்லோ ரோசினைப் பார்த்து, "ரோசு! உன் கையினை நீட்டு! அதனைக் குலுக்கி என் மகிழச்சியினை நான் வெளியிட வேண்டும். நீ அறிய வேண்டிய செய்திகள் மேலும் சில உள. நீ அவற்றினைக் கேட்டு மூர்ச்சை போட்டு விழக்கூடாது" என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

"வெளிவரப்போகும் செய்திகள் என்னைப் பற்றியவைகளாயின், அவற்றினை மற்றொரு நாள் கேட்டுக் கொள்கிறேன். ஆலிவரைப் பற்றிய செய்திகளைக் கேட்டு நானடைந்துள்ள அதிர்ச்சியிலிருந்து விடுபட இன்னும் சில நாட்களாகும். என்னால் தாங்க முடியாது" என்று தடுத்தாள் ரோசு.

"உன்னால் தாங்க முடியுமென்று எனக்குத் தெரியும் மாங்க்சு! இந்த நங்கை யாரென்று உனக்குத் தெரியுமா?"

"தெரியும்."

"நான் இதற்கு முன் உன்னைப் பார்த்ததில்லையே" என்றாள் இடையே ரோசு.

"நான் உங்களை அடிக்கடி பார்த்திருக்கிறேன்" என்றான் மாங்க்சு.

"ஏக்னசின் தந்தைக்கு இரு பெண்கள் உண்டென்று சொன்னேனல்லவா? மூத்தவள்தான் ஏக்னசு. அவள், தனது கணவனால் கைவிடப்பட்டு, ஏழைகள் பாதுகாப்பு விடுதியில் ஆலிவரை ஈன்றபின் மாண்டாள். இளையவள் கதி யாதாயிற்று?" என்று கேட்டார் ப்ரௌன்லோ.

"ஏக்னசின் தந்தை எங்கோ ஓரிடத்தில், இன்னாரென்றுகூட அறியவியலாத நிலையில் மாண்டு போனார். அதன்பின் குழந்தையாயிருந்த மற்றொரு பெண்ணை ஓர் ஏழைக் குடியானவர் எடுத்து வளர்த்தார். என் தாய், அப்பெண் குழந்தையினை அவரிடமிருந்து கைப்பற்றப்பெரிதும் முயன்றாள். அம்முயற்சி பயன்பட்டிலது. அந்தப் பெண், அக் குடியானவர் வீட்டில் வாழ்விற்கும் சாவினுக்குமிடையில் போராடிக்கொண்டு வாழ்ந்து வருகையில், அருள் உள்ளம் படைத்த கைம்பெண் ஒருவரது பார்வையிற்படவே, அவர் அப்பெண்ணைத் தம்முடன் அழைத்துச் சென்று வளர்க்கலானார். அதன் பின்னர் அப்

பெண்ணைப் பல ஆண்டுகளாக நான் கண்டிலேன். சில தினங்கட்கு முன்னர்த்தான் மீட்டும் கண்டேன்."

"இப்போது அப்பெண் எங்கே யுள்ளாள்?"

"மேலீ அம்மையா ரருகில் அமர்ந்திருக்கிறுரே— ரோசு அம்மை—அவர்தாம் அப்பெண்."

இதுகாறும் மாங்க்சு கூறிய செய்திகள் தன்னைப் பற்றியவையென்று அறிந்தபோது, ரோசு துன்பமும் இன்பமும், வெறுப்பும் வியப்பும் கலந்த மயக்க வுணர்ச்சி மேலிடப்பட்டவளாய், மேலீ அம்மையார் தோள்மீது சாய்ந்தாள்.

"என்னருமைக் கண்மணி! என் அமுதம்!" என்று மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்து கொண்டே மேலீ அம்மையார் ரோசினைத் தழுவிக் கொண்டார்.

"அம்மையே! யாரென்று அறியத் தகாத என்னை உமது இல்லத்தின் அரசியாக்கினீர்! எனக்குச் சீரளித் தீர்; பேரளித்தீர்; சிறப்பளித்தீர்; வாழ்வளித்தீர். இவ்வுலகில் எனது கண் கண்ட கடவுள் நீரே! எனது அன்னையும், அப்பனும், மாமனும், மாமியும், சுற்ற மும் எல்லாமும் நீரே! உமது அன்பு, நிலத்தினும் பரந்தது; வானினும் உயர்ந்தது. அலை கடலினும் ஆழமானது. நீர் நட்பின் நிலையம்! அருளின் வடிவம்! பெருந்தகைமையின் கொடுமுடி! உமது தடங்கருணை யினை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும், என் இதயம் நன்றிப் பெருக்கால் விம்மி வெடித்துவிடும் போலிருக்கிறது" என்று கண்களில் நீர் துளும்பத் தன் நன்றியறிதலைப் புலப்படுத்தினுள் ரோசு.

"ரோசு! உன் பண்புகளை நான் எங்ஙனம் பாராட்டுவேன்! உன்னுல் என் இல்லம் விளக்க முற்றது; என் இதயம் அமுத மயமானது. கரும் பொன்னையும் செம்பொன்னுக மாற்றும் காந்தம் நீ!

நான் பெற்ற செல்வமனைத்திலும் நலமான செல்வம் நீ! என்னை வாழ்விக்க வந்த வான் பொருள் நீ! ரோசு! உன்னைக் கட்டி யணைக்சத் துடிக்கும் இச் சிறுவனைப் பார். பால் வடியும் அவன் முகத்தினைப் பார்! கபடமற்ற அந்தக் கண்களைப் பார்! ஆலிவர்! ரோசு யாரெனத் தெரிகிறதா?"

"ரோசம்மை என் சிற்றம்மை....இல்லை!....இல்லை! என் அன்னை! என் அன்னை! அன்பு என்பது எப்படி யிருக்கு மென்பதனை யெனக்குக் கற்பித்த எனது ஆசிரியர்....அன்னையே! உமது அருமை மகனை, அருட் கரங்களினால் அணைத்துக் கொள்ளுங்கள். தாயிழந்த எனக்கு நீர்தாம் இனிமேல், தாய்" என்று சொல்லித் தாவிச் சென்று ரோசினை அணைத்துக் கொண்டான் ஆலிவர்.

அப்போது, அனாதையான அவ்விருவரும்—ரோசும் ஆலிவரும்—விட்ட கண்ணீர்த் துளிகள்தாம் எவ்வளவு புனிதமானவை! அன்பின் மேலீட்டால் அவர்கள் வெளியிட்ட அரைகுறைச் சொற்கள்தாம் எவ்வளவு தூய்மையானவை! இருள் மூடிய அவ்விரு வரது வரலாறுகளும் கூறப்பட்டபோது இடையே தந்தை தோன்றினார்; அடுத்த கணத்தில் மறைந் தார். தாய் தோன்றினாள்; மறைந்தாள். உடன் பிறந்தாள் தோன்றினாள்; அவளும் மறைந்தாள். ஆனால், அப்போது மலர்ந்த அன்பு....உலகினை உய் விக்கும் அந்த அன்பு—யாண்டும் மணம் வீசிப் பரவி நிலவியது.

அங்கிருந்தாருள், மாங்க்சு ஒருவனைத் தவிர மற்றையோர் இன்பத்தின் எல்லையினைக் கண்டனர்.

ஆலிவருக்குரிய செல்வத்தினை அவனிடம் ஒப் படைத்துவிட்டு, மாங்க்சு விடுதலை பெற்று மேற்கு நாட்டுக்குச் சென்றான். அவனுடன் வளர்ந்துவிட்ட தீமைகளை அவனாலும் அழிக்கக்கூட வில்லை. போன

விடத்திலும் பல தீங்குகள் புரிந்தான்; சிறைப் பட்டான்' அவன் வாழ்வு, வெறி பிடித்த நாயின் முடிவு போல, சிறைக் கோட்டத்திலேயே முடி வுற்றது. சாக்கடையில் புழுத்த புழு, சாக்கடை யிலேயே உயிர் விட்டது!

மேலீ அம்மையாரின் மகனை ஹாரி என்பவனே ரோசு மணந்துகொண்டு. உண்மையாகவே மேலீ அம்மையாரின் இல்லத்து நந்தாவிளக்காய் விளங் கினாள்.

ஆலிவரைப் ப்ரௌன்லோ பிரபு, தமது வளர்ப்பு மகனாக வைத்துக்கொண்டார்.

ரோசு, தான் வாழ்ந்த சிற்றூர்க் கோயிற் பலி பீடத்தின் முன்புறத்தில், "ஏக்னஸ்" என்ற ஒரே ஒரு சொல்மட்டும் செதுக்கப்பெற்ற பளிங்குக் கல்லொன்றினைப் பதிக்கச் செய்தாள். ஆலிவரும் ரோசும் நாடோறும் அக்கோயிலுக்குச் சென்று அக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள சொல்லின் பொருளை யுன்னி யுன்னி நைவர்; அச்சொல் அவர் களிருவருக்கும், வாழ்வுப் பாதையினைக் காட்டும் கைகாட்டியாயிற்று.

இறைவனின் வடிவங்கள் பலவற்றுள் அருள் பழுத்த வடிவே சிறந்தது. அவன் திருவாய் மலர்ந்த மொழிகளுள் அருள் எனும் மொழியே உயர்ந்தது. உள்ளங்களை யொட்டுவிக்கும் அருளும் அன்புமே பாலைவன வாழ்க்கையினைச் சோலைவனமாக்கும் வற்றாச் சுனைகள் என்னும் உண்மையினைத் தம் முள்ளுணர்வாலும் பிறரது எடுத்துக் காட்டுக் களாலும் உணர்ந்த ரோசும் ஆலிவரும் பிறருக்கு அவற்றினை வழங்கி இறைவழி நின்று யொழுகி வருவாராயினர்.

★

# பயிற்சி வினாக்கள்

I. கீழ்வரும் தலைப்புக்கள் குறித்துத் தனித்தனியே இரண்டு பக்க அளவில் கட்டுரை எழுதிப் பழகுக:

1. ஆலிவர் பிறப்பு
2. பாதுகாப்பு விடுதியில் ஆலிவரின் வாழ்க்கை
3. ஆலிவரின் புத்திட வாழ்வும் வெளியேற்றமும்
4. ஆலிவரும் தளுக்கனும்
5. ஆலிவர் சிறைப்படலும் விடுதலை பெறலும்
6. பிரௌன்லோ வீட்டில் ஆலிவரின் வாழ்க்கை
7. திருடர் கூட்டத்திடையே ஆலிவர்.
8. கொள்ளை முயற்சியில் தோல்வியும் பேகினின் தடுமாற்றமும்
9. மேலீ அம்மையாரும் ஆலிவரும்
10. ரோசினிடம் நான்சி கூறிய ஆலிவர் வரலாறு
11. நான்சியும் பில்ஸ்கைசும்
12. மாங்க்சும் பேகினும்
13. பேகினின் திருவிளையாடல்கள்
14. பிரௌன்லோவிடம் மாங்க்சு கூறிய உண்மைகள்
15. நான்சியின் தியாகம

II. கீழ்க் குறித்துள்ளோரின் குணநலன்கள்பற்றித் தனித்தனியே பதினைந்து வரிகள் எழுதுக:

1. ஆலிவர், 2. நான்சி, 3. பிரௌன்லோ, 4. கிரிமவிக், 5. மேலீ அம்மையார், 6. ரோசு அம்மையார், 7. மாங்க்சு, 8. பேகின், 9. பில்ஸ்கைசு, 10. பம்பில்.

டாக்டர். [illegible],
[illegible] பேராசிரியர்
19, செல்லம்மாள் தெரு,
சென்னை-30

# THIKKATRA SIRUVAN

**10th STANDARD**

By

T. VEERARAGHAVAN, M.A.

★

PAARI NILAYAM

**59, Broadway : : MADRAS-1**

[Price : Re. 1-20

Copyright]

Wrapper Printed at Neo Art Press, Madras-2